05

கலைக்கதிர்

விரோதி - மாதவெளியீடு - ஐப்பசி

305

மகிழ்ச்சியான அறிவிப்பு!

PSG

உற்பத்தி உயர்வால் சிறந்த ரக சாதனங்கள்! குறைந்த விலை!



PSG உற்பத்தி சாதனங்களுக்கு நாட்டில் அதிக கிராக்கி ஏற்பட்டு நாளுக்குநாள் கிராக்கி அதிகரித்து வருகிறது.

நாட்டின் இயந்திர சாதன தேவை உயர்வை உத்தேசித்து நாங்கள் எங்களுடைய தொழிற் சாலையை பன்மடங்கு விஸ்தரித்து நூதன முறைகளில் உற்பத்தியை வெகு வேகமாக அதிகரித்து இருக்கிறோம்.

எங்களுடைய பெருவாரியான உற்பத்தி முறைகளால் செய்யப் படும் PSG இயந்திர சாதனங்கள் குறைந்த விலையில் கிடைப்பதால், உபயோகிப்பவர்கள் பெரிதும் லாபம் அடைகிறார்கள்.

உங்களுடைய தேவையை தீர்மானிக்குமுன் PSG உயர்ரக இயந்திர சாதனங்களின், குறிப்பாக மோட்டார்களின் பம்பிங் செட்டுகளின் விலை விபரங்களைப் பார்த்துக் கொண்டு முடிவு செய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம்.



பி. எஸ். ஜி. இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட்,

பூளைமேடு கோயமுத்தூர் (தென் இந்தியா)

தந்தி "CHARITY" கோயமுத்தூர். டெலிபோன் நெ. { தலைமை ஆபீஸ் ... 58
சேல்ஸ் பிராஞ்ச் கோயமுத்தூர் 118

கோவையில்
தங்க
நகைகளுக்கு
நம்பகமான
இடம்.
KR
கே. ஆர். & சன்ஸ்
போன் 226
பெரியகடைவீதி
தந்தி புல்லியன்
கோயமுத்தூர்

Estd. 1933. Telegram: VENKATESA, Udamalpet.

தி

ஸ்ரீ வெங்கடேசா மில்ஸ் லிமிடெட்,

வெங்கடேசா மில்ஸ் போஸ்ட்,

உடுமலைப்பேட்டை.

★

80நெ. வரை மெல்லிய ரக பருத்தி நூல்கள் நூற்பதில் பிரசித்தி பெற்றது.

★

எங்கள் புதிய தறிகளிலிருந்து தரத்தில் சிறந்த துணி ரகங்கள் வெளிவரத் தயாராய்விட்டன.

★

மானேஜிங் ஏஜண்டுகள்:

ஜி. வி. கோவிந்தசாமி நாயுடு அண்டு கம்பெனி.

சேவையே எமது லக்ஷியம்.

1595

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை 600 008

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 OCT 1949
MADRAS

பயனீர்

பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து
முதலிய எல்லாவிதமான இன்ஷ்யூரன்ஸ்
களும் ஏற்று வருகிறோம்.

செல்வாக்கும், திறமையும் வாய்ந்த ஏஜெண்டுகளும், ஆர்கனைசர்களும்
தாராளமான நிபந்தனைகளின் பேரில் தேவை.

விபரங்களுக்கு:

தலைமை ஆபீசுக்கு எழுதுக.

குமரன் மில்ஸ் லிமிடெட்,

புதுப்பாளையம், கோயமுத்தூர்.

(மேட்டுப்பாளையம் ரோட்)

1935-ல் ஸ்தாபிக்கப்பெற்றது.

மூலதனம் மானேஜ்மெண்டு தொழிலாளர்

ஆக எல்லாம் நம் இந்திய மயம்

முதல்தரமான இந்த மில்லில் தயாராகும்

சுதேசி நூலையே வாங்குங்கள்

20, 40, 60 நெ. நூல் தயாரிக்கப்படுகிறது

குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே

நிர்வாகஸ்தர்களது நோக்கம்.

கோவையில் சிறப்பாக விளங்கும் மில்களின் வரிசையில்

இந்த மில்லும் சேர்ந்திருக்கிறது.

கல்வி, தொழில் அநுபவம் நிறைந்தவர்களால்

நிர்வகிக்கப் பெற்று வருகின்றது.

வருடா வருடம் பங்குதாரர்கள் நல்ல

டிவிடெண்டு பெற்று வருகிறார்கள்.

Managing Agents:—

N. APPUSWAMY NAIDU & CO.,

Managing Director:—

G. V. MUTHUSWAMY, B. Sc.,

கலைக்கதிர்

ஆசிரியர்: திரு. ஜி. ஆர். தாமோதரன்,
[B. Sc., Elec., B. Sc. Mech. (Durham), A. M. I. E. E. (London.)]

மலர் – ௧ விரோதி : ஐப்பசி இதழ் – ௧௧

211710.

பொருளடக்கம்

கடற்பொருள் காணும் கருவி ...	திரு. பி. ஆர். கிருஷ்ணமூர்த்தி நாயுடு ...	2
ராக்கெட்டும் எதிர்காலமும் ...	திரு. ஜி. ஆர். தாமோதரன் ...	5
மார்கோபோலோ ...	திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரனர் ...	9
நிலக்கரியில் நெடுமாடம் ...	திரு. ஈ. த. இராசேசுவரி அம்மையார் ...	14
முடிபு முறைத் திறனய்வு ...	திரு. அ. ச. ஞானசம்பந்தம் ...	19
தமிழர் நாகரிகம் ...	திரு. தி. வை. சொக்கப்பா ...	24
சுழற் காற்று ...	திரு. தா. ஏ. ஞானமூர்த்தி ...	30
உள்ளத்தின் உண்மை ...	திரு. தா. ஏ. சண்முகம் ...	35
உள்ளத்தின் ஒளி ...	டாக்டர் – மு. வ. ...	41
மனிதனும் சூழ்நிலையும் ...	திரு. தா. ஏ. சண்முகம் ...	44
இயற்கை அடியார் ...	திரு. மு. அறம்வளர்த்தான் ...	49
நாணய மதிப்புக் குறைவு ...	திரு. பி. இராமச்சந்திரன் ...	53
சோற்றுக் கூடைக்காரி ...	திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் ...	59
குடியாட்சியின் தத்துவம் ...	திரு. எஸ். வி. சிட்டிபாபு ...	65

விலை 8 அணு

'கலைக்கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை கதை முதலியவற்றின்
கருத்துக்கள் அவற்றை எழுதிய நேயர்களுக்கே உரியன.

கடற்பொருள் காணும் கருவி

திரு. பி. ஆர். கிருஷ்ணமூர்த்தி நாயுடு, M. A., L. T.

> மின்னுகிற மீனை நம் அட்டையில் பார்த்தீர்கள் அல்லவா? அந்தப் படத்தின் கருத்தை விளக்குகிறது இந்தக் கட்டுரை.

கடல் பலவிதச் செல்வங்களை யுடையது. இவற்றுள் மீன் என்றும் வற்றாவளமாகும். மக்களுக்கு உணவாக அமையும் இம் மீன்களை மிகுதியாகப் பிடித்தால் தற்காலத்து உணவுப்பஞ்சம் ஒருவாறு குறையலாம்.

மீன்களை அதிகமாகப் பிடிப்பதற்கு முதலில் கடலுள் எங்கெங்கே மீன்கள் மிகுதியாக வாழ்கின்றன என்பதை அறியவேண்டும். இதற்கேற்ற சாதனம் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதாவது பெண்டிக்ஸ் ஆழம் அளக்கும் கருவி (Bendix Depth Recorder) என்பது. இதனால்எக்காலத்திலும்-பகலிலும் காரிருளிலும் புயற் காற்றிலும் பனியிலும் - கடலுள் மீன்கள் இருக்கும் இடத்தைத் தவறாது தெரிந்து கொள்ளலாம். மேலும் இக்கருவி கடலுள் குறிப்பிட்ட இடத்தில் எவ்வளவு மீன்கள் இருக்கின்றன என்பதையும், அவைகள் எவ்வளவு வேகமாக எத்திசை நோக்கிச் செல்கின்றன என்பதையும், அவைகள் எவ்வெவ் வகையான மீன்கள் என்பதையும் உணர்த்துகிறது.

பெண்டிக்ஸ் ஆழம் அளக்கும் கருவி (Bendix DR) இரண்டாவது உலகப் போரின்போது தோன்றியது. இரவில் எதிரிகளின் கடலோரமாகச் சப்தமில்லாமல் சென்று அவர்கள் கடலுள் இட்டிருக்கும் கண்ணிகளைக் (Mines) கண்டுபிடிக்கவும், அவர்களின் துறைமுகங்களின் அமைப்பினை அறிந்து கொள்வதற்கும் இக் கருவி பெரிதும் உதவியது. இக்கருவி கண்டுபிடித்தவைகளை ஒளி மூலமாகவும் ஓசை மூலமாகவும் அறிவித்தது. போர்க் காலங்களில் எதிரிகள் அறியாவண்ணம் இத்தகைய முறைகளைக் கையாளவேண்டும். எனவே ஒளியையும் ஓசையையும் தவிர்த்துக் காகிதத்தில் குறிக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. இக் கருவியின் நுட்பம் ரகசியமாகவே இருந்தது. 1944-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் உணவைப் பெருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டதால் கப்பல் துறையினர் (U. S. Navy) பெண்டிக்ஸ் ஆழம் அளக்கும் கருவியமைத்த ஒரு நீர்மூழ்கிக் கப்பலை (submarine) மீன் பிடிப்பதற்கு உதவினார்கள். கடலுள் அதற்கு முன்பு மீனில்லாத இடம் என்று கருதப்பட்ட இடங்களி லெல்லாம்

அந் நீர்மூழ்கிக் கப்பல் சென்று மிகுதியான மீன்களைப் பிடிக்க உதவியது. மீன் பிடிக்கும் கப்பலிலே முதன் முதல் 1946-ஆண்டில்தான் இக் கருவி அமைக்கப்பட்டது.

இம் மீன் கண்டுபிடிக்கும் கருவி (fish-finder) ஒலி அலைகளால் இயங்குகின்றது. ஒலி அலைகள் ஐந்து செகண்டுகளில் ஒரு மைல் வீதம் செல்லுகின்றன. அவைகள் நீருக்குள் செல்லும்போது நான்கு மடங்கு அதிக வேகமாகச் செல்கின்றன. இந்த வேகத்தைக் கொண்டு நீரின் ஆழத்தை அளக்க முயன்றனர் அறிவியல் அறிஞர்கள்.

ஆர். ஏ. பெஸண்டன் என்ற அமெரிக்கப் பேராசிரியர் நீருக்குள் அதிக வலிமையோடு கூடிய ஒலியை உண்டாக்கும் கருவியை இயற்றினர். இதோடு நீருள் ஒலி செல்லும் காலத்தைக் கொண்டு (travel time of sound) தூர அளவைக் கண்டுபிடிக்கும் (measurement of distance) கருவியையும் அமைத்தார். ஆனால் இக்கருவியால் செலுத்தப் பெற்ற ஒலிகளுக்கும் கடல் அலையொலி முதலியவற்றிற்கும் தெளிவாக வேறுபாடு காண முடியவில்லை. 1918-ஆம் ஆண்டு அமெரிக்க கப்பல் துறையினர் (U.S. Navy) முதன் முதலாக எதிரொலி ஒலிக்கும் கருவி (echo sounder) ஒன்றைத் தம் கப்பலிலே அமைத்தனர். 1925-ஆம் ஆண்டுக்குள் இக் கருவியை அந்நாட்டு வாணிபக் கப்பல்கள் பயன்படுத்த லாயின. இக் கருவி கடலுக்குள் மறைந்து கிடக்கும் மணல்மேடு போன்ற பல தடைகளைக் கண்டறிய உதவியது. இன்று இக்கருவி உலக முழுதும் கப்பல் துறையினர்க்குப் பெரிதும் பயன்பட்டு வருகிறது.

இனி, இக்கருவி எப்படி இயங்குகிறது என்பதைக் காண்போம். கப்பலின் அடியில் அமைக்கப்பட்ட ஒரு சாதனத்தினின்றும் (device) ஒலிகள் தொடர்ந்து வெளிப்படுகின்றன. இங்ஙனம் வெளிப்படும் ஒலிகள் கடலுள் கோண வடிவில் (cone-like) போகப் போக விரிந்து செல்கிறது. செல்லும் போது கடினப் பொருள்கள் எதிர்ப் படுமானல் அவற்றின்மீது ஒலிகள் மோதுகின்றன. மோதியதும் எதிரொலிகள் கிளம்புகின்றன. இங்ஙனம் எழும் எதிரொலிகளை எதிரொலிக் கருவியானது (echo sounder) கவர்ந்து கொள்கிறது. ஒலி வெளிப்பட்டதிலிருந்து எதிரொலி பெறும் வரை எவ்வளவு நேரமானதோ அந்நேரத்தைக் கொண்டு ஒலி சென்ற ஆழத்தின் தூரத்தைக் கணக்கிட்டுக் குறித்து விடுகின்றது. மேலும் கடலுக்குள் ஒலி மோதிய பொருளின் அளவையும் வடிவையும் கனத்தையும் அக் கருவி குறிக்கிறது. சில கருவிகள் இவ்விவரங்களுள் சிலவற்றைப் பளிச்சென்று மின்னும் ஒளிகளாலும் (flashing lights) இமு மென் ஓசையாலும் (buzzes) மாலுமிக்கு அறிவிக்கின்றன. ஆனல், இக் கருவிகளில் சிறந்ததாகிய பென்டிக்ஸ் ஆழமளக்கும் கருவி (Bendix DR) இவ்விவரங்களைப் பேனவைக்கொண்டு மையினலே எழுதி விடுகிறது. இக்கருவிகளைக் கொண்டு முதன் முதலில் அறிஞர்கள் சோதனை நிகழ்த்தியபொழுது கடலுக்குள் தடைசெய்யும் பொருள்கள் ஒன்றுமில்லாத இடத்திலும் எதிரொலி கிளம்பியதைக் கண்டார்கள். அவை அசையும் பொருள்கள் என்பதையும் உணர்ந்தார்கள். அப்பொருள்கள் மீன்களே யன்றி வேறில்லை என்பதை முடிவில் கண்டறிந்தார்கள்.

இக் கருவிகளைப் பயன்படுத்திய மாலுமிகளுக்கு மீன்கள் மிகவும்

தொந்தரவு அளித்துவந்தன. முடிவில் நார்வே நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஆஸ்கார் சன்ட் (Dr. Oscar Sund) என்பவர் இவ்வெதிரொலிக் கருவியைக் கொண்டு கடலுள் மீன்கள் நிறைந்து கிடக்கும் இடங்களைத் தெரிந்து கொள்ளலாம் என்பதை உணர்ந்தார். மீன்கள் நிறைந்த இடத்தைத் தெரிந்துகொண்டால் அங்கே வலை வீசி வேண்டிய அளவு மீன்களைப் பிடித்து உலகப் பசியை ஒருவாறு தணிக்கலாம்.

1935-ம் ஆண்டு இக் கருவியமைத்த கப்பலொன்றில் டாக்டர் சன்ட் அவர்களின் உதவியாளரான டாக்டர் குண்ணு ரோலெப்சன் (Dr Gunna Rollefsen) என்பவர் மீன் பிடிக்கும் கரையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது வழியில் ஓரிடத்தில் எதிரொலிகள் கிளம்பின. 'இங்கு 400 அல்லது 500 அடி ஆழத்திலே மீன்கள் இருக்கின்றன என்று நினைக்கிறேன்' என்றார் ரோலெப்ஸன். உடனே 450 அடி ஆழத்தில் தூண்டில் இடப்பட்டது. அத் தூண்டிலில் ஒரு சுறா மீன் அகப்பட்டது.

பெண்டிக்ஸ் ஆழம் அளக்கும் கருவி எவ்வாறு அறிவிக்கிறதென்பதை இனிக் காண்போம். கப்பலின் முன்னிடத்தில் ரேடியோ அளவில் ஒரு பெட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அப் பெட்டியின் முன்புறத்தில் காகிதச் சுருள் நகர்ந்து செல்கிறது. அக் காகிதத்தின்மீது குறிக்கப்பெறும் செங்குத்தான (Vertical lines) கோடுகள் கப்பலின் முன்னும் கீழும் இருக்கின்ற கடலின் உள் பரப்பினை உணர்த்துகின்றன; நேர் கோடுகள் (horizontal lines) கடலாழத்தைக் குறிக்கின்றன. கப்பல் செல்லும் பொழுது அக் காகிதத்தில் இரண்டு நேர்கோடுகள் (horizontal lines) ஒன்றின்கீழ் ஒன்றாய்ப் பேனாக்களால் வரையப்படுகின்றன. மேற்கோடு கடலின் மேற்பரப்பினையும் கீழ்க்கோடு கடலின் அடிப்பரப்பையும் உணர்த்துவனவாகும். இவ்விரண்டு கோடுகளுக்கும் இடையே வினோதமான சிறு கோடுகள் — சில சமயங்களில் தனிக் கோடும், ஆனால் பெரும்பாலும் தொகுதியான கோடுகளும் — வரையப்படுகின்றன. இக் கோடுகள்தான் கடலுள் இருக்கும் மீன் தொகுதியைக் குறிக்கின்றன.

பெண்டிக்ஸ் ஆழமளக்கும் கருவியின் விலை 4000 ரூபாயிலிருந்து 11000 ரூ. வரையில் இருக்கின்றது. இவ் விலை மிகுதியே எனினும் இது மீனாகிய கடல் வளத்தை மிகுதியாகப் பெற்றுத் தற்காலத்தில் உலகத்தையே அச்சுறுத்திவரும் உணவுப் பஞ்சத்தை ஒருவாறு தவிர்க்கத் துணை செய்யும் அல்லவா?

● 'ராக்கெட்' விமானங்களை ஆக்கத்திற்குப் பயன்படுத்தினால் பத்தாண்டுகளுக்குள் உலகம் எவ்வெவ்வித நன்மைகள் பெறும் என்பதை இக் கட்டுரை தெளிவு படுத்துகின்றது.

ராக்கெட்டும் எதிர்காலமும்

ஜி. ஆர். தாமோதரன், B. Sc. (Tech.)

அறிவியல் (Science) உலகுக்குப் பல புதுமைகளைத் தந்திருக்கின்றது. இரண்டாவது உலகப் போரிலே எத்தனை பயங்கரமான போர்க்கருவிகள் தோன்றின! அவற்றுள் 'ராக்கெட்' என்பதும் ஒன்று. போரிலே அழிவைச் செய்தற்கெனத் தோன்றிய 'ராக்கெட்' விரைவிலே அமைதி காலத்தில் உலக ஆக்கத்திற்குப் பெரிதும் உதவுவதாகலாம். உலக ஆக்கத்திற்கு ராக்கெட்'டை எவ்வெவ் வகையில் பயன்படுத்தலாம் என்பதைப்பற்றிய அரிய ஆராய்ச்சிகள் அமெரிக்காவிலுள்ள பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்திலும் (Princeton University) காலிபோர்னியா தொழிற் கல்வி நிலையத் (California Institute of Technology) திலும் விரைவில் தொடங்கும்.

வட அமெரிக்கா கண்டத்தை இப்போது 'ஜெட்' விமானம் நான்கு மணி நேரத்திற்குள் கடந்து விடுகிறதாம். இது நமக்கு எவ்வளவு வியப்பைத் தருகிறது! ஆனால், வருங்காலத்தில் 'ராக்கெட்'டினுடைய பயன் அதிகமாகும் போது, 'ஜெட்' விமானத்தின் செயல் மிகச் சிறுமையாகவே தோன்றும். ஒரு மணி நேரத்தில் ஆயிரக்கணக்கான மைல்கள் விண்ணினூடே பறக்க வல்ல 'ராக்கெட்' விமானங்கள் தோன்றலாம். ஜெர்மானியரின் V–2 (ராக்கட்) அமெரிக்கா கண்டத்தை 45-நிமிஷங்களிலே கடக்கும் சக்தியுடையது. இதற்குப் பிரயாணிகளைக் கொண்டு செல்வதற்கேற்ற அமைப்புக்களை அமைத்தால் இதே வேகத்தில் மக்களும் பிரயாணம் செய்யலாம் அல்லவா? விண்ணில் நாம் செல்ல விரும்பும் இடங்களுக்கெல்லாம் எளிதில் செல்லவும் முடியும்!

இவைகள் அனைத்தும் இன்னும் கைகண்ட பலனாக ஆகவில்லை. ஆனால் தற்போது 'ராக்கெட்'டை யொட்டி நடக்கும் ஆராய்ச்சி வேகத்தைக் கவனிக்கும்போது, இன்னும் பத்தாண்டுகளுக்குள் நம்முடைய கனவெல்லாம் நனவாகும் என்பது உறுதியாகிறது. 'ராக்கட்'டின் உதவியால் ஒரு சில மணி நேரங்களில் உலகத்தையே சுற்றிவரும் நாள் மிகச் சேய்மையில் இல்லை.

இதைப் பற்றிச் சிலர் ஐயுறலாம். ஆனால், இற்றைக்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னைய உலகத்தை நோக்குமின். இக் குறுகிய காலத்திற்குள் எத்துணை அறிவியல் புதுமைகள் தோன்றியிருக்கின்றன! பத்தாண்டுகட்குமுன் 'ஜெட்' இயந்திரத்தைப் பற்றி அறிஞர்கள் சிந்தித்தபோது, உலகம் அது வெறுங் கனவென்றும், நனவாக முடியாது என்றும் நம்பியது. ஆனால் இக்காலத்தில் பல விமானங்களுள் 'ஜெட்' விமானமும் ஒன்றாக விளங்கவில்லையா?

'ராக்கெட்' விமானமாவது யாது? இது எவ்வகையில் 'ஜெட்' விமானத்தினின்றும் வேறுபட்டது?

இவ் விரண்டும் ஒரே வகையைச் சேர்ந்தவை என்று கூறலாம். ஏனென்றால் இவற்றை இயக்கும் அமைப்பு முறை இரண்டிற்கும் ஒன்றே. இவ் விமானங்களின் பின்புறம் உஷ்ணமான வாயுக்களைப் பீறிடச் செய்வதால் இவை முன்புறம் நகர்கின்றன. ஆனால் இவ்விரண்டிற்கும் முக்கியமானதொரு வேறுபாடு உண்டு. 'ஜெட்' இயந்திரம் தன்னுள் உள்ள எரிபொருளை (fuel) எரிப்பதற்குத் தேவையான காற்றை சுற்றுப்புறத்திலிருந்து எடுத்துக் கொள்கிறது. எனவே 'ஜெட்' விமானங்கள் காற்றில்லாத இடங்களில் இயங்கா. ஆனால் 'ராக்கெட்' விமானத்திற்கு வெளிக் காற்றே வேண்டியதில்லை. பிராண வாயுவைத் தரும் இரசாயனப் பொருள்கள் இதனுள்ளேயே அடங்கியிருக்கின்றன. எனவே, இவ்விமானம், விண்ணில் காற்றில்லாத இடங்களிலும் இயங்கும். மேலும், இது மிகவும் இலேசானது. இதன்கண் நுட்பமான இயந்திர பாகங்கள் ஒன்றுமில்லை. எனவே தொந்தரவுகளும் இல்லை.

எதிர்காலத்தில் 'ராக்கெட்' விமானங்கள் உலகுக்குப் பலவகையிலும் பேருதவி புரியும் என்று நம்பலாம். வானத்தை உள்ளபடி அளந்தறிய இவ்விமானம் பெரிதும் பயன்படலாம். இப்போது, உலகின் வெப்ப தட்ப நிலைகளை வானக் குமிழிகள் (Baloons) துணையால் முன்னதாகவே அறிந்து வருகிறார்கள். வெப்பதட்ப நிலைகளை அளக்கும் கருவுகளை வானக்குமிழியில் வைத்து விண்ணின்கண் அதைச் செலுத்துகிறார்கள். இவ்வகையில் எதிர்கால வெப்பதட்ப நிலைகள் நன்கு அறியப் படுகின்றனவெனினும் வானக்குமிழிகளை எப்போதும் நம்புதற்கில்லை. இவை விண்ணின்கண் பறந்து செல்வதற்குத் தகுதியான இயற்கைநிலை (Weather) வேண்டும். இல்லையேல் அவற்றால் பெரும்பயன் அடையமுடியாது. மேலும் வானக் குமிழி எந்த இடத்திலிருந்து புறப்படுகின்றதோ அதே இடத்தில் திரும்பி வரும் என்ற நிச்சயம் இல்லை. ஆனால் 'ராக்கெட்' விமானங்களோ எத்தகைய இயற்கை நிலையையும் ஊடுருவிக் கடந்து செல்லும் சக்தி வாய்ந்தது. அவ்விமானத்தைக் கட்டுப்படுத்துதற்கேற்ற அமைப்புக்களால் அது புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வரும்படியும் செய்யலாம். இதனால் அதன்கண் அமைத்த வெப்பதட்ப நிலைகளை அளக்கும் கருவிகளையும் அவை அளந்த முடிபுகளையும் திண்ணமாகப் பெறலாம் அல்லவா?

இன்னும் 'ராக்கெட்' விமானங்கள் விண்ணில் 20 மைலிலிருந்து 200 மைல் உயரம் வரை சென்று நிலத்தின் ஒருபகுதியைப் படம் எடுக்கவும் பாலைவனங்களிலும் மலைநாடுகளிலும் பனிப் பிரதேசங்களிலும் காணாமற் மறைந்து போன ஆகாய விமானம் போன்ற பெரிய பொருள்களைத் தேடிக் கண்டு பிடிக்கவும் பயன் பெறும் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். இப்போது 'ராக்கெட்' மூலமாக 60 மைலிலிருந்து 80 மைல் உயரத்திலிருந்து இந்நிலப் பரப்பின் படம் எடுக்கப்படுகிறது. படம் எடுப்பதற்காக மேலே செலுத்

தப்படும் 'ராக்கெட்' 80 மைல் உயரம் வரைச் சென்று பிறகு கீழேவிழுகிறது. அது விழும் அதிர்ச்சியால் படம் எடுக்கும் கருவிகளும் பிறவும் உடைந்து துகளாகப் போகின்றன. ஆனால் எடுக்கப்பட்ட படம் மட்டும் சிதையாமல் இருக்கிறது. இப்போது நடந்துவரும் ஆராய்ச்சியின் பயனால் விரைவில் 'ராக்கெட்' விமானங்கள் இன்னும் மிக்க உயரத்தில் சென்று படம் எடுக்கவும், படம் எடுக்கும் கருவிகளும் பிறவும் சிதையாமல் இனிதே கீழே இறங்கவும் அவற்றைத் திருத்தி அமைக்கலாம்.

வருங்காலத்தில் "ராக்கெட்" விமானங்கள் வானநூல் ஆராய்ச்சிக்கு மிகவும் பயன்படுவதாகும். தற்போது வானநூல் புலவர்கள் விண்மீன்களேயும் கோள்களேயும் (Planets) நிலத்திலிருந்தே கூர்ந்து கவனித்து ஆராய வேண்டியிருக்கிறது. நிலத்திலிருந்து ஏறக்குறைய 200 மைல் உயரம் வரை காற்று மண்டலம் முதலியவை (Earth atmosphere) நிலத்தைப் போர்த்தி இருப்பதால் விண்மீன்களும் கோள்களும் நிலத்திலிருந்து பார்ப்பதற்குத் தெளிவாகத் தெரிவதில்லே. பகற்காலத்தில் சூரிய ஒளி சிதறுண்டிருப்பதால் நிலமட்டத்திலிருக்கும் நம் கண்ணுக்கு விண் மீன்கள் புலனுவதில்லே. 200 மைல் உயரத்திற்கு அப்பால் காற்று மண்டலம் முதலியவை இல்லே. அங்கிருந்து விண்மீன்களேப் பார்த்தால் இரவிலும் பகலிலும் அவைகள் மிகவும் தெளிவாகத்தெரியும். எனவே படக் கருவிகளே அமைத்த 'ராக்கெட்' விமானங்களே 200 மைலில் இருந்து 300 மைல் உயரம் வரை செலுத்தி விண்மீன்களேப் படம் எடுத்து அவற்றை ஆராய்ந்தால் இவ்வண்டத்தைப் பற்றிய உண்மைகளே இன்னும் அதிகமாக அறிந்துகொள்ளலாம் அல்லவா? இதற்கேற்ற 'ராக்கெட்' விமானங்கள் அமைப்பது இயலாத செயலன்று. விரைவிலே இத்தகைய விமானங்கள் தோன்றலாம்.

இன்னும் 'ராக்கெட்' விமானங்கள் உதவியால் உலகில் பல அரிய செயல்களே விரைவில் செய்து முடிக்கலாம். உதாரணமாக தந்திசெல்லும் வேகத்தைக் காட்டிலும் கடிதப்போக்குவரத்துக்களே நெடுந்தூரம் ஆளில்லா 'ராக்கெட்' விமானங்கள் மூலம் நிகழ்த்தலாம். இவ் விமானங்களேக் கட்டுப்படுத்தும் சாதனங்கள் இதற்கு மிகவும் இன்றியமையாதவை. ஏனென்றால் இவ்விமானங்கள் எங்கேயாவது மோதிக்கொள்ளாமலும் அவை இறங்க வேண்டிய இடத்தில் இறங்கவும் அவற்றைக் கட்டுப்படுத்தவும் சாதனங்கள் தேவை. இச் சாதனங்களேக் கண்டு பிடித்துவிட்டால் 'ராக்கெட்' விமானங்களே 500 மைலிலிருந்து 1000 மைல் உயரத்தில் செலுத்தித் தந்திக்கு முன்பு தபால்களே மிக்க தூர தேசங்களுக்குச் சேரும்படியாகச் செய்யலாம். இத்தகைய விமானம் 'நியூயார்க்' என்ற ஊரிலிருந்து 'பிட்ச்பர்க்' என்ற ஊருக்குச் செல்வதற்கு ஏழு நிமிஷங்களுக்கு மேல் ஆகாது (நியூயார்க்குக்கும் பிட்ஸ்பர்க்குக்கும் 300 மைல்).

'ராக்கெட்' விமானங்கள் பிரயாணிகளே மிகத்தொலேவிலுள்ள இடங்களுக்கு ஏற்றிச் செல்வதற்குப் பயன்படலாம் என்பது இதையொட்டி நடைபெறும் ஆராயச்சிகளிலிருந்து தெளிவாகிறது. இப்போது 'ஜெட்' இயந்திரங்கள் அமைத்த ஆகாய விமானங்கள் ஒலியின் வேகத்தை விடச் சிறிது குறைவான வேகத்தில் செல்கின்ற விமானங்களே மணிக்கு 750 மைலிருந்து 1,500 மைல் வேகத்தில் செலுத்தக்கூடிய இயந்திரங்களும் தற்போது செய்யப்பட்டுள்ளன. ஆனால் இவ்வளவு ஆற்றலுடைய இயந்திரத்திற் கேற்ற விமானங்களே எப்படி அமைப்பது என்பதுதான் ஒருவருக்கும் தெரியவில்லே. இவ்வளவு வேகத்தில் செல்லும் விமானங்களே நிலத்திலிருந்து மேலேற்றவும்

வேண்டுமிடங்களில் இறக்கவும் ஏற்ற இயந்திரசாதனங்கள் மிகவும் இன்றியமையாதனவாம். இவற்றை அமைக்கும் முறை இன்னும் அறிஞர்களுக்குப் புரியவில்லை எனினும், மக்கள் நெடுந்தூரப் பிரயாணத்திற்கு "ராக்கெட்" விமானங்கள் பயன்படும் நாள் விரைவில் கிட்டும் என்பது அறிஞர்கள் நம்பிக்கை. 'ராக்கெட்' விமானத்தில் பிரயாணம் செய்தால் செலவு அதிகமாகுமோ என்று எண்ணுவதற்கில்லை. ஏனென்றால் மணிக்கு 2500-மைல் வேகத்தில் போகும் 'ராக்கெட்' விமானத்திற்கு 300-மைல் வேகத்தில் செல்லும் சாதாரண விமானத்திற்கு எவ்வளவு எரிபொருள் (fuel) செலவாகுமோ அவ்வளவே செலவாகும் என்று சமீபத்தில் கணக்கிட்டிருக்கிறார்கள். இவ்வளவு வேகத்தில் செல்லும் 'ராக்கெட்' விமானத்தைச் சிறிது தூரப் பிரயாணங்களுக்குப் பயன்படுத்துவது கூடாது. அப்படிப் பயன்படுத்துவதால் பெறும் நன்மை ஒன்றும் இல்லை. ஆனால் அட்லாண்டிக் அல்லது பசிபிக் போன்ற கடல்களையும், ஆசியா முதலிய பெருங் கண்டங்களையும் கடப்பதற்கு ஆயிரக் கணக்கான மைல் வேகத்தில் செல்லும் 'ராக்கெட்' விமானங்களைப் பயன்படுத்தினால், நன்மை பெரிதல்லவா?

உலகம் இவ் வேகத்தை ஏற்றுக் கொள்ளுமா என்பதை ஆலோசிக்க வேண்டும். சரித்திரத்தை ஆராய்ந்தால், உலகில் எப்பொழுது எப்பொழுது முன்னினும் வேகமுடைய போக்குவரத்து சாதனங்கள் தோன்றினவோ அப்பொழுதெல்லாம் மக்கள் அவ்வற்றைப் பயன்படுத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது விளங்கும். எனவே, 'ராக்கெட்' வேகத்தையும் உலகம் ஏற்கும் என்பதில் ஐயமில்லை.

'ராக்கெட்'டின் வேகத்தை மணிக்கு 35,000 மைல்களாக அதிகப்படுத்தினால் இவ்வுலகத்தையே கடந்து வெளியில் (Space) உலாவலாம். இன்னும் வேகத்தை அதிகப்படுத்தினால் (ஒருவேளை அணு சக்தியின் துணையால் வேகத்தை மிகுதிப்படுத்தக் கூடும்) பூமிக்கு அருகிலுள்ள கோள்களையும் (Planets) செவ்வாய், வெள்ளி மண்டலங்களையும் (Mars and Venus) நாம் போய்ப் பார்க்கவும் முடியும்!

இக் கனவெல்லாம் நனவாகுமா? இப்போது உலகம் செல்லும் வேகத்தைப் பார்த்தால் நாம் எதிர்பார்ப்பதை விட இன்னும் விரைவிலேயே இவை உண்மையாகலாம் என்று நினைப்பதற்கு இடமுண்டாகிறது.

"பொறுக்க முடியவில்லை"

"தாய்மொழிகள் நசுக்கப்படுவது காண என்னால் பொறுத்தல் முடியவில்லை. தாய்தந்தையர் தம் குழந்தைகட்கும், நாயகன்மார் தம் நாயகிமார்க்கும் கடிதங்கள் தாய்மொழியில் எழுதாது ஆங்கிலத்தில் எழுத எண்ணுவது குறித்து என் மனம் பொறுக்கவில்லை".

—காந்தியடிகள்

மார்கோபோலோ தமிழ் நாட்டைப் பற்றி எழுதி வைத்த குறிப்புக்களை இனிய எளிய நடையில் மொழிபெயர்த்துத் தருகின்றார் நமது பன்மொழிப் புலவர் மீனாட்சிசுந்தரனார். இக்குறிப்புக்கள் 13-ஆம் நூற்றாண்டின் தமிழக வாழ்க்கையினைத் தெளிவு படுத்துகின்றன.

மார்கோ போலோவும் மாபரும்

முதற் பகுதி

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், M.A., B.L., M.O.L.,

(இந்தியாவைச் செல்வப் புதையல் என மேனாட்டார் கருதி வந்தனர். அங்கிருந்து பலர் இங்கு வந்து இந்த நாட்டினைப்பற்றிப் பல குறிப்புகள் எழுதிவைத்துள்ளனர். அலெக்சாண்டருக்குப் பின் இந்த நாட்டினோடு மேனாட்டின் தொடர்பு வளர்ந்தது. ரோமப் பேரரசு சாய்ந்ததும் மேனாட்டில் இருள் மூடியது. இந்திய வெறி கொண்டு கொலம்பசும் வாஸ்கோட காமாவும் புறப்படுவதற்கு முன் கீழ்நாடுகளைப்பற்றிய பேரவாவினை மேனாட்டில் கிண்டியவர் மார்கோ போலோ என்பவராம். இவர் இத்தாலியில் வெனிஸ் மாநகரத்தில் 1254-ல் பிறந்தார். இவருடைய தந்தையும் சிறிய தந்தையும் உயர்குடியிற் பிறந்த வாணிபர்கள்; 1260-ல் சீனுவுக்குப் புறப்பட்டுச் சென்றனர். இரண்டாவது முறை இவர்கள் 1271-ல் புறப்பட்டபோது மார்கோ போலோவையும் உடன் கொண்டு சென்றனர். 24 ஆண்டுகள் சுற்றிய பின் 1295-ல் ஊர் திரும்பினர். ஜெனோவாவுக்கும் வெனிசுக்கும் நடந்த போரில் மார்கோ போலோ சிறைப்பட்டார். ஆனால் வெற்றி வெறியால் தலைமயங்காமல் ஒரு நன்மை செய்தனர் ஜெனோவா நகரத்தினர். மார்கோ போலோ கூறும் கதைகளை எல்லாம் ருஸ்தி செல்லோ என்பவரைக் கொண்டு எழுதுவித்தனர். நோபல் பரிசு பெற்ற பெர்ல்பக் என்ற அம்மையார் இவரை முந்த முதல் தோன்றிய உலகக்குடிமகன் (First World Citizen) என்பர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனக் கொண்டுமேனாட்டில் இருந்துபுறப்பட்டுக் கீழ் நாடெல்லாம் சுற்றி வந்த ஒரு பரந்த உள்ளம்; கண்டதனை எல்லாம் குழந்தை மனத்தோடு கண்டு களித்த ஊக்கம்; இதனை எல்லோருக்கும் சொல்ல வேண்டும் எனப் பொங்கி எழும் அன்பு — இவையே இவர் நூலை இன்னும் வாழ்விக்கின்றன. சீனப் பேரரசர் குப்லாகானைப் பற்றி எழுதியன புராணம்போல் ஆய்விட்டன. இவர் நம் தமிழ்நாட்டிற்கும் வந்தனர். இவர் கண்டவற்றை ஏறக்குறைய எழுநூறு

ஆண்டுகளுக்குப் பின் நாம் இன்று படிப்பது இன்பந்தருவ தொன்றும். சோழப் பேரரசு வீழத் தொடங்கியபோது கட்டற்றுக் கிடந்த தமிழ்நாட்டினையே அவர் கண்டார். தமிழ்நாட்டினை "மாபர்" என்று அரேபியக் கப்பலோட்டிகள் வழங்கி வந்தனர். சுந்தரபாண்டியன் சீரும் சிறப்பும் பெற்ற காலம் அது. தமிழ்நாட்டினைப் பற்றி மார்கோ போலோ எழுதியுள்ள தனைக் கீழே மொழிபெயர்த்துத் தருகின்றோம்.)

இலங்கைத் தீவினை விட்டு மேற்காக 60 மைல் கப்பலில் போனதும் மாபர் (தமிழ் நாடு) என்ற பெரிய நாட்டினை அடைவீர். இது ஒரு தீவு அன்று; பெரிய இந்திய கண்டத்தின் ஒரு பகுதியே ஆம். உலகில் செல்வத்திலும் மாட்சிமையிலும் இது தலைசிறந்த நாடாகும். இதனை நான்கு அரசர்கள் ஆண்டு வருகின்றார்கள். இவர்களில் தலையாயவன் பெயர் "செந்தர் பண்டி" (சுந்தர பாண்டியன்) என்பதாம். இவனுடைய நாட்டில் மாபர்க்கும் ஜைலன் (சிலோன் - இலங்கை) தீவுக்கும் இடையே உள்ள வளைகுடாவிலேதான் முத்துக் குளிக்கும் துறை உண்டு. அங்கே தண்ணீர் 12—15 ஆள் ஆழத்திற்கு மேல் இராது. சில இடங்களில் 2 ஆள் ஆழத்திற்கு மேல் இல்லை. முத்துக் குளிக்கும் தொழில் கீழே கண்டபடி நடைபெறுகிறது.

ஒரு சில வணிகர்கள் தனித்தனிக் கூட்டாக - வர்த்தகக் குழுக்களாகச் சேர்வார்கள். இவர்கள் பல பல அளவில் உள்ள பல கப்பல்களையும் படகுகளையும் வேலைக்கு வைத்துக் கொள்வார்கள். இவற்றில் தரைப் பாரஞ் சாம்பிக் கயிறுகளும் உண்டு. இதனால், நாங்கூரம் பாய்ச்சி விட்டுக் கப்பலில் எளிதில் ஏறிக் கடலில் போகலாம். இந்தக் கப்பல்கள் முத்துள்ள சங்குகளைக் குளித்து எடுக்கும் கலையில் வல்லவர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டு செல்லும். இந்தச் சங்குகளை வலைப்பை வழியாக மேலே கொண்டு வருவர். இந்தப் பைகள் முத்துக் குளிப்போர் உடம்பில் கட்டி இருக்கும். இவர்கள் தண்ணீருக்குள் மூச்சுவிட முடியாதபோது நீர் மட்டத்தின் மேலே வருவர். சில நேரம் கழித்து மறுபடியும் குளிப்பர். இப்படிப் பல முறை நிகழும். இவர்கள் இந்த வேலையில் நாள் முழுவதும் விடாப் பிடியாக ஈடுபடுவார்கள். எல்லா நாடுகளுக்கும் வேண்டிய அளவு சங்குகளை இவர்கள் ஒரு பருவத்திற்குள்ளேயே தங்கள் முயற்சியால் சேர்த்து விடுவார்கள். இந்த வளைகுடாவில் உள்ள முத்துத் துறையில் கிடைக்கும் முத்துக்கள் பெரும்பான்மையும் உருண்டையாகவும் நல்ல ஒளியுடையனவாகவும் உள்ளன. பெருவாரியாகச் சங்கு எடுக்கும் இடம் தாய்நாட்டிலேயே இருக்கிறது; இதற்கு பெதெலா என்று பெயர். இங்கிருந்து இந்தத் துறை தெற்கே 60 மைல் வரை நீண்டு செல்கிறது.

இந்த வளைகுடாவில் ஒருவகை பெரிய மீன் நிறைந்து கிடக்கிறது. இது குளிக்கிறவர்களை அடிக்கடி கொன்று தொலைக்கிறது. இதற்காகச் சில மந்திரக்காரர்களை இந்த வணிகர்கள் தங்களோடு அழைத்துச் செல்கிறார்கள். இவர்கள் பார்ப்பனக் குடியைச் சேர்ந்தவர்கள். தங்களுடைய மந்திர வித்தையால் இந்த மீன்களை வசியம் பண்ணித் தங்கள் விருப்பப்படி நடக்கச் செய்து ஒரு கேடும் விளையாதபடி இவர்கள் தடுக்கின்றார்கள். முத்துக் குளிப்பது பகலில்தான் நடக்கும். ஆகையால் மாலையில் மந்திர சக்தியைச் செலுத்தாமல் விட்டு

விடுவார்கள். இராக்காலத்தைப் பயன்படுத்திக்கொண்டு முத்துச் சங்குகளைத் திருட வந்து குளிக்கும் வஞ்சகர்கள் மந்திரக் கட்டில்லாத இந்த மீன்கள் நடையாடுவதற்கு அஞ்சி அவ்வாறு செய்ய முனையாது விட்டுவிடுவார்கள் என்பது இவர்களுடைய எண்ணம். இந்த மந்திரக்காரர்கள் இதேபோல எல்லா வகையான பறவைகளையும் விலங்குகளையும் வசியம் செய்யும் கலையிலும் கைதேர்ந்தவர்கள்.

முத்துக்குளிப்பது ஏப்ரல் மாதத்தில் தொடங்கும். மே மாதம் நடுவரை நடைபெறும். இந்தத் தொழிலில் ஈடுபடும் உரிமையை அரசனிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொள்ள வேண்டும். இந்தத் தொழிலில் வருவதில் பத்தில் ஒரு பங்கே இந்தவகையாக அரசனைச்சாரும். மந்திரக்காரனுக்கு இருபதில் ஒருபங்கு சேரும். எனவே வணிகர்களுக்கே இதனால் பெரிய ஊதியம் உண்டு. மேலே சொல்லிய பருவகாலம் முடிவதற்குள் சங்குகளும் அந்த இடத்தில் குளித்தாய்விடும். பின்னர்க் கப்பல்களை வேறு இடத்திற்குக் கொண்டு செல்வர். இந்த வளைகுடாவிலிருந்து 300 மைல் தூரம் போவார்கள். அங்கே செப்டம்பர் மாதத்தில் தங்கத் தொடங்கி அக்டோபர் மாதம் நடுவரை இருப்பார்கள். அரசன் மேற்கண்டவாறு பத்தில் ஒருபங்கு முத்துக்களைப் பெறுவதோடு நல்ல வடிவாய் உள்ள பெரிய முத்துக்களையும் பொறுக்கி எடுத்துக்கொள்ளலாம். அவற்றிற்கு அவன் நிறையப் பணம் தருவதால் அவற்றை அவனிடம் கொண்டுபோய்க் காட்டுவதில் வியாபாரிகள் கசப்பு ஒன்றும் கொள்வதில்லை.

நாட்டின் இந்தப் பகுதியில் உள்ளவர்கள், மானத்திற்காகக் காக்க வேண்டிய உறுப்புக்களை மட்டும் சிறுதுணியால் மறைத்துக்கொண்டு மற்றைப்படி ஏறக்குறைய நிருவாணமாகவே போகின்றார்கள். "அரசன் விலையான துணிகளை உடுத்திக் கொண்டிருக்கின்றான்" என்பது தவிர அவன் ஒன்றும் பிறரைவிட மிகுதிப்படியாக உடையணிந்திருப்பதில்லை. ஆனால் பல வகை அணிகலன்களைப் பூண்டு பிறரினும் பெருந்தன்மையாகச் சிறந்து விளங்குகிறான். விலையேறிய நீலம், பச்சை, கெம்பு முதலிய இரத்தினங்கள் நிறைந்த கழுத்துப் பட்டை (கண்டசரம்), பட்டு நூலில் முத்தும் கெம்பும் கோத்துக் கழுத்திலிருந்து மார்பு வரை தொங்கும் மாலை (ஹாரம்; இரட்டை மணிமாலை) இவற்றை அணிந்திருந்தான். இந்த மாலையில் மணிகள் 104. (108 என்பதனை மறந்து 104 என எழுதுகிறார் மார்க்கோ போலோ). 108 என்ற எண்ணுக்குக்காரணம் உண்டு. அரசனுடைய சமய முறைப்படி ஒவ்வொரு நாளும் தன் கடவுளை நோக்கி அத்தனை முறை மந்திரம் செபம் செய்ய வேண்டும். அவனுடைய முன்னோர் என்றும் இதிலிருந்து தவறியதே இல்லை. இந்த மந்திரம் "பகஉதா" என்ற சொல்லே ஆம். (பகவுதா என்பது பகவத் என்பதனைக் குறிக்கலாம். "பகவான்" எனத் தமிழில் வழங்கும். இந்தச் சொல்லைக் கேட்டது நினைவில் இருந்திருக்கலாம். பாண்டியர்கள் சைவர்கள்; ஆதலின் "நமச்சிவாய" என்ற மந்திரத்தினையே செபித்திருப்பர்.) இந்த மத்திரத்தினை இவர்கள் 104 (108) முறை செபிக்கின்றனர். பொன்னால் செய்து முத்தும் மணியும் கொண்டு புனைந்த தோள் வளைகள் மும்மூன்றினைத் தோளில் அரசன் அணிந்திருக்கின்றான். அவ்வாறே புனைந்துள்ள பொன்பட்டைகளை (கழல் சிலம்பு முதலியன)த்

தன் காலில் மூன்று வேறு இடங்களில் பூண்கின்றான். கால்விரல்களிலும் கைவிரல்களிலும் மதிப்பிட முடியாத மோதிரங்களை அணிந்து கொண்டிருக்கிறான். இந்த இரத்தினங்களும் முத்துக்களும் இவனுடைய நாட்டுப் பொருள்கள் ஆதலின் இவ்வளவு பெருமிதமான அரசச் சின்னங்களை அழகாக வெளிக் காட்டிக் கொள்வது இந்த அரசனுக்கு மிக மிக எளிதாம்.

இவனுக்கு மனைவியரும், காதற்கிழத்தியருமாக குறைந்தது ஆயிரம் பேர் இருப்பர். தனக்கு மகிழ்ச்சி தரும் பேரழகியைக் கண்டதும் உடனே தன் ஆசையைத் தெரிவித்து விடுவான். தன்னோடு உடன் பிறந்தவனது காதலியை இவ்வாறு தன் காதலியாகக் கொண்டு வந்து விட்டானும். உடன் பிறந்தவன் இடம் பொருள் ஏவலுணர்ந்த அறிவாளி. படை தொடுப்பதற்கு அடிக்கடி எண்ணியிருந்தும் இதனைப் போருக்குக் காரணமாக்க வேண்டாம் எனப் பலர் கேட்டுக் கொண்டதற்கு அவன் இணங்கிப் போய் விட்டான். இந்தச் சமயங்களில் எல்லாம் இவர்களுடைய தாயார் தம் மார்பினைத் திறந்து காட்டி "என் மக்களே! நீங்கள் ஒருவர்க்கு ஒருவர் மாறுபட்டுச் சண்டையிட்டால், அப்பொழுதே நீங்கள் பாலுண்ட மார்பினை அறுத்து எறிவேன்" என்று அவர்களோடு மன்றாடிப் புலம்புவாராம். இவ்வாறு கோபம் தணிய இடம் ஏற்பட்டது.

அரசன் தன்னைச் சுற்றிப் பல வீரர்களை வைத்திருக்கின்றான். "இம்மைக்கும் மறுமைக்கும் அரசனுக்கு வேளைக்காரர்" என்ற சிறப்புப் பெயர் இவர்களுக்கு உண்டு. மெய்காப்பாளராய் அரண்மனையில் அரசனது திருமேனியைக் காக்கின்றனர். உலாப் போகும் போது பக்கத்தில் குதிரையேறிச் செல்கின்றனர். எப்பொழுதும் அரசனுடனேயே செல்கின்ற உடனுறை சுற்றம் இவர்களே ஆம். அரசாங்கத்தில் எல்லாத் துறைகளிலும் மிக்க அதிகாரம் செலுத்தி வருகிறார்கள். அரசன் இறந்ததும் அவனுடலைக் கொளுத்தும் சடங்கு நடைபெறும் போது, இந்த உண்மைச் சேவகர்கள் அந்தத் தீயில் குதித்து அரசனது உடலோடு எரிந்து சாம்பலாவார்களாம். மறு பிறப்பிலும் அவனுடைய உடனுறை சுற்றமாகத் தொண்டாற்ற இவ்வாறு செய்வார்களாம்.

கீழே கண்ட வழக்கமும் இதே போல வழங்கி வருகிறது. அரசன் இறந்தால் அவனுக்குப் பின் அரசனாகும் அவனுடைய மைந்தன், முன்னவன் விட்டுப் போன பண்டாரத்தை (பொக்கிஷத்தைத்) தொடுவதே இல்லை. நாடு முழுதும் தனக்கு முழு உரிமையோடு வந்த பின்னர்த் தன் தந்தை போலத் தானும் பெரிய பண்டாரத்தை நிரப்ப ஆற்றலற்றுப் போனதாகத் தன் ஆளும் திறமையிலேயே குறையாய் முடியும் எனக் கருதியே இவ்வாறு நடந்து வருகின்றனராம். இந்த மனப் போக்கின் காரணமாகத் தலைமுறை தலைமுறையாய் அளவற்ற செல்வம் சேர்ந்து வருகிறது என்று மக்கள் கருதுகிறார்கள்.

இந்த நாட்டில் குதிரைகள் பிறந்து வளர்ந்து பல்கிப் பெருகுவது இல்லை. அரசனும் அவனுடைய மூன்று தம்பி மாரும் ஆர்மஸ் (Hormuz) தியூவார் (Murbat) பெசார் (Sohar) ஆதென் (Aden) என்ற இடங்களிலுள்ள வணிகர்களிடமிருந்து குதிரைகள் வாங்கப் பெரும் பணத்தொகையைச் செலவிடுகின்றார்கள். இந்த வியா-

பாரிகள் 5000 வரை குதிரைகளை இறக்குமதி செய்து ஒவ்வொரு குதிரைக்கும் 500 பொன்னுக்கு விற்பதால் இந்த நாட்டிற்குக் குதிரைகளைக் கொண்டு வரும் வியாபாரத்தில் பெரிய செல்வம் படைக்கின்றார்கள். இந்தக் குதிரைகளைச் சரிவரப் பாதுகாக்கவோ, வேண்டிய மருந்துகளைத் தரவோ தக்கவர்கள் இல்லாமையால் இது காரணமாகவே ஆண்டின் முடிவில் இவற்றில் 300 கூட உயிரோடு இருப்பது இல்லையாம் என்று பலர் கூறுகிறார்கள். அதனால், அவற்றுக்குப் பதிலாக ஆண்டுதோறும் குதிரைகளைப் புதிதாக வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆனால், இந்த நாட்டின் சீதோஷ்ண நிலை இந்த வகையாள குதிரையினத்திற்குப் பிடிக்கவில்லை: ஆதலினாலேயே இங்கே குதிரைகளைப் பிறக்கச் செய்வதும் வளர்ப்பதும் அருமை ஆகின்றது என்று நான் கருதுகிறேன். அரிசி தவிர வேறு தானியங்கள் இந்த நாட்டில் விளையாமையால், இந்தக் குதிரைகளுக்குத் தீனியாகச் சோறு தீற்றிய இறைச்சியையும் வேறு வகையாகச் சமைத்த உணவுகளையும் கொடுத்து வருகின்றனர். பெண் குதிரை பெரிதாய் இருந்து மிக அழகிய ஆண் குதிரையோடு சேர்ந்தாலும் குதிரையேற்றத்திற்குப் பழகச் சிறிதும் பயன்படாதபடி வளைந்து திரிந்த கால் படைத்த அழகற்ற குட்டிகளையே போடுகிறது.

கீழேகண்ட வியப்பான வழக்கம் இந்த நாட்டில் வழங்கி வருகிறது. குற்றவாளி வழக்கு முடிந்ததும் கொலைத் தண்டனையை ஏற்றுக் கொலைக் களத்துக்குப் போகும் போது குறிப்பிட்ட தெய்வத்திற்குத் தன்னைப் பலி இட விரும்பினால் அதனைத் தெரிவித்துவிடுவான். உடனே அவனுடைய உறவினரும் நண்பரும் ஒருவகை நாற்காலியில் அவனை அமர்த்தி அவன் கையில் நன்றாகக் கூர் தீட்டி உறுதியாக இருக்கும் பன்னிரண்டு கத்திகளைக் கொடுத்துவிடுவார்கள். நகரத்தைச் சுற்றி இவ்வாறு அவனைத் தூக்கிச் செல்வார்கள்; உரத்த குரலில் 'இந்த வீரப் பெருமகன் கடவுள் மேலுள்ள அன்பின் மேலீட்டால் தானே தன்னைப் பலி கொடுக்கப் போகிறான்' என்று பறையறைவார்கள். தண்டனை நிறைவேற்றும் களத்திற்கு வந்ததும் அவன் இரண்டு கத்திகளை விரைந்து எடுத்து "இந்தத் தெய்வத்திற்கு என்னைப் பலி கொடுக்கப் போகிறேன்'' என உரத்துக் கூவி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தொடையிலும் குத்திக் கொள்வான். இரண்டை வயிற்றிலும் இரண்டை மார்பிலும் குத்திக் கொள்வான். ஒவ்வொரு முறை குத்திக்கொள்ளும் போதும் முன் சொல்லிய சொற்களைச் சொல்லிக் கொண்டே ஒரு கத்தி தவிர மிகுதியை எல்லாம் இவ்வாறு தன் உடலின் பல உறுப்புக்களிலும் குத்திக் கொள்வான். பிறகு கடைசிக் கத்தியை நெஞ்சிற் குத்திக் கொண்டு உடனே மாய்ந்து விடுவான். இந்தக் காட்சி நடந்தேறி முடிந்ததும் அவனுடைய சுற்றத்தார் பெரிய விருப்போடும் களிப்போடும் சென்று அவனுடைய உடலை நெருப்பிற்கு இரையாக்குவர். அவனுடைய மனைவி தன் கணவன் மேலிருந்த பக்தி காரணமாக அந்தத் தீயில் விழுந்து அவனோடு சாம்பலாவாள். இத்தகைய உறுதிப் பாட்டினைக் காட்டும் பெண்களைச் சமுதாயம் மிகவும் பாராட்டுகிறது. அவ்வாறு செய்ய அஞ்சும் பெண்களையோ மிகவும் பழிக்கின்றது.

இது நெகிழிப் பொருள்கள் (**Plastics**) பற்றிய கட்டுரையின் தொடர்ச்சி.

நிலக்கரியில் எழுந்த நெடுமாடம்

திரு. ஈ. த. இராசேசுவரி அம்மையார், M.A., L.T.

கரையாத பால்

பஞ்சிலிருந்து மட்டும் இந்த மாய வித்தைகள் கிளம்பி விடுகின்றன என்று எண்ணிவிட வேண்டாம். பாலிலே "கசீன்" (Casein) என்ற ஒருகட்டு உண்டு. இது பாலிலே கரையாமல் "போலிக் கூழாக" (Collaid) நிற்கும். இது அங்கே சுண்ணாம்புச் சத்தோடு சேர்ந்து கிடக்கின்றது. வெண்ணெயிலுள்ள கொழுப்பு நொய்களை இதுதான் மூடிக்கொண்டு கிடக்கிறது. இதில் சிறிது "எரி கந்தகமும்" (Phosphorus) உண்டு. பலவகை 'நவனிக்காடிகள்' (Amino-acids) சேர்ந்த இதில் "கரி" (Carbon) "நீரியம்" (ஹைட்ரஜன்) காலகம் (னைட்ரஜன்) உயிரியம் (ஆக்சிஜன்), கந்தகம், எரிகந்தகம், என்ற இவை உண்டு. தோயவைக்கும் பலவகைப் பொருள்களைப் பாலில் பிரையாகக் குத்தி இந்தப் பாற்கட்டினை அறிஞர் வேறு பிரிப்பர். ரென்னெட் (Rennet) என்கின்ற இரைப்பை நீர்ச்சத்தினையே மேல்நாட்டார் பிரைகுத்தி வருகிறார்கள். பால்தோயத் தொடங்கும் போது மத்து சுழன்று வரும். 65° C வரை அவர்கள் சூடேற்றுவார்கள். அப்போது ப்ரோடீட் (Proteid) என்கின்ற பிசிதம் நொய் நொய்யாக வெளியே வீசப்படும். அப்போது மோரை அவர்கள் எடுத்துவிட்டு நிற்கும் பாற்கட்டினை வெந்நீரில் கழுவிச் சுடுகுழைக்குள் உலர்த்தி எடுத்துக்கொள்வார்கள். இதை எடுத்து விடுவதால் பாலின் சிறப்பு குறைவதில்லை. ஆதலின், குழந்தைகளின் உணவைச் சிதைக்கின்றோம் என்ற பேச்சிற்கு இடமில்லை. ஏடு எடுத்த பாலில் இருந்துதான் அவர்கள் இதனை வேறு பிரிக்கின்றார்கள். இதை எடுத்தபின் நிற்கும் மோரில் இருந்து அவர்கள் மிகச் சிறந்த பால் சக்கரையைச் (Milk Sugar) செய்து வருகிறார்கள். ஏறக்குறைய 10 படி பாலில் ஒரு ராத்தல் **பால் கட்டு** கிடைக்குமாம்.

பாலில் எழுந்த பகட்டு

பிரான்ஸ், ஹாலந்த், டென்மார்க், அமெரிக்கா, முதலிய இடங்களில் தான் இந்த பாற்

கட்டுப் பெருவாரியாக உண்டாகிறது. இதனை அரைத்துச் சலித்து "அப்பட்டமாக இருக்கிறதா" என்று பார்த்து அந்த நாட்டார்கள் எடுத்துக் கொள்வார்கள். அவர்கள் இதோடு மரத்தூள் மாவினையும் வண்ணப் பொருள்களையும் சேர்த்து எந்திரத்தில் ஒன்று சேர்த்து விடுவார்கள். சாயத்தைத் தண்ணீரில் கரைத்து இதற்குள் தெளிப்பார்கள். அமுக்கத்தில் வைத்து அழுத்திக் கம்பிகளாகவும் குழைகளாகவும் தகடுகளாகவும் சூட்டில் அமைத்துக் கொள்வார்கள். ஆமை ஓடுபோல் புள்ளி புள்ளியாக இருக்க வேண்டும் என்று விரும்பினுல் இந்த மாவைத் தனித் தனி வர்ணங்கள் உள்ள நுண்ணிய கம்பிகளாக (5 மில்லி மீடர் கனம்) இழுத்து, 5 மில்லி மீடர் நீளமுள்ள கம்பிகளாகக் கத்திரித்துக் கொள்வார்கள். இந்தத் துண்டுகளை முன் சொல்லியபடி எடுத்த மாவுக்குள் வைத்து ஒன்ருக்கி வேண்டிய வடிவத்தில் அழுத்தி எடுத்துக் கொள்வார்கள். மாவு தெளிவாகவும் அதிலுள்ள கம்பிகள் சிறிது பழுப்பாகவும் விளங்குமாதலின் ஆமை ஓடு போன்ற தோற்றம் உண்டாகும். இப்படி எடுத்த பொருளைச் சிறிது **பார்மலினேடு** (Formaline 5%) சேர்த்து 65° F சூட்டில் சில நாட்களோ, சில மாதங்களோ (கனத்திற்கு ஏற்ருற்போல்) வைத்திருப்பர். பின்னர் இதனை அழுத்தித் தண்ணீரைப் பிழிந்து எடுத்து, உலர வைத்துப் பளபளப்புக் கொடுப்பர்.

புத்துலகக் குங்கிலியம்

இதுவரையும் நாம் முன் கூறிய **சூட்டில் நெகிழ்தரு பொருள்**களைப் பற்றிப் பேசி வந்தோம். சூட்டில் **உருப்பெறு நெகிழிகள் புதிதாக** வந்தன என முன்னரே கூறி உள்ளோம். கரி அணு சேர்ந்த திரளைகளைப் பிற பொருள்களோடு ஒன்று சேர்க்கும்போது அவற்றிலுள்ள நீரியமும் உயிரியமும் தக்க அளவிற் சேர்ந்து தண்ணீராக வடிந்துவிடும் என்றும் அது காரணமாக மிகுதி நிற்பது இறுகிவிடும் என்றும் ஒருமுறை இவற்றிற்கு ஒருவடிவம் தந்தால் பின்னர் அதனை மாற்றுவது இயலாது என்றும் கண்டோம். இவற்றைப் பெருவாரியாக மாவாகவே விற்று வருகிருர்கள். மாவை அழுத்திப் பல வடிவங்களாக அமைத்துக் கொள்வார்கள். இவ்வாறு தொடர்ந்து செய்து வரும் எந்திரங்களும் உண்டு. இவற்றைக் **குங்கிலப் போலியாக** (Resinoid) ஏடு ஏடாகச் செய்து காகிதமோ, துணியோ ஒட்டி வலுக்கொடுத்து விற்பதும் உண்டு.

கார்பாலிக் ஆசிட் காட்டும் வேடிக்கை

கரியகக்காடி அல்லது கார்பாலிக் ஆசிட் என்பதனை நாம் கேட்டுள்ளோம். நவாசாரத்தின் முன்னிலையிலோ, கந்தகக்காடி (சல்பூரிக் ஆசிட்) யின் முன்னிலையிலோ இந்தக் கரியகக்காடியோடு, **பார்மல் டீ ஹைட்** (Formal de hyde கரிச நறவி) என்ற பொருளைச் சேர்த்து விட்டால் வேதிமாற்றம் விரைந்து நிகழும். **குண்டுணி** தனக்கொரு கேடுமின்றித் தன் நண்பர் இருவரை முட்டிக் கொள்ள விடுவதுபோல மேலே சொல்லிய கந்தகக்காடியும், நவாசாரமும் கரியகக்காடியையும் பார்மல் டீ ஹைடையும் முட்டவிட்டு வேடிக்கைப்பார்க்கும். இத்தகைய பொருள்களை **நுகைப்புகள்** (Catalytic agent) என்பார்கள். பெரிய செப்புத் தொட்டியிலோ துருப்பிடிக்காத எஃகுத் தொட்டியிலோ இவற்றை 70°C வரை சூடேற்றுவார்கள். முன் சொல்

லியதுபோல் நீரியமும் உயிரியமும் சேர்ந்து தண்ணீராக வடிந்து ஆவி யாக வாலேவழியே வெளியேற்றப் படும். மிஞ்சுவது குங்கிலியப் போலியாக நிற்கும். பின்பு கூழா கவோ கட்டியாகவோ காய்ச்சி எடுத்துக் கொள்வர். இது முதல் நிலே. பின்னர்க் கட்டியை மாவாக அரைத்துக்கொள்வர். இதனே அப்படியே பயன் படுத்துவது பெரும் பணச் செலவாக முடியும். எனவே இதனேடு மரத்தூள் மாவை சேர்த்துக்கொள்வர். வேண்டிய வர்ணப் பொருள்களே யும் இதனுடன் சேர்ப்பர். சுழ லும் வட்டப்பெட்டிக்குள் நன்ருக இதனேக் கலந்து சூடான உருளே களின் கீழ்வைத்து உருட்டிச் சரி யான கலவையாக்கி விடுவார்கள். பிசைந்த மாவுபோல் இருக்கும் இதனேக் குளிர வைத்து மாவாக்கிப் பயன்படுத்திக் கொள்வார்கள். இதுவே இரண்டாம் நிலே.

சிறுநீர் சித்து

சிறுநீர் என்று இகழ்ச்சியாக உல கம் பேசுகிறது. வாயினுற் சொல் லவும் கூசும் இதிலுள்ள உப்பு ஒன்று இப்போது பெருஞ்சிறப்பு அடைந்து இருக்கிறது. இதனே வொய்லர் (Woehler) என்பவர் 1828 ஆம் ஆண்டிலேயே அமோ னியம் சையனேட்டு (Ammonium Cyanate) என்பதனேச் சுடவைத்து செயற்கையாக உண்டாக்கினுர். இந்தமுறை ஜர்மானியருக்கு மட் டும் தெரிந்து இருந்தது. இப் போதோ கார்பன்டை ஆக்சைட் அல்லது கரியமில வாயுவிலிருந்தும் நவாசாரத்தில் இருந்தும் அமெரிக் காவிலும் ஐரோப்பாவிலும் இத னேச் செயற்கையாக விளேவித்து வருகின்றனர். இது உரமாகவும் மருந்தாகவும் பயன்படுகின்றது. இந்தச் சிறுநீர் உப்பைப் "**பார்மல் டஹைட்**" என்பதில் 10°C சூட் டில் கரைத்து விடுவர். 130°C சூடுவரை பின்னர் சூடு ஏற்றிக் கொண்டு போவர். அப்போது தண்ணீர் பிரிந்து நீர் ஆவியாகி வாலேவழியே வழிந்துவிடும். மிகுதி நிற்கும் குங்கிலியப் போலியை, தட்டுகளில் விட்டுக் குளிரவைத்து இறுகச் செய்வர். முன் சொன்னது போலவே இதையும் மாவாக்கிக் கொண்டு பயன் படுத்துவர். ஏறக் குறைய தண்ணீர் போல அழகான பளிங்கு நிறத்தோடு இது விளங் கும்.

அடிவரை பாயும் விந்தை

கிளிசரைன் (Glycerine) அல் லது கரிநீர்ப்பாகு கொண்டு செய் கின்ற நெகிழிப் பொருள்களும் உண்டு. இந்த வகையாக வரும் குங்கிலியப் போலி பிறவகைக் குங் கிலியங்களோடு சேர்ந்து எத்த னேயோ வகையில் பயன் படும். இவை எவ்வளவு சூடு ஏறினுலும் வெட்டை ஆவது இல்லே. ஒரு நிலேயை அடைந்ததும் அவை தோல் அல்லது ரப்பர் போல ஆகி விடுகின்றன. **கல்நார்** (Asbestos) உடனும் "அபிரே"கத்துடனும் (Mica) இதனேச் சேர்த்து எந்திரங் களில் உள்ள துளேகளில் உள்ளு றைகளாகப் பயன் படுத்தி வருகின் றனர். எந்திரம் எவ்வளவு சூடு ஏறினுலும் இவை சூடேறிப் பொடியாவதில்லே. மின்சாரம் கனத்து ஓடுகிற சுருளேயைத்தாங் கும் பலகைகள் கட்டைகள் முத லியவற்றில் கல்நாரோடு இதனே யும் சேர்ப்பது மிகவும் சிறந்த பய னேத்தரும். இந்தக் குங்குலியத் தைப் பருத்தி முதலிய துணி களோடு சேர்த்தால் உள்ளே வரையிலும் இது பாய்ந்து அவற்றை முழுதும் நனேத்து விடு கிறதாம். பிறவகை நெகிழிப் பொருள்களால் ஆகிய குங்கிலியங் களோ மேலோடேயே நின்று விடுமாம்.

"இவ்வளவுதான் நெகிழிப் பொருள்கள் செய்யக்கூடும்" என்று எண்ணி விடக்கூடாது. கண்ணுடி போல விளங்குகிற நெகிழிப் பொருள்களும் உண்டு. **சையான் ஹைட்ரின்** (Cyan-hydrin) வழியாக *அசிடோனில்* (acetone) இருந்து ஒருவகை நெகிழிப் பொருள்கள் செய்து வருகிருர்கள். இதனைச் செய்யும் முறை மூடுமந்திரமாகவே இருந்து வருகிறது. இது நல்ல நிறமுடையது; மிக மிகத்தெளிவானது. தண்ணீரில் மிதக்குமென்றே சொல்லக் கூடிய அளவில் அவ்வளவு இலேசானது. இது தண்ணீரில் நனைந்து நைந்து போவதுமில்லை. அதனால், "எந்தச் சீதோஷ்ண நிலைக்கும் ஈடு கொடுக்கும்" என்று சொல்லலாம். எந்திரங்கட்கும் மின்சார வேலை கட்கும் கெடாது உதவும் இயல்பு வாய்ந்தது. எந்திரத் திராவகமும் இதனை அரித்துத் தின்னுது. பொய்ப்பல் செய்வதற்கு இதனுல் இது மிகவும் பயன் படுகிறது; சுகக்கேடுகளை இந்த வகையால் தடுப்பதற்கு இது பெரிதும் உதவு கிறது. கண்ணுடி வில்லைகளாகவும் இதனைச் செய்துவிடலாம். கண்ணுடிகளைத் தேய்த்தும் பள பளப்பாக்கியும் வேண்டிய அளவிற்குக் கொண்டு வர இப்போது மக்கள் படாத பாடு படுகின்றனர். இனி இந்த நெகிழிப்பொருளைப் பயன் படுத்தி ஒவ்வொருவனுக்கும் வேண்டிய கண்ணுடி வில்லையை நேரே பளபள என்று செய்து தரலாம். கண்ணுடி போலவே இதுவும் பளபளப்பாக இருக்கும்; கண்ணுடியினும் நன்முக சூடு தாங்கும்; சுருங்கவோ ஒடியவோ செய்யாது. கீறல் விழுமோ என்ற அச்சந்தான் உண்டு. ஆனுல் கண்ணுடியை உருக்கி மேலே பூசி இவ்வாறு கீறல் விழாமலும் இப்போது செய்து விடுகின்ருர்கள்.

மணம் வீசும் சித்து

வினில் (Vinyl) *ஸ்டைரால்* (styrol) என்ற இனத்தைச் சேர்ந்த நெகிழிப் பொருளும் உண்டு. இவை மலைமுள்ள கருவில் இருந்து தோன்றுகின்றன. இவற்றை ஒன்ருேடும் பலவோடும் சேர்ப்பதால் பலபல வகையான நெகிழிப் பொருள்கள் வருகின்றன. சில தோல் போன்று இளகுபவை. சில மரம்போன்று கெட்டியானவை. சிலவோ பல பொருள்களில் கரையும். இவையும் இலேசானவையே. தண்ணீரில் நைந்து போகாதவையே. தீப்பிடித்து எரியாதவை. இவற்றையும் திராவகங்கள் அரித்துத் தின்பதில்லை. இவை மின்சாரத் திற்கும் தாக்குக் கொடுக்கும். இவற்றை மேல் பூச்சாகவும் தகடாகவும் கம்பிகளாகவும் பொய்ப் பல் செய்யவும் அடிப்பொருளாகவும் பயன் படுத்துகின்றனர்.

எல்லாம் வல்ல சித்து

பென்சீன் (Benzene) *இதலீன்* (Ethelene) என்பவை நிலக்கரியிலிருந்து வரும் பொருள்கள். இவற்றைச் சூடேற்றி **பாலிஸ்டிரீன்** (Polystyrene) என்ற நெகிழிப் பொருளை விளைவிக்கின்றனர். இது பளிங்கு போன்றது. இதுவும் தண்ணீரில் மிதக்கக்கூடிய அவ்வளவு இலேசானது. 70°–90°c சூட்டில் இது மெத்தென்று ஆகி விடுகிறது. இன்னும் மேலும் சூடு ஏற்றினுல் எந்த வடிவமாகவும் இதனை அமைத்து விடலாம். இதனை எந்தத் திராவகமும் அரித்துத் தின்பதில்லை. இது உயிரியத்துடன் சேர்ந்து களிம்போ அல்லது துருவோ பிடிப்பது இல்லை. எவ்வளவு சூடு இருப்பினும் எவ்வளவு கனமான மின்

சாரம் ஓடினாலும், இது தாக்குப் பிடிக்கும். இத்தகைய தன்மையுடையதனால் இதனைக்கொண்டு **காப்பு உறைகள்** (Insulators) செய்து வருகிறார்கள். தண்ணீருக்குள்ளே ஊறிக்கிடக்கும்போதும் இவை கெடுவதில்லை. பால்போல் வெள்ளையாகவும் பலபல நிறங்களாகவும் நாம் காணும் தொலைபேசி அமைப்புகள் இதனால் செய்யப் பட்டனவையே. இதனூடே பாயும் ஒளிக்கதிர் வெளியே வரும்போது மிக விரிந்து விலகிச் செல்லும். அதனால் இது வைரம்போல் மின்னிப் பொலிகிற அழகு வாய்ந்தது. இதனை "பென்சின்" முதலியவற்றில் கரைத்து வர்ணமாகப் பயன் படுத்தலாம். இந்த வர்ணங்கள் மிகமிக பளபளப்பாய்த் தோன்றும். இவற்றை ஒட்டு போடவும் பயன் படுத்தலாம்.

பழையதும் புதியதும் பறந்து மிதக்கும்.

முன்னே நாம் பருத்தியின் திருவிளையாடல்களாகக் கூறியவை நம் கண்முன் எதிரே சூரிய ஒளியை விழுங்கிப் பருத்திச் செடி செய்கின்ற மாயவித்தைகளாம். இன்று நாம் கூறி வந்தவை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சூரிய ஒளியை விழுங்கிய செடிகள் பூமிக்குள் அழுந்தி மறைந்து நிலக்கரியாய் மாறி விட்டவையின் திருவிளையாடல்களாகும். நிலக்கரியும் சுண்ணாம்பும் சேர்வதிலிருந்து **அசிடலீன்** (acetalyne) ஆவி பிறப்பதனையும் அதன் வழியாக மேலே கூறிய பல பொருள்கள் தோன்றுவதனை வேதிப் புலவர்கள் மிக அழகாக விரித்து உரைக்கின்றார்கள். அதோடு **நைட்ரஜனும், உயிரியமும்** நிறைந்த காற்றும், **ஹைட்ரஜனும், ஆக்சிஜனும்**, சேர்ந்த நீரும், செய்கின்ற விந்தைகளையே இதுவரை கண்டு வந்தோம். நமது நாகரிகத்தை நிலக்கரியில் நிமிர்ந்து எழுந்த நெடுமாடம் எனலாம். அதனைத் தாங்கும் தூண்கள் காற்றேயாம். அதன் அடிப்படை தண்ணீராம். துரியோதனன் கட்டிய அரக்கு மாளிகையினும் அழகான இந்த மாளிகையால் உலகம் மாறியுள்ளதை அடுத்துக் காண்போம்.

திமிங்கலத்தின் கண்கள் அசைவதில்லையாம். ஏனென்றால் அவற்றின் கண் நரம்புகள் இரும்புக் கம்பிகள் போல வன்மையாக இருக்கின்றனவாம். ஆனால், நமது விழி நரம்பு நெகிழ்ந்து இருப்பதால் நம் கண்களை அசைக்க முடிகிறது.

திறனாய்வுகளை வகைப்படுத்தி, அன்றும் இன்றும் தமிழில் திறனாய்வு நூல்கள் தோன்றாமைக்குரிய காரணத்தையும் விளக்குகின்றது இக்கட்டுரை.

முடிபு முறைத் திறனாய்வு

அ. ச. ஞானசம்பந்தம், M. A.

இலக்கியத் திறனாய்வு பல வகைப் படுமேனும் அவற்றுள் சிறந்த இரண்டு, 'முடிபு முறைத்' திறனாய்வும் (Judicial criticism) 'செலுத்து நிலை' அல்லது 'விதி முறை' திறனாய்வும் (Inductive criticism) ஆம். இவற்றுள் முன்னதைப் பற்றிக் காண்போம். இப்பெயரே, பொருளின் உட்கோளை ஒருவாறு விளக்குகிறது. முடிபு கூற வேண்டுமாயின், இரண்டு வேறுபட்ட பொருள்கள் வேண்டும். அவற்றைப் பற்றி ஆராய்ந்து, தார தம்மியங்களை ஒப்பிட்டுப் பின்னர்த் தானே முடிபுகூற முடியும். ஆராய எடுத்துக் கொண்ட இரு பொருள்களும் ஒத்த பகுதிகள் சிலவற்றையேனும் பொதுப் படையாகக் கொண்டிருக்க வேண்டும். இட்லி சிறந்ததா, தோசை சிறந்ததா என்று ஆராயலாமே தவிர, இட்லி சிறந்ததா, நாற்காலி சிறந்ததா என்று ஆராய்தல் இயலாது. காரணம் இட்லிக்கும், தோசைக்கும் பொதுத் தன்மை உண்டு. ஆனால் இட்லிக்கும் நாற்காலிக்கும் பொதுத் தன்மை என்ற ஒன்றும் இல்லை. அதேபோல இலக்கியத்திலும் திறனாய்வு செய்யப் புகுந்தவன் பொதுத் தன்மையுடைய இரு இலக்கியங்களை எடுத்துக் கொண்டு திறனாய்வு செய்தல் வேண்டும். இம்முறை மேனாட்டில் பெரிதும் கையாளப் பெற்ற முறையாகும். நம் நாட்டில் இம்முறையே இல்லை என்று கூடக் கூறி விடலாம். காரணம், முன்னர்க் கூறியது போல எதையும் புகழவும், இகழவும் கூடாது எனத் தமிழன் கொண்டிருந்த எண்ணமாகவே இருக்கலாம்.

சுருங்கக் கூறினால் இலக்கியம் எப்படி இருக்க வேண்டும் என்று இலக்கணம் வகுக்கிறதோ, அவ்விலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு இம்முறை தோன்றிற்று. மேனாட்டாரைப் பொறுத்த வரை காப்பிய இலக்கணத்தை அரிஸ்டாடில் வகுத்தார். அவர் கூறிய அமைதிகள் அனைத்தும் நிறைந்ததே காப்பியம் என்று கூறத் தகுதி வாய்ந்தது என்று சில காலம் அவர்கள் கருதினார்கள். அவல நாடகங்கட்கும் அரிஸ்டாடில் எழுதிய திறனாய்வுக் குறிப்பே அடிப்படையாக அமைந்தது.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர்த் தோன்றிய கிரேக்கப் பெரியாரான அரிஸ்டாடில் கிரேக்க மொழியில் தோன்றிய பேரிலக்கியமாகிய 'ஹோமரின்' ஒதேசியை மனத்துட் கொண்டு காப்பிய இலக்கணம் வகுத்தார். அவ்விலக்கணங்களுள் பெரும்பாலானவை உலகத்தில் வேறு எப்பகுதியில் தோன்றிய எம்மொழி இலக்கியத்திற்கும், பொதுப் படைச் சட்டங்களாக அமைந்தன. ஆகலான் அச்சட்டங் களை மட்டும் வைத்துக் கொண்டு பிற்காலத்தில் தோன்றிய இலக்கி யங்களை ஆராய்ந்தார்கள். இம் முறையில் உள்ள பெருந் தவறு நன்கு புலனுகாமற் போகாது. எவ் வளவு சிறந்த சட்டமாயினும் ஒன்று, காலப் போக்கில் மாறு படும் இலக்கியத்திற்கு, என்றும் ஏற்றதாகாது. மனிதன் அறிவு வளர்ந்து கொண்டே வருகிறது. அறிவு வளர்ச்சிக்கு ஏற்பப் புது முறையில் இலக்கியம் முகிழ்க்கி றது. ஆனுல் அவ்வாறு தோன்றிய இலக்கியத்தை ஆராய்வதற்கு, பழைய சட்டங்களையே அடிப் படையாகக் கொள்வது, மனித அறிவு வளர்ச்சியை மதியாமல் இருப்பதாகும். இத்தகைய இடர்ப் பாட்டில் சிக்கி மேனுட்டினர், 18, 19-ம் நூற்றுண்டுகளில் அல்ல லுற்றனர். மிகச் சிறந்த அறிவா ளியாகிய டாக்டர் 'ஜான்சன்' 'மில்தன்' இயற்றிய பெருங் காப்பியமாகிய 'சுவர்க்க நீக் கத்தைக் குறை கூறினுன். காரணம் இப்பழமை பாராட்டும் பண்பே யாகும்.

மேலும் இத்தகைய சட்டங்கள் எவ்வாறு இயற்றப் பெறுகின்றன என்றுங் காணல் வேண்டும். பழந் தமிழர் முறைப்படி 'இலக்கியங் கண்டதற்கே இலக்கணம்' இயம் பப் பெற்றது. அரிஸ்டாடல் இலக் கணம் வகுக்க இலக்கியமாக விருந் தது ஹோமரின் நூலாகும். ஆனுல் அரிஸ்டாடலின் பின்வந்தவர்கட் கெல்லாம் இதே சட்டத்தை மிக வும் கெடுபிடியாகப் பயன் படுத் தினதால் தாம், பெருங் கருத்து வேறுபாடுகள் தோன்றலாயின. இத்தகைத் திறனுய்வை மேற் கொண்ட 'ஜான்சன்,' 'அடிசன்' போன்ற மேனுட்டுத் திறனுய் வாளர் அனைவரும் பழமை பாராட் டும் பண்பினரே யாவர். தாங்கள், சிறந்தவை என்று மனத்துட் கொண்ட கருத்துக்கு மாறுக எவை தோன்றினுலும் அவை தவ றுடையவை என்ற முடிவுக்கே வருபவர்கள். இவ்வாறு கூறுவ தால் முடிபு முறைத் திறனுய்வே தவறுடையது போலும் என்று யாரும் நினைத்து விட வேண்டாம். இம்முறையில் உள்ள சிறப்பியல் புகளைப் பின்னர்க் காண்போம்.

இத்தகைய திறனுய்வு முறை, தமி ழில் இல்லை என்றே கூறிவிடலாம் என முன்னர்க் கூறப்பெற்ற தல் லவா? ஆனுல் இதன் மறுதலையான செலுத்து நிலைத் திறனுய்வு (Inductive Criticism) செய்த பெரிய உரையாசிரியர்கள், ஒரோவழி முடிவு முறைத் திறனுய்வில் நுழைந்திருக்கின்றனர். அவ்வாறு சென்ற அவர்கள் முடிவு முறை யின் சிறந்த பகுதிகளை ஆராயாமல், அதன் தவறுன பகுதிகளிலேயே நின்று விட்டனர். கலித்தொகை என்ற நூலுக்கு உரைகண்ட உச்சி மேல் புலவர்கொள் நச்சினுர்க் கினியர் சில கலிப்பாடல்களைத் தமது இஷ்டம் போல் ஒடித்துத் தொல்காப்பியத்துள் அடக்க முற் படுதலைக் காணலாம். பாலைக்கலி 15ம் பாடலிலும், குறிஞ்சிக் கலி 28-ம் பாடலினும் ஆசிரியர் நச்சி னுர்க்கினியர் படும் பாட்டைக் காண்க. மிகப் பரந்த முறையில் ஆசிரியர் 'தொல்காப்பியனுர்'

'செய்யுளியல்' செய்துள்ளார். தனக்கு முன்னர்த் தோன்றிய பல்வேறு இலக்கியங்களையும் கண்டுதான் அவர் இவ் விலக்கணம் வகுத்தார். என்றாலும் என்ன? தெளிந்த பேரறிவினராய அவர் 'புறனடை' ஒன்று கூறி, 'இழைத்த இலக்கணம் பிழைத்தன போல வருவ உள வெனினும்' அவற்றைத் தெள்ளியோர் அறியக் கடவர் என்று கூறிச் சென்றிருக்கவும், அவருக்குப் பன்னெடுங்காலம் பின்னர்த் தோன்றிய உரையாசிரியர்கள் ஏன் இப்பாடு படுகின்றனர்? இக் கோட்பாடு பழமை பாராட்டும் பண்பினால் ஏற்பட்டது என்று அறிய அதிகநேரம் பிடிக்காது.

ஆனால், மேனாடுகளில் இருந்த மற்றொரு கருத்து இங்கு நிலவவில்லை என்பது அறியத் தக்கது. ஆங்கில மொழியில் தோன்றிய பெரிய காப்பியங்கள் அனைத்தும் ஒன்றை ஒன்று அடியொற்றியே தோன்றின. அடிப்படையில் மாறுபாடுகள் அதிகந் தோன்றவில்லை. அதனாலேயே அப் புதுக் காப்பியங்களைப் பழைய திறனாய்வுச் சட்டங்கள் மூலம் ஆராய்ந்தனர். ஆனால் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இம் முறை கையாளப்படவில்லை. முதற் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை அடியொற்றி மூன்றாங் காப்பியமாகிய சிந்தாமணி தோன்றவில்லை. அவ்வாறு இருக்க, எதனை அடிப்படையாகக் கொண்டு திறனாய்வு கூற இயலும்? அதிலும் முடிவு முறைத் திறனாய்வு என்பது சற்றும் இயலாத தொன்றன்றோ? செம்மையான முறையில் முடிவு முறைத் திறனாய்வு தமிழ் நாட்டில் தோன்றி வளர்ந்திருக்குமேயாயின் பனிரண்டாம் நூற்றாண்டின் பின்னரும் சில நல்ல இலக்கியங்களும், காப்பியங்களும் தோன்றி இருத்தல் கூடும். இம்முறைத் திறனாய்வு சிறந்த இலக்கியங்களைப் போற்றுவதோடு அவை மேலுஞ் சிறக்க வழி வகுத்திருக்கும். இத் திறனாய்வு இன்மையின் இலக்கிய கர்த்தர்கள் திசை காட்டுங் கருவியற்ற நாவாய் ஓட்டிகள் போல் ஆயினர். சங்கம் என்ற ஒன்று நிலவிய காலத்தில் இலக்கியம் பல்கி வளர்ந்தமை கண்கூடு. அத்தகைய ஒரு திறனாய்வுக் கழகம் இன்மையே பிற்காலத்தில் இலக்கியம் மங்கி மடியக் காரணமாயிற்று. ஆனாலும் இருந்ததாக அறியப்படும் அப் பழஞ் சங்கமும் முடிபு முறைத் திறனாய்வையே கையாண்டு, மிகுதியும் பழமை பாராட்டும் பண்பினதாகவே இருந்திருத்தல் வேண்டும். இன்றேல், சங்கப் பாடல்கள் என்று இன்று நம்மால் குறிக்கப்படும் அனைத்தும், இப்படி ஒரே முறையில் கூறியவற்றையே திருப்பித் திருப்பிக் கூறும் இயல்பினதாக அமைந்திரா. புதிய வழிகளில் செல்லப் புலவர்கள் அஞ்சினர் போலும்!!

அடுத்து காண வேண்டுவது 'செலுத்து நிலை' அல்லது 'விதி முறைத்' (Inductive criticism) திறனாய்வாகும். விஞ்ஞானத் துறையில், பல பொருள்களையும் ஆராய்ந்து அவற்றுள் பொதுத் தன்மை காண்பது போல் இலக்கியத்திலும் காணவேண்டுமென்பதே இத்திறனாய்வு முறையின் அடிப்படையாகும். இம் முறைப்படி, ஒன்றுடன் ஒன்றை ஒப்புநோக்கி, இது சிறந்தது அது சிறந்தது என்று கூறல் தவறாகும்.

தாவர நூற்புலவன் ஒருவன் பல வகைப் பூக்களையும் கண்டு அவற்றை ஆராய்ந்து அவற்றின் இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு 'இனம்' பிரிக்கிறான். ஆனால் அவன் ஒரு பூ மற்றொரு

பூவைவிடச் சிறந்தது என்று குறிப்பதில்லை யல்லவா? இயல்பால் மாறுபாடு உடைய பூக்களைப் பிரிக்கிருனே தவிர, அவன் சிறப்புப் பற்றிய பூக்களைப் பிரிப்பதில்லை. அதே போல இலக்கியத்திலும் திறனய்வு செய்யப்படல் வேண்டும். குறிஞ்சித் திணையைப் பற்றிப் பலர் பாடியுள்ள அவரவர் மேற்கொண்ட முறை என்ன என்று ஆராய வேண்டுமே தவிரக் கபிலர் பாடிய குறிஞ்சித் திணைப் பாடல்கள் ஏன் மற்றவற்றைவிடச் சிறப்புடையன என்று ஆராய்தல் ஆகாது. குறிஞ்சியைப் பற்றியே இருவரும் பாடினும் அப் பொதுத் தன்மையை அடிப் படையாகக் கொண்டு சிறப்பை ஆராயக் கூடாது. இவ்வாறு செய்யாமல் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாடல்கள் சிறப்புடையன என்று ஏற்றுக் கொண்டால் அவர் மேற்கொண்ட வழியே சிறந்தது என்ற முடிவிற்கு வர நேரிடும். அவர் மேற்கொண்ட வழி அவருக்கு சிறந்ததாக இருக்கலாமே தவிர குறிஞ்சித் திணை பாடிய பரணர், காமக்கண்ணியார் போன்ற ஏனையோருக்கும் அவ்வழியே சிறந்தது என்று கூறல் ஏலா தன்ருே! இம்முறையில் திறனய்வு செய்ய வேண்டு மாயின் கபிலர் பாடிய பாடல்கள் அனைத்தையும் கற்றுப் பிறகு குறிஞ்சிக் குரிய ஒழுக்கத்தை கபிலர் எவ்வாறு காண்கிருர்? என்று காணல் வேண்டும். பிறகு பல கோணங்களிலிருந்து பாடிய அவருடைய பாடல்களில் பொதுத் தன்மை எவை எவை என்று காணல் வேண்டும். இப் பொதுத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு கபிலரை அனுபவிக்கச் சட்டங்கள் இயற்றல் வேண்டும். ஆனல் இச்சட்டங்கள் கபிலரை அனுபவிக்கப் பயன் படுமே தவிர அதே குறிஞ்சித் திணையைப் பாடிய பரணரை அனுபவிக்கப் பெரிதும் பயன்படமாட்டா. எவ்வளவு சிறந்த முறையில் கபிலர் குறிஞ்சித் திணையைப் பாடி இருப்பினும், ஏனையோர்க்கு அது இலக்கணமாக அமைதல் கூடாது என்பதே செலுத்து நிலைத் திறனய்வின் கொள்கை. இதன் மறுதலையான முடிபு நிலைத் திறனய்வு இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டது. 'குறிஞ்சி பாடக் கபிலன்' என்ற முது மொழியும் தோன்றி விட்டதாகலின் குறிஞ்சித் திணைப் பாடல்களை ஆராயக் கபிலன் மேற் கொண்ட வழியே இலக்கணமாக அமைய வேண்டும் என்று கூறும்.

இதனை மறுக்கும் செலுத்து நிலை, முடிவு நிலைத் திறனய்வுடன் மற்ருெரு முறையிலும் மாறுபாடு அடைவதைக் காணல் வேண்டும். நிலைத்து நிற்கும் தன்மை யற்று மேலும் மேலும் வளர்ந்துகொண்டு செல்லும் அறிவை அடிப்படையாகக் கொண்டு தானே இலக்கியம் தோன்றுகிறது. எனவே இலக்கியத்திலும் வளர்ச்சியும் மாறுபாடும் பிரதி பலிக்கத் தானே செய்யும். ஆதலால் நிலையற்று மாறும் இலக்கியத்தை ஆய நிலையான திறனய்வு முறைகளும் சட்டங்களும் பயனற்றவை எனக் கூறவும் வேண்டுமோ? இது செலுத்து நிலைத் திறனய்வாளர் கூற்று.

சுருங்கக் கூறுமிடத்து செலுத்து நிலைத்திறனய் வென்பது உண்மை காணும் நோக்கத்துடன் செய்யப்படும் ஆராய்ச்சியே ஆகும். அதற்குரிய சட்டங்களை அவ்விலக்கியத்திலிருந்தே பெற வேண்டுமே தவிர வெளியுலக சட்டங்கள் கொண்டு அவற்றை ஆய்தல் கூடாது. இம்முறைப்படி பார்த்தால் இலக்கியத்தை மதிப்பிடுதல் என்பது கூடாத காரியம். தனிப்பட்டவர்

சிறப்பியல்புகள் ஆராயப்பட வேண்டுவதின்று.

இம்முறைத் திறனாய்வு பெரிய தொகுப்பாகிய சரிதமுறைத் திறனாய்வின் (Historical criticism) பாலபடும். எந்த ஒரு நூலும் இலக்கிய உலகில் நிற்கும் இடத்தையும், கலை வளர்ச்சிக்கு அந்நூல் செய்யும் தொண்டையும் எடுத்துக் கூறுவதே இவ்வகைத் திறனாய்வு.

அடுத்துளது பாராட்டு முறைத் (Appreciative) திறனாய்வு எனப்படும். நூலின்நலங்களையும் சிறப்புக்களையும் மட்டுங் கூறி ஏனைய பகுதிகளை வாளா விட்டு விடுவதே இம்முறையின் நோக்கமாகும். தமிழ் இலக்கியங்கட்டு உரை தந்த பெரியார்கள் அனைவரும் இம்முறையையே பெரிதும் கையாண்டனர்.

மூன்றாவதாக உள்ளது பகுப்பு முறைத் (Analytical) திறனாய்வாகும். இது பெரிதும், முன்னர்க் கூறிய முடிபு முறைத் திறனாய்வுடன் தொடர்புடையது. நூலின் பகுதிகளையும், அவை ஒன்றுடன் ஒன்று பொருந்தும் வகையையும், ஆய்வதே இம்முறையாகும்.

இவ்வாறு பல வகைகளாகத் திறனாய்வு முறைகள் மேனாடுகளில் பரவி இருப்பவும் தமிழ் இலக்கிய உலகில், இதுகால் கொள்ளாதது விந்தையே! சங்ககால நூல்கள் என்று வழங்கப்பெறும் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் தோன்றிய இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து இன்று நாம் அவற்றையும், அவற்றைப் படைத்த தமிழ் இனத்தையும் நினைக்குங்கால் வியப்பும் வருத்தமும் ஒருங்கே அடைய வேண்டியுளது. உலகிடை ஏனைய பகுதிகளில் மக்கள் நன்கு வாழ வகை தெரியாக் காலத்தே இத் தமிழன் சாவா இலக்கியங்கள் படைத்துவிட்டான். அவனுடைய கலை மனப்பான்மையை என்றும் அவை வெளியிடும் கருவூலங்களாக உள்ளன. என்றாலும் என்ன? பொறிகள் வழி நின்று வாழ்க்கையை அனுபவிக்கும் கலைஞனாக இருந்த தமிழன், அறிவின் துணை கொண்டு மனத்தைத் துருவி ஆராயும் வாய்ப்பை இழந்துவிட்டான் போலும்! கலை மனப்பான்மை படைத்த இவனுக்கு அனுபவிக்கும் பொருளில் தன்னை மறந்து ஈடுபட இயன்றதே தவிரத், தன்னைப் பிரித்துக் கொண்டு பொருளை ஆராய வகை இல்லாமல் போயிற்று. இன்பம் காண்பதையே பெரு நோக்காகக் கொண்ட இவன், அவ்வின்பத்தின் இயல்பை ஆராய முற்படவில்லை. இதன் பயனே, அன்றும் இன்றும் தமிழில் திறனாய்வு நூல்கள் தோன்றவில்லை.

இப்போது உலகிலுள்ள மக்கள் சுமார் 2,320,000,000 பேர். இது 1947-ஆண்டில் எடுக்கப்பட்ட எண்ணிக்கை. இதற்குப் பிறகு இன்னும் உலக முழுதிற்கும் கணக்கெடுக்கவில்லை.

'சிந்து வெளி நாகரிகம் மானிட வரலாற்றிலேயே ஒரு பெரிய விந்தையாக இருந்து நாகரிக உலகில் நம் நாட்டிற்கு ஒரு முன்னணியும் தமிழர்களுக்குத் தனிப் பெருமையும் தருகிறதென்பதை நினைக்குங்கால் நம் மக்கள் பெருங்களிப்பு அடையாமல் இருக்கமுடியாது.'

ஆண்டுகளுக்குமுன் தமிழர் நாகரிகம்

திரு தி. வை. சொக்கப்பா, M. A., L. T.

அக்கால உலகத்தின் மற்ற பகுதிகளில் காணமுடியாத அளவு வாழ்க்கை வசதியும் இன்பமும் நம் நாட்டினர் நுகர்ந்தார்கள் என்பதற்கு இன்னும் பல சான்றுகள் உள. மொஹெஞ்சொ-தரோ மக்கள், வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை யெல்லாம் பெற்றிருந்தனர் என்று அங்குக் கிடைத்துள்ள பொருள்களி லிருந்து அறியலாம். அப்பொருள்கள் களிமண்ணாலும், சங்கு, வெண்கல் முதலியவற்றாலும், மரத்தாலும், செம்பாலும், வெண்கலத்தாலும், செய்யப்பட்டவை. விளையாட்டுக் கருவிகள் முதல் பலதிறப்பட்ட மட்பாண்டங்கள் வரை சில நன்னிலையில் கிடைத்துள்ளன. பலவித வண்ணம் பூசிய வழவழப்பான மட்பாண்டங்கள் திரிகையில் செய்யப்பட்டுள்ளன. இம் மட்பாண்டங்களே உலகில் பழமையும் உறுதியும் அழகும் பொருந்தியவை என்று அறிஞர்கள் பாராட்டியுள்ளனர். மண்ணாலாகிய கிண்ணங்கள், சிறிய மூக்குடைய ஏனங்கள், மேசைமீது பூங்கொத்துகள் வைக்கப் பயன்படும் நீண்ட குறுகிய பாத்திரங்கள், சீசாக்கள், நீர்த் தொட்டிகள் எனப் பல வகைப் பாண்டங்கள் கிடைத்துள்ளன. மரக்கால் வடிவில் செய்யப்பட்ட மண் சட்டியில் நிறையத் துளையிட்டு அதற்குள் நெருப்பை வைத்து அறையில் உள்ள குளிரை அப்புறப்படுத்தினார்கள். குளிர் காலத்தில் அறைகள் சூடாக இருப்பதற்கு இக்கனல் சட்டிகள் பயன்படுத்தப்பட்டன. பீங்கானிலும் அழகிய கலன்கள் செய்தனர். கருத்தையும் கண்ணையும் ஒருங்கே கவரும் மண் கிலுகிலுப்பை, ஊது

குழல், பாவை, தலையாட்டி பொம்மை, மைக்கூடு, வண்டி, கோலி, சொக்கட்டான் காய், ஐந்நூற்றிற்கு மேற்பட்ட சித்திர எழுத்துகள் பொறித்த முத்திரைகளும் கிடைத்திருக்கின்றன. அம்முத்திரைகளில் பல பீங்கானாலும் தந்தத்தாலுமானவை.

பொன், வெள்ளி, செம்பு, ஈயம், வெண்கலம் முதலிய உலோகங்களை அம்மக்கள் பயன்படுத்தினார்கள். கத்தி, வாள், ஈட்டி, அம்பு முதலிய போர்க் கருவிகளைச் செம்பு வெண்கலக்கன்னர்கள் செய்து தந்தனர். இடைவாள், வேல், மழு, தண்டு, கோடரிகளும் போரில் பயன்பட்டதற்குச் சான்றாக கிடைத்துள்ளன. மழித்தல் கத்திகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. வெள்ளி கலந்த பொன்னைக் கோலார், அனந்தப்பூரிலிருந்தும், செம்பை இராஜபுதனம், பலுசிஸ்தான் அல்லது பாரசிகத்திலிருந்தும், ஈயத்தை ஈரானிலிருந்தும் சிந்துவெளி மக்கள் வரவழைத்திருக்க வேண்டும்.

எருமை, மான், ஒட்டகம், ஒற்றைக் கொம்புக் குதிரை (Unicorn) யானை இவைகளின் எலும்புக் கூடுகள் கிடைப்பதிலிருந்தும், முத்திரையில் காணப்படுகின்ற காண்டா மிருகம், புலி, குரங்கு, முயல், எருது உருவங்களிலிருந்தும்அந்நாட்டு மக்கள் எவ்வித விலங்குகளோடு பழகினர் என்பதை அறியலாம். எருதின் பேருதவியைக் கண்ட சிந்து மக்கள் அதனைத் தெய்வத்தன்மை வாய்ந்ததாகக்கருதினர். நாய், பூனை, பன்றி, ஆடு, கழுதை முதலிய விலங்குகளும், கிளி, கோழி, மயில், புறா, பருந்து போன்ற புட்களும், பாம்புகளும் அந்நாட்டில் வாழ்ந்தன என்றும் தெரியவருகிறது.

மக்கள் தொழில் பற்றிப் பல வகுப்புகளாய்ப் பிரிந்திருந்தனர். வேட்டையாடுவோரும், வேட்கோவரும், பயிரிடுவோரும், பாய்பின்னுவோரும், கொத்தர்களும் கன்னார்களும், கல் மரத் தச்சர்களும், கப்பல் கட்டுவோரும், பொற்கொல்லரும், மீன் பிடிப்போரும், நெய்தற்றொழில் செய்வோரும் சமூகத்தில் காணப்பட்டனர். இன்னும் தந்தவேலைக்காரரும், மந்திரக்காரரும், சோதிடரும், மூலிகைகள், மான் கொம்பு, சிலாசித்து முதலியவைகளைப் பயன்படுத்திய மருத்துவரும் இருந்தனர். ஹரப்பாவில் பீங்கானால் உருவங்கள் செய்யப் பதினாறு உலைக்களங்களும் கடுஞ் சூடாக்கி சடுதியில் குளிரவைப்பதற்கான வசதிகளும் இருந்தன. பலவிதத் தொழிற் கருவிகள் நிறைந்த மூடியிட்ட செப்புக்கலம் ஒன்றும் அகப்பட்டுள்ளது. ஆடை அணிகளும் போர்க் கருவிகளும் இல்லங்களிலிருந்த பல வாழ்க்கை வசதிகளும் சிந்து வெளி மக்களின் கைத்தொழில் முன்னேற்றத்தைக்காட்டுகின்றன. உலோகத் தொழிலும் பீங்கான் தொழிலும் உயர்ந்த நிலையிலிருந்தன. பருத்தி, கம்பளி ஆடைகள் சுமருக்கும், எகிப்திற்கும் அனுப்பப் பட்டிருக்கலாம். கைத்தொழில்களும் நில நீர் வாணிகமும் சிந்து சமவெளியில் சிறந்திருந்தன.

சிந்து நாட்டு மக்கள் கற்பனை சக்தியும் கலை உள்ளமும் படைத்தவர்கள். அவர்கள் அழகுணர்ச்சியைப் பல வண்ணங்களிலும் அவைகளின் கலவைகளிலும் கண்டு மகிழலாம். ஓவியக்கலை நிறைந்து, திமில் உயர்ந்து, குறுங்கொம்புங் கொண்ட காளையும் ஆடு, நாய் போன்ற விலங்குகளின் உருவங்களும் பாராட்டத் தக்கன. மண்ணாலான முத்திரைகளிலும் மட்கலன்

களிலும் சித்திரத்தின் சிறப்பைக் கண்டு பல அறிஞர்கள் இறும்பூதெய்துகின்றனர். சிந்துவெளி மக்களே சிற்பக்கலையைத் தோற்றுவித்தவர்கள். இக்கலையைக் கிரேக்கரிடமிருந்தே இந்தியர்கள் கற்றனர் என்பது தவறாகிவிட்டது. செங்கல்லினால் செய்த தலையில்லாத இரண்டு மனிதச் சிலைகள் ஹரப்பாவில் இருந்தெடுக்கப்பட்டன. அவ்வுருவங்களிலொன்று வலது காலைக் கீழூன்றி இடது காலைத்தூக்கி நடமாடும் நடராஜ வடிவில் உள்ளது. வெண்கலத்தால் செய்யப் பெற்று அடுக்கடுக்காய் வளையலணிந்த நடிகையின் உருவம் ஒன்றும் கிடைத்துளது. ஹரப்பா உருவச் சிலைகள், 2500 ஆண்டுகள் பிற்பட்ட சிறந்த கிரேக்கச் சிற்பங்களுக்கு எவ்விதத்திலும் குறைந்தன வல்ல. அச்சிலைகளில் மனித உறுப்புக்கள் எவ்வித குறையுமின்றி இயற்கையாய் சித்திரிக்கப்பட்டிருப்பது அக்காலச் சிற்பாசாரிகளின் கைத்திறத்தைத் தெளிவாய்க் காட்டுகிறது. அங்குக் கிடைத்துள்ள அழகிய நடராஜப் படிமத்திற்கு, பின்னால் செய்யப்பட்ட எந்த நடராஜ உருவமும் ஈடாகாது. மற்றொரு சிலை சமயப் பற்றுடையாரைப் பரவசப்படுத்துகிறது. யோகத்தில் வீற்றிருக்கும் பாவனையில் மூன்று முகங்களுடன் காணப்படும் நிர்வாணச் சிலையே அது. சிலையைச் சூழ்ந்து புலி, யானை, மான் முதலிய விலங்குகளின் உருவங்களும் சிலையின் சிரங்களில் முடிகளும் உள. இத்தெய்வம் காடுவாழ் விலங்குகளைக் காக்கும் கடவுளாகிய பசுபதி[1] என்று ஹீராஸ்பாதிரி எண்ணுகிறார்.

சிந்து வெளிமக்கள் இசை, நடனக் கலைகளிலும் பயிற்சி உடையவர்கள். தவுல், மிருதங்கம், வீணை முதலிய இசைக் கருவிகளின் உருவங்கள் காணப்படுகின்றன. கல்லால் செய்யப்பட்ட நிறைக்கற்களைக் காணும்போது அம்மக்களின் கணிதப் புலமையும் நன்கு விளங்குகிறது. சிறிய நிறைகள் 64 வரை இரட்டை எண்களாக (Binary) இருக்கின்றன. நிறையின் மிகச் சிறிய அளவு தசாம்ச பின்னத்தில் செல்கின்றது. அவர்களுக்கு வானநூற் புலமையும் உண்டு என ஹீராஸ் பாதிரி கருதுகிறார். 'சிந்து வெளி மக்கள் இராசி மண்டலத்தை நன்கு அறிந்திருந்தனர். அவர்கள் காலத்தில் எட்டு இராசிகளே இருந்தன.' இது சுமேரியருக்கு முந்திய காலம்.

இனி, சிந்து மக்களின் சமய உணர்ச்சியையும் சமயக் கோட்பாடுகளையும் காண்போம். அவர்கள் மதம் இன்று பெருவாரியான மக்கள் பின்பற்றும் ஆன்மீயம் (animism) கலந்த இந்து மதத்தினின்றும் வெகுவாய் வேறுபட்டதல்ல. விலங்குகளும், பாம்புகளும், மரங்களும் உருவமாயும் அருவமாயும் ஆராதிக்கப்பட்டன. அரச மரம் மற்றொரு மரத்தோடு மணஞ் செய்த வகையில் இணைக்கப்பட்டு ஒரு முத்திரையில் காணப்படுகிறது. ஆண்டவனைப் பெண்மை வடிவில் கண்டனர் நம் முன்னோர். தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை யெல்லாம் உதவிய பூமியைத் தெய்வமாக வழிபட்டனர். இத்தரைப் பெண் வணக்கமே நாளடைவில் சத்தி வணக்கமாகியது. சிவனை இலிங்க வடிவில் வணங்கியதற்குச் சான்றுகள் அங்குக் கிடைத்துள்ள சிவலிங்கப் படிமங்களே. இது சைவத்தின் பழமையையும், சிவ வணக்

1. புலித்தோலை அரைக்கசைத்து, யானைத்தோலைப் போர்த்து, மானைக் கையிலேந்தி நடமாடும் தெய்வம்.

கம் ஆரியருடைய வருகைக்குப் பல்லாயிர மாண்டுகள் முற்பட்டதென்பதையும் நிலைநாட்டுகிறது.[2] மொகஹஞ்சோ-தரோவில் காணப்படுங் கட்டிடங்களில் சில கோவில்கள் என்று கருதத் தக்கவை.

சிவனை நடமாடும் தெய்வமாய் வழிபடுவது தென்னுட்டிற்கே உரியது.[3] சிந்து வெளியில் உள்ள நடமாடுஞ் சிலை, சிந்து மக்களும் தமிழரும் ஒரே இனத்தார் என்பதற்கு மற்றெருரு சான்ருகும். சிந்து வெளிமக்கள் மறு பிறவி உணர்ச்சி உடையவராக இருந்தனர். யோகப் பயிற்சியும் உடையவர்கள். யோக தத்துவத்தை ஆரியருக்கு முற்பட்ட மக்கள் அறிந்திருந்தனர் என்று சர்ஜான் மார்ஷல் திட்டமாய்க் கூறுகிருர். இக்காலத்தில் நம் மதவழிபாட்டில் காணும் முக்கிய அம்சங்களாகிய சிவசத்தி வணக்கம், உருவ வழிபாடு, யோக முறை, மறு பிறப்பில் நம்பிக்கை முதலியன ஆரியரல்லாத இனத்தாரிடமிருந்தே இந்து மதம் பெற்றுள்ளது என்பது தெளிவு.

மக்கள் பொழுது போக்கிற்குச் சூதும் சதுரங்கமும் ஆடினுர்கள் என்பதற்கு அறிகுறியாக சலவைக் கல்லால் செய்யப்பட்ட சூதாட்டக் கருவிகள் கிடைத்துள்ளன. இறந்தவர்களைச் சிலர் புதைத்தனர், சிலர் சுட்டனர், மற்றுஞ் சிலர் சுட்டு, சாம்பலைப் புதைத்துச் சமாதி எழுப்பினர். இறந்த கணவனுடன் மனைவி இறக்கும் வழக்கமும் இருந்திருக்கலாம். போர்வீரர்கள் வகுப்பென்று ஒன்றும் தனியாக அக்காலத்தில் இல்லாததைக் கொண்டு போர் அதிகமாய் நிகழவில்லை, மக்களிடம் அமைதி நிலவிற்று என்று கொள்ளலாம். ஆகவே இவர்களை விட போர்த்திறமை பெற்ற மக்கள் நல்ல வலியுடைய கருவிகளைக் கொண்டு போரிட்ட போது இவர்கள் அவர்களுக்கு இடம் கொடுத்துப் பின்னடைந்தனர் போலும்.

முத்திரைகள், கற்கள், செப்புத் தகடுகள் முதலியவற்றின் மீது காணப்படும் சித்திரவெழுத்துக்கள் எகிப்து, ஏலாம் (Elam) சுமர் (Sumer) முதலிய நாடுகளில் காணப்படும் எழுத்து வகையை ஒத்திருக்கின்றன. மொஹெஞ்சோ-தரோ முத்திரைகளிற் காணும் சித்திரவெழுத்திற்கும், திருநெல்வேலியில் கிடைத்துள்ள வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பானை சட்டிகளிலும், நாணயங்களிலும் ஹைதராபாத் சமாதிகளிலும், நீலகிரி மலையில் பொறித்துள்ள கல்வெட்டுகளிலும் காணப்படும் சித்திரக் குறிகளுக்கும் ஒற்றுமை காணப்படுகிறது. சிந்துவெளி எழுத்துக்கள் உச்சரிப்பைக் குறிப்பன. வலப்புறத்திலிருந்து இடப்புறமாக அம்மக்கள் எழுதினுர்கள். ஒரோவிடங்களில் வலமிருந்து இடமும் அடுத்த வரியில் இடமிருந்து வலமாகவும் எழுதினுர்கள். முத்திரையின் குறி ஒவ்வொன்றும் (சீன மொழியைப் போல ஒரு சொல்லாகும். 396 எழுத்துக் குறிகள் இருந்தனவென்று கணக்கிடப்பட்டுள்ளன. இது வடமொழியல்லவென்பது உறுதி. தமிழாயிருக்கலாமென்று ஹீராஸ்பாதிரி எண்ணி முத்திரையிலிருந்து வேல், உழவன், ஆண்டு, நண்டு, போன்ற சில சொற்களையும் ஆராய்ந்து கண்டு பிடித்துள்ளார். மொகெஞ்சொ-தரோ மக்கள் முன்-திராவிட மொழி

2. சிவமென்னுஞ் சொல் செம்மை, இனிமை, நன்மை என்ற பொருள்களுடைய தமிழ்ச் சொல்.

3. G. O. Gangoly.

(Proto-Dravidian)யைப் பேசியிருக்கலாம். சிந்துவெளி எழுத்துக்குறிகள் பழைய திராவிட மூல எழுத்துக் குறிகளிலிருந்து பிறந்து தமிழர் வட்டெழுத்தாய் வளர்ந்தது என்றும் எழுத்துகளை அறியாத ஆரியர்[4] இவ்வெழுத்துக்களை வளர்த்து அசோகர் காலத்துப் பிராமி எழுத்துகளை உண்டாக்கிப் பின்னர் அவற்றை வடமொழிக்கேற்ப நாளடைவில் மாற்றி அமைத்துக் கொண்டனர் என்றும் பேராசிரியர் லாங்டன் (Prof. Laugdon) டாக்டர் ஹண்டர், (Dr. Hunter) ஹீராஸ் பாதிரி முதலிய மொழி நூல் வல்லுனர் ஆராய்ந்து கண்டனர். சிந்துவெளி எழுத்துகளைக் கொண்ட மொழி பழைய திராவிடமாகும்.

மொஹெஞ்சோ-தரோவின் நாகரிகம் இற்றைக்கு ஐயாயிரமாண்டுகளுக்கு முந்தியதெனில் எட்டு முறை புதுப்பிக்கப்பட்ட ஹரப்பாவின் நாகரிகம் இன்னும் முற்பட்டது. சரித்திரகாலத்திற்கு முற்பட்டமக்கள் என்று சொல்ல முடியாத அளவிற்கு அவர்கள் நாகரிக வாழ்க்கை பல வகையிலும் உயர்ந்திருந்தது. சிந்துவெளி நாகரிகம் புதுக் கற்காலத்தின் அந்தமும் உலோக காலத்தின் தொடக்கமுமாகிய காலம் (Chalcolithic Age) என்று சொல்லலாம். சிந்துவெளியில் கிடைத்துள்ள சில சாசனங்களில் காணப்படும் இராசிமண்டலக் குறிப்பைக் கணித்துப் பார்த்தால் அக்காலம் கி. மு. 5610 க்கு முற்பட்டது எனக் கூறலாமென ஹீராஸ் பாதிரி எழுதியுள்ளார். இவ்வளவு சிறந்த நாகரிகம் ஒரு சில நூற்றாண்டுகளில் தோன்றி வளர்ந்திருக்க முடியாது. பல்லாயிரமாண்டுகளாய் மக்கள் உழைப்பை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்திருக்கவேண்டும். மேலே கூறியவற்றால் இந்திய நாகரிகத்தின் மூலத்தைக் காண சிந்துவெளிக்குத்தான் செல்லவேண்டுமென்பதில் ஐயமுண்டோ?

ஐயாயிர மாண்டுகட்கு முன்பு ஆராய்ச்சியாளர் கண்ட இந்நாகரிகத்திற்கும், இதற்கு இரண்டாயிர மாண்டுகட்கு பின்பு இதே சிந்துவெளியில் தோன்றிய ஆரிய நாகரிகத்திற்கும் எவ்வித ஒற்றுமையுங் காணவில்லை. இரண்டு நாகரிகங்களும் முற்றிலும் மாறுபட்டவை. முரண்பட்டவை கூட. ஒரு சில வேற்றுமைகளை மட்டும் ஈண்டுக் குறிப்பிடுவோம். ஆரிய நாகரிகம், பயிரிட்டு ஆடுமாடு மேய்த்து, கிராமங்களில் எளிய வாழ்க்கை நடாத்திய மக்களின் நாகரிகம். வேதகால ஆரியர் இறைச்சியை உண்டபோதிலும் மீனை வெறுத்தனர். ரிக்வேத ஆரியர் வெள்ளியை அறியார்; ஆனால் அவர்கள் இரும்பைப் பயன்படுத்தினார்கள். சிந்துவெளி மக்கள் இரும்பை அறியார்; பொன்னிலும் வெள்ளியை மிகுதியாகப் பயன்படுத்தினார்கள். ரிக்வேத காலத்தில் குதிரை உண்டு. வேத சமயத்தில் பசுவிற்குக் கொடுத்த உயர்வும் காட்டிய மதிப்பும் சிந்துவெளியில் நாம் காணவில்லை. அங்கு எருதே உயர்வாக மதிக்கப்பட்டது. வேத காலத்தில் உருவ வழிபாடில்லை. பெண் தெய்வம் பேசப்பட வில்லை. சிந்துவெளியில் தீ வணக்க மில்லை.

சிந்துவெளி நாகரிகம் மானிட வரலாற்றிலேயே ஒரு பெரிய விந்தையாக இருந்து நாகரிக உலகில் நம் நாட்டிற்கு ஒரு முன்னணியும் தமிழர்களுக்குத் தனிப்

4. வேதம் 'எழுதாக்கிளவி' என்று குறிப்பிடப்படுவது இதற்குச் சான்று.

பெருமையும் தருகிறதென்பதை நினைக்குங்கால் நம் மக்கள் பெருங் களிப்பு அடையாமலிருக்க முடியாது. இதுபோல் தமிழகத்தில் காவிரிப்பூம்பட்டினம், உறையூர், வஞ்சி முதலிய இடங்களில் ஆராய்ச்சி செய்து இன்னும் புதையுண்டு கிடக்கும் நம் தமிழரின் புகழ் வெளிப்படும் நாள் எந்நாளோ?

மொகெஞ்சதரோ, ஹரப்பா நகரங்கள் திடீரென்று மண்ணால் மூடப்பட்டு, சிந்துவெளி நாகரிகம் அழிந்து போனதற்குக் காரணம் விளங்கவில்லை. சிந்துநதி தன் போக்கை அடிக்கடி மாற்றிக் கொள்வதாலேற்பட்ட வெள்ளமோ, வெப்ப தட்ப நிலையோ, பூமியின் அதிர்ச்சியோ, பகைவரின் படையெடுப்போ காரணமாயிருக்கலாம் என்று ஊகிக்கவேண்டியுள்ளது.

காந்தியடிகளும் பென்சில் துண்டும்

'ஒரு சமயம் நான் பாபுவின் அருகில் உட்கார்ந்திருந்தேன். அப்போது அவருடைய சிறிய பென்சில் துண்டு காணமற் போய் விட்டது. அதைப் பாபு தேடத் தொடங்கினர். அவர் பென்சில் துண்டைத் தேடும் செய்தி ஆஸ்ரமம் எங்கும் பரவிற்று. அங்கிருந்த எல்லோரும் பென்சிலைத் தேட ஆரம்பித்தனர். ஆனல் அது கிடைக்கவில்லை. எனவே ஒருவர் ஒரு புதிய பென்சிலைக் கொண்டு வந்து பாபுவிடம் கொடுத்தார். 'இது எனக்கு வேண்டியதில்லை, என்னுடைய சிறு பென்சில் துண்டே தான் எனக்கு வேண்டும்' என்று உறுதியாகக் கூறினர். பின்பு மற்றொருவர் ஒரு சிறிய பென்சில் துண்டைக் கொண்டு வந்து கொடுத்தார். 'மற்றொருவர் பென்சில் துண்டை நான் ஏற்கமாட்டேன். உன்னுடைய குழந்தையை நீ இழந்து விட்டால், அக்குழந்தைக்குப் பதிலாக வேறொருவர் குழந்தையை உன்னிடம் கொண்டு வந்து கொடுத்தால் நீ ஏற்றுக் கொள்வாயோ?' என்று கூறி மறுத்தார். இதற்குப் பிறகு எல்லோரும் மிக்கத் தீவிரமாக பென்சில் துண்டைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டார்கள். கடைசியாக அந்தச் சிறு துண்டு கிடைத்தது! அதைக் கொண்டு வந்து பாபுவிடம் கொடுத்தார்கள். அதை அவர் வாங்கிக் கொண்டு புன்னகை பூத்தார். அப்புன்னகையில் வெற்றி விளங்கியது!'

— மீராபென்

உயிரினிய நண்பரிருவர் வீதி வழியே உரையாடி நடந்து செல்லும் காட்சியைக் காட்டுகின்றது இப் பகுதி. இஃது இத்தொடர்கதையின் முதற் பகுதி.

சுழற் காற்று

திரு தா.ஏ.ஞானமூர்த்தி, B.O.L.

இரவு ஒன்பது மணி. விண்ணில் திங்களஞ் செல்வன் தண் கதிர் பரப்பி மண்ணுலகத்தார்க்கு மகிழ்ச்சி தந்து விளங்கினான். இங்ஙனம் பலருக்கும் இன்பம் தரும் நிலவு ஒரு சிலருக்கு வெய்தாகி அவர்களைப் பெரிதும் வாட்டியது. காதலரைப் பிரிந்த மாதர்களும் மாதர்களைப் பிரிந்த காதலர்களும் சந்திரனின் தண் கதிரால் வெந்து சாம்பினர். ஒருவருடைய செயல் எவ்வளவு நன்மை யுடையதாயிருப்பினும் அஃது அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாக அமைவதில்லை. அதனால் இன்பம் அடைபவர் பலரேனும், துன்பமுறுபவர் சிலர் இருப்பர். இஃது இவ்வுலகத் தியற்கை. இவ்வுண்மையை உணர்த்தியது அந்நிலவொளி.

இந்நிலா ஒளியிலே சென்னை மாநகரத்து ஒரு வீதியின் வழியாக இருவர் பேசி அளவளாவிக் கொண்டு மெதுவாக நடந்து வந்தனர். அவ் வீதியின் இரு மருங்கிலும் ஆங்காங்கு அகன்று உயர்ந்த மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன; இதனால் ஒளியும் இருளும் கலந்த வெளியாக அவ் வீதியின் வழி விளங்கியது. அங்குமிங்கும் ஒரு சில நீண்ட மாளிகைகள் தம் சுற்றுப் புறச் சோலைகளோடு கண்களுக்கு விருந்தாகத் திகழ்ந்தன. அவ்வழியிலே இவ்விருவரைத் தவிர ஆங்காங்கே இரண்டொருவர் நடமாடிக் கொண்டிருந்தனர்.

'இச் சந்திரனொளி நம் சிந்தையை எவ்வளவு கவர்கின்றது, கண்ணா!' என்று சந்திரனை நோக்கி வியந்த வண்ணம் உரைத்தான் அவ் விருவரில் ஒருவன்.

"கைபுனைந் தியற்றாக் கவின் பெறு வனப்பு" என்று நம் பண்டைச் சான்றோர்கள் இயற்கைத் திறனை அறிந்து கூறியிருப்பது முற்றும் பொருந்தும், முருகா."

'குளிர்ச்சியான கதிர் வீசி உலகமெலாம் ஒளிபரப்பும் இந்நிலவின் செயல் தண்ணளி நிறைந்த சான்றோரின் செயலை ஒத்திருக்கின்றதல்லவா?' என்றான் முருகன்.

'இந் நிலவொளியில் நெடுந்தூரம் நடந்தாலும் நமக்குக் களைப்பு ஏற்படாது. நடக்க நடக்க நம் உள்ளத்திலே உற்சாகமே மேலிடுகின்றது.'

'ஆ! ஆ! இயற்கையின் அழகே அழகு!' என்று நில எழிலை வியந்த வண்ணம் சிறிது நின்றான் முருகன்.

'நமக்கே இவ்வளவு இன்பத்தை இந் நிலவொளி ஊட்டுமாயின்

நீண்டுயர்ந்த மாளிகையின் நிலா முற்றத்திலே உலாவும் இன்பக் காதலர்களுக்கு இஃது எத்துணை களிப்பினை மிகுவிக்கும்!'

'என்ன கண்ணா! உனக்குக் காதலுணர்ச்சி பெருகிவிட்டது போலும்! நல்ல காளைப் பருவம் அல்லவா? உன்மீது தவறில்லை. உன் பருவத்தின் தவறுதான்' என்று முருகன் சொல்லிச் சிரித்தான்.

'காதலைக் கடந்து விட்டவன் போலப் பேசுகிறாயே. உன் சிந்தைக் கினிய நங்கை கிடைத்தால் அவளை வெறுத்துத் தள்ளிவிடுவாய் போலும்!' என்று கண்ணனும் சிரித்துக் கொண்டே பதிலுரைத்தான்.

'கருத்துக் கேற்ற கட்டழகி கிடைத்தால் அவளை வெறுத்துத் தள்ளுபவரும் இம் மண்ணுலகில் உண்டோ? உண்டாயின் அவர்களை உன்மத்தர் என்றே ஒதுக்க வேண்டும். இறைவன் படைப்பில் இன்பந்தரும் அழகால் இணையற்று

விளங்குபவர் இளநங்கையர் அல்லவா? எனினும் கண்ணு, அவர்கள் நிலை பெரிதும் இரங்கத் தக்கது, என்று பரிவு மிக்க குரலில் கூறினன் முருகன்.

'என்ன முருகா, உனக்கு அவர்க ளிடத்தில் திடீரென இவ்வளவு இரக்கம்?' என்ருன் கண்ணன்,

'நாம் இப்பொழுது திரையில் பார்த்த கதையானது பெண்கள் பால் என் இரக்கத்தை மிகுவிக் கின்றது. எத்துணை இளம் கட்டழகியர் தம் கணவன்மார்களை இழந்து வாழ்க்கை குன்றித் தாழ் வுற்று மெலிகின்றனர்! பெண்கள் இயல்பாகவே மென்மையும், பொறுமையும், அமைதியும் உடையவர்கள். தொண்டு புரிவதே அவர்கள் தொழிலாக அமைகின் றது. ஒரு குடும்பத்திலே ஒரு பெண் எத்தனைத் தொல்லைகளைத் தாங்க வேண்டியிருக்கிறது! கண வன் கொடியனுயின் மனைவி படு கின்ற பாடு சொல்ல முடியுமா?' என்று முருகன் நெஞ்சம் நெகிழ்ந்து உரைத்தான்.

'கணவன் கொடியனுயின் மனை வியர் அடையும் துன்பம் அளப் பரிதுதான். ஆனல் மனைவி கொடியளானல்?'

'கூறவும் வேண்டுமோ? கணவன் வாழ்க்கை நரகந்தான். ஆனல் அத்தகைய பெண்கள் பெண்கள் அல்ல. அவர்கள் பெண் உருவத் தில் நடமாடும் பேய்களே. நான் இரங்குவது நல்லியல்பு வாய்ந்த மெல்லியலார்களைக் குறித்தே, கண்ணு!

'எனினும் அவர்களிடத்தில் உனக்கு இவ்வளவு இரக்கம் கூடாது, முருகா.'

'ஏன் உனக்குப் பெண்களிடத் திலே இவ்வளவு வெறுப்பு? அவர்கள் நிலையை நினைக்கும் போது உன் உள்ளம் இரங்க வில்லையா?

உண்மையில் கணவனை இழந்த கட்டழகியர் நிலை பெரிதும் இரங் கத் தக்கதே. என் செய்வது? நம் சமுதாயம் அவ்வகையிலே அமைந் திருக்கிறது' என்ருன் கண்ணன்.

'இச் சமுதாய சீர்கேடுகளைச் சுட் டெரிக்க வேண்டும். இஃது இளை ஞர்களாகிய நம்முடைய இன்றி யமையாக் கடமையாகும்.' என்று முருகன் உணர்ச்சி வேகத்தோடு விளம்பினன்.

'நீ சொல்வது முற்றும் பொருந் தும் முருகா. சமுதாய சீர்திருத் தத்திற்கு நீ வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது என் விருப்பம். கணவனை இழந்த கட் டழகி ஒருத்தியை உன் இன் னுயிர்த் துணைவியாய் ஏற்றுக் கொள்வாய் என்று நம்புகிறேன்' என்று முகத்தில் புன்முறுவல் பூக் கப் புகன்ருன் கண்ணன்.

'என் மனதுக் கேற்ற அத்த கைய மங்கை கிடைப்பாளாயின் அவளையே நான் வாழ்க்கைத் துணை வியாகக் கொள்வேன். இதுவே இனி எனக்குப் புகழும், கருமமும், தருமமும் ஆகும்' என்று உள்ள முவந்து முருகன் உரைத்தான்.

இங்ஙனம் முருகனும் கண்ண னும் தம் கருத்தில் தோன்றியவை களைப் பற்றி அளவளாவிப் பேசிக் கொண்டு வீதி வழியே நடந்து வந் தனர். திரைப்படக் காட்சியைக் கண்டு அவர்கள் வீடு திரும்பினர் களாகையால் அவர் தம் நெஞ்சில் அப்போது திரையிற் கண்ட

கதையே குடிகொண்டிருந்தது. அவர்கள் கண்ட கதையானது இளம்பருவத்திலேயே கணவனை இழந்த பெண்ணொருத்தியின் துன்பங்களை எடுத்து விளம்புவதோடு நம் சமுதாய சீர்கேடுகளை நன்கு விளக்குவதாயும் இருந்தது.

முருகனும் கண்ணனும் உயிரினிய நண்பர்கள். அவர்கள் அன்பு எல்லையற்றது. அவர்கள் அன்பிற்கு உவமையாகும் பொருள் இவ்வுலகில் இல்லை எனலாம். அவ்வன்பு வெள்ளத்தின் முன் பெருங்கடலும் குறுகித் தோன்றும். அவ்விருவரும் ஒத்த உணர்ச்சி உடையவர்கள். அவர்கள் எங்குச் சென்றாலும் பெரும்பாலும் இருவராகவே சேர்ந்து செல்வார்கள். இங்ஙனம் நிழல்போல் இணைபிரியாது ஒத்த உணர்ச்சியோடு விளங்கிய கண்ணனும் முருகனும் பல ஆண்டுகள் ஒன்ருகக் கல்வி பயின்று வந்தவர்கள். நாளடைவில் அவர்கள் அன்பு பெருகி நட்பு வளர்ந்து ஈருடல் ஓருயிர் ஆயினர்.

முருகன் பெருமிதத் தோற்றம் உடையவன். அவன் மேனி கரு நிறம். பொதுவாக மக்கள் பொன்னிற மேனியையே அழகுடையதாகக் கருதுவார்கள். கருநிறமேனி அவர்களுக்கு அழகாகத் தோன்றுவதில்லை. ஆனல் முருகன் உடலழகைக் கண்டவர்கள் அவன் கரு நிறப் பொலிவிலே தம் கருத்தையெல்லாம் இழந்து நிற்பர். அது மட்டோ! கருநிறம் பொன்னிறத்தை வென்று விட்டதே என்று வியப்பர். கரு நிறத்தாற் பொலிந்தவர்களையே அழகிற் சிறந்தவர்கள் என்று நம் பண்டைப் புராணங்கள் புகழ்ந்து பேசுகின்றன. மன்மதன், இராமன், கண்ணன், இந்திரன், உமாதேவியார் முதலியவர்கள் அழகு என்னே! அழகே உருவாகத் திகழ்ந்தவர்கள் அல்லவா? இவர்கள் அனைவருடைய உடல் நிறம் கரு நிறமே. நம்முடைய சான்ருேர்கள் கருநிறத்திலே அழகு கண்டார்கள். அவர்கள் கண்ட அழகு முருகன் உடலிடத்தே பொருந்தி விளங்கியது.

மலர்ந்த மார்பும் உயர்ந்த தோளும் பரந்த நெற்றியும் முழந்தாள் அளவும் நீண்ட கைகளும் பொருந்தி உயர்ந்த தோற்றத்தோடு வீதிவழியே முருகன் சென்ருல் அவனைக் கண்ணுறும் பெண்கள் எவரும் தம் சிந்தையை அவனிடத்துப் பறிகொடுக்காமல் இருக்கமுடியாது. அவர்கள் தம் கற்பின் திறத்தால் சிந்தையினை எவ்வளவு ஈர்த்துக் கட்டுப் படுத்திலும் கற்பினை முறியடித்துச் சிந்தை முருகனிடமே சென்று அடைக்கலம் புகும். இங்ஙனம் இவன் எழிலில் ஈடுபட்டு வாடிய இளமங்கையர் [illegible]க்கிலர்.

முருகன் கல்வியறிவிலும் சிறந்து விளங்கினன். அவன் 'எம். ஏ.' பட்டத் தேர்வில் முதன்மையில் தேறினவன் என்ருல் அவன் கல்வியின் பெருமையை விளக்கவும் வேண்டுமோ? அவன் உள்ளம் கருணை உள்ளம். அது கருணை நிறைந்தது என்று கூறுவது தவறு. கருணையே அவன் உள்ளம் என்பதே பொருந்தும். வருத்தமுறும் உயிர்களை அவன் கண்டால் போதும். அவன் மனமெலாம் உருகிவிடும். அவற்றின் துன்பத்தைப் போக்கும் வரையில் அவன் மனம் அமைதியுருது. பிற உயிர்களின் துன்பத்தைப் போக்குவதிலே ஒப்பற்ற இன்பங் காண்பவன் முருகன். இத்தகைய பொன்னுள்ளம் படைத்தவர்கள் இந் நிலவுலகில் தோன்றுவது அரிதே யல்லவா?

இங்ஙனம் உடலழகும் உள்ள அழகும் செயலழகும் ஒருங்கே அமையப் பெற்ற முருகனுக்குத் தகுதியான நண்பனுகத் திகழ்ந்தான் கண்ணன். இவனும் இனிய பண்பு வாய்ந்தவன்; பொன்மேனி படைத்தவன். இவனுடைய அழகு முருகன் அழகுக்கு இணையாகாமற் போயினும் அழகுடையவர் வரிசையிலே வைத்து எண்ணுதற்குரியவன். இவனும் கல்வி மிகுதியுடையவன். 'பி. ஏ' பட்டம் பெற்ற பிறகு சட்டக் கல்வி பயின்று அத்தேர்விலும் சிறப்பாகத் தேறினவன். தலைசிறந்த வழக்கறிஞனுகத் திகழ வேண்டுமென்பது அவனது வாழ்க்கையின் நோக்கம்.

இருவரும் ஏறக்குறைய ஒத்த வயதுடையவர்கள்; இருபத்திரண்டு அல்லது இருபத்து மூன்று வயதுடைய இளங்காளைகள் எனலாம்.

உயிரினும் இனிய நண்பர்கள் ஒன்று கூடினுல் அவர்கள் அளவளாவி உரையாடும் தன்மை இத்தகைத்து என்று கூறவும் வேண்டுமோ? முருகனும் கண்ணனும் பலவற்றைப் பற்றிச் சுவையாகப் பேசிக் கொண்டே கண்ணன் வீட்டினை அணுகினர்.

கண்ணன் வீடு நெருங்கியதும் முருகன், 'கண்ணு, நான் போய் வருகிறேன்' என்ருன்.

'போய் வருவதா? முடியாது. இன்று என் வீட்டில் உணவருந்திய பிறகுதான் போக வேண்டும்!' என்று கண்ணன் முருகன் கையைப் பிடித்திழுத்தான்.

'என்ன கண்ணு, அம்மா வீட்டிலே தனியாக உணவு கொள்ளாமல் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள் என்பது உனக்குத் தெரியாதா? இப்போது மணி ஒன்பதரையாகிவிட்டது. என்னை விடு. பிடிவாதம் செய்யாதே!

'முருகா, நான் விடவே மாட்டேன். சாப்பிட்ட பிறகுதான் போகவேண்டும். இன்று என் வீட்டிலே உனக்கு மிகவும் விருப்பமான உணவு செய்திருக்கிருர்கள். உன்னை விடுத்து நான் அதை எப்படி உண்ண முடியும்? விரைவிலே உன்னை அனுப்பிவிடுகிறேன், வா' என்று முருகன் கையை இறுகப் பிடித்து இழுத்துக் கொண்டே கண்ணன் வீட்டிற்குள் நுழைந்தான்.

உள்ளன்பு மிக்க நண்பர்கள் எந்த இனிய பொருளையும் தனித்து உண்ண மாட்டார்கள் அல்லவா? நண்பரோடு கலந்துண்டாலன்றி அவர்தம் உள்ளம் அமைதிபெருது. உண்மை நட்பின் திறம் அது!

(தொடரும்.)

'கலைக்கதிர்'

ஆண்டுச் சந்தா ரூ. 6.

கலையின் களஞ்சியம் சிந்தனைச் செல்வம்

உள்ளத்தின் உண்மை

குறிப்பு:— மனிதனின் குறைபாடுகள் பல. நன்கு ஆராய்ந்தால் இக் குறைகள் பலவற்றிற்கு உள்ளமே காரணமாக அமைந்திருக்கின்றது என்பது புலனாகும். உள்ளத்தைப் பற்றிய கேள்விகளுக்கு உள நூல் ஆசிரியர் திரு. தா. ஏ. சண்முகம் அவர்கள் இப் பகுதியில் தக்க விடையளிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். அன்பர்கள் கேள்விகளை எழுதி உள்ளத்தின் உண்மையை உணரலாம்.

கேள்விகள் சுருக்கமாக இருத்தல் வேண்டும். கேள்விகளை எழுதி அனுப்புவோர் பெயர்கள் வெளியிடப் பெறா. எனினும் கேள்விகளோடு அவர்களுடைய பெயரையும் முழு முகவரியையும் குறித்து ''ஆசிரியர், 'கலைக்கதிர்' பூளைமேடு, கோயமுத்தூர்'' என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

1. ஆண்களும் பெண்களும் வாழ்க்கையில் ஒருவருடன் வாழும் உளப் பான்மை இயற்கையில் படைத்தவர்களா, அல்லது சமுதாய அமைப்பு (Social System) அவ்வாறு வாழும்படி செய்கிறதா?

ஆண்களும் பெண்களும் வாழ்க்கையில் ஒருவருடன் வாழும் உளப்பான்மை இயற்கையில் படைத்தவர்கள் அல்லர். அது அவரவர்கள் வாழும் சமுதாய அமைப்பே அவ்வாறு வாழும்படி செய்கிறது. இந்த உண்மையை, உலகத்துப் பல்வேறு மக்களின் பழக்க வழக்கங்களை ஆராய்ந்தால் நன்கு விளங்கும். இன்னும் உலகத்துப் பழங்குடி மக்களின் வாழ்க்கையையும், நடைமுறையையும் ஆராய்ந்து பார்த்தால் இதன் உண்மை புலப்படும். மேலை நாட்டுப் பழக்கவழக்கங்களை ஆராய்ந்தால், பொதுவாக ஒருவனோ, ஒருவளோ, ஒரு மனைவியையோ, ஒரு கணவனையோ கொள்ளலாம். எனினும் 'விவாகரத்து' முறை (divorce) ஆணும் பெண்ணும் பலரை மணந்து வாழ வாய்ப்பு அளிக்கின்றது அன்றோ!

இந்திய நாட்டிலே இந்து மதத்தைத் தழுவி வாழும் மக்களிடையே பல்வேறு பழக்கங்களும், வழக்கங்களும் இருந்த போதிலும், பொதுவாக ஓர் ஆண் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொள்ள அனுமதி அளிக்கின்றது. ஒரு பெண் பல ஆண்களை ஒரு சமயத்தில் மணந்து வாழ இந்த 'ஆண்கள் உலகம்' அனுமதிக்காததன் காரணமாக ஒரு பெண் பல ஆண்களை ஒரு சமயத்தில் மணந்து வாழும் வழக்கம் இங்கு இல்லை. முகம்மதியர் சமூகத்தை ஆராய்ந்தால், எப்படி ஓர் ஆண் பெண்களோடு வாழ அனுமதிக்கின்றது என்று தெரிகிறது.

2. விடியற்காலையில் பாடங்களைப் படிப்பது நினைவிலிருக்குமா, அல்லது முன்னிரவிலும் நடு இரவிலும் படிப்பது நினைவிலிருக்குமா?

நீர் படிக்கும் பாடத்தில் ஆர்வம் இல்லாவிடில் நீர் எந்த நேரத்தில்

படித்தாலும் அது நினைவிலிருக்காது. எப்படி ஒருவன் பசியின்றி உணவு உண்டானானால் அது தக்க முறையில் ஜீரணமடைந்து உடம்பில் வெவ்வேறு சத்துக்களாக மாறுதோ, அதே போன்று ஆர்வமற்று ஏதோ பரீட்சையில் தேற வேண்டுமே என்று படிப்பது வீணே. எனினும், உம் கேள்விக்கு நேராக பதிலளிக்க முடியாது. ஏனெனில் படிக்கும் முறை, நேரம் முதலியவைகள் அவரவர்கள் பழக்கத்தினால் அமைவதாகும். நீரே இதற்குத் தகுந்த முறை உம்மை ஆராய்ந்து எந்த நேரத்தில் படித்தால் பாடங்கள் நினைவிலிருக்கும் என்று பார்த்துத் தெரிந்து கொள்வதே நலம்.

3. எனக்குச் சில பயங்கள் 7, 8 வருடங்களாக இருக்கின்றன... காதில் தோடு போட்டுக் கொண்டால் சரியாக போட்டு விட்டோம் என்ற திடம் ஏற்படுவதில்லை...... இரவில் வாசற்கதவு தாழ்ப்பாள் போட்டால் போட்டு விட்டோமா என்பது கொஞ்சத்தில் புரிவதில்லை...... எப்போதும் ஏதோ ஒரு வித பயம் இருக்கிறது?

நீர் கூறியிருக்கும் அறிகுறிகள், அதிகக் கவலைக்குரிய உள்ள நிலையைக் காண்பிக்கா விட்டாலும், சிறிது பிறழ்வான உள்ள நிலையையே காண்பிக்கின்றன. இது போன்ற அறிகுறிகள் மக்களிடையே தற்போது மலிந்து கிடக்கின்றன. பல்வேறு வழிகளில் கேள்விகளும் எம்மை அடைந்திருக்கின்றன. உம்மிடத்தே ஏற்பட்டிருக்கும் உள்ள நிலைக்குத் தனிப்பட்ட காரணங்கள் இருக்கும். அவைகளை உளப்பாகுபாடு முறையைக் கொண்டே கண்டு பிடித்து நிவர்த்தி செய்ய வேண்டும் (Psychotheraphy). இதை விட்டு, நீர் உம் கடிதத்தில் குறித்திருக்கிறவாறு 'fever theraphy'யையே, போலி மாந்திரீகர்களைக் கொண்டு, ஹிப்னாடிச முறையை முயற்சி செய்வதினால், உம் உடலுக்கும் உள்ளத்திற்கும் தீங்கையே தேடிக் கொள்வீர்.

நீங்கள் கூறியிருக்கும் உள்ளக் கோளாறுக்குப் பொதுவான அடிப்படையான காரணம் ஏதோ 'குற்ற உணர்ச்சி' (Sense of guilt) யாகும். இந்தக் குற்ற உணர்ச்சி, உடலிற்கும் உள்ளத்திற்கும் இயற்கையான மெய்ப்பாடுகள் (emotions) உள்ளத் துடிப்புகள் (impulses) இச்சைகள் (desires) முதலியவை தூண்டப்பட்டு வெகு வலிமையுடன் வெளிவர இருக்கும் போது, அதை வெளியிடுவது தவறு என்று சமூகத்திற்கு அஞ்சி ஆழ்ந்த உள்ளத்தில் (unconscious mind) அடைக்கப் படுவதால், இது போன்று அறிகுறிகளின் வழியாக அந்த இச்சைகள் வெளி வரலாம். சமூகத்திற்கு ஒவ்வாத இச்சைகளை நமது நனவு உள்ளமே வெளி வராது தடுத்து ஆழ்ந்த உள்ளத்தில் அழுத்தலாம் (Suppression) அல்லது நம்மை அறியாதே ஆழ்ந்த உள்ளத்திற்கும் நனவு உள்ளத்திற்கும் நடுவே இருக்கும் 'சூபர் ஈகோ' (Super ego) என்ற உள்ள சக்தி இந்த இச்சைகளை உள்ளடக்கலாம் (Repression). மற்றும், உம்மிடம் தோன்றிய அறிகுறிகள் 7, 8 வருடத்திற்கு முன்னே ஏற்பட்டிருந்தாலும், இவைகளுக்கு அடிப்படையான 'குற்ற உணர்ச்சி' உமது குழந்தை பருவத்திலோ, அல்லது குமரிப் பருவத்திலோ ஏற்பட்டிருக்கலாம். இவைகளையெல்லாம் முதலிலே கூறியவாறு உளப்பாகுபாடு முறையைக் கொண்டு தான் திட்டமாகக் கூற முடியும்.



இயற்கையில் இறைவன்



யூசிஸ்

விண்ணை அளக்கும் 'பலோமர்' கோபுரம்

(ஆவணி இதழில் வெளிவந்த 'அண்டத்திற்கு அப்பால்' என்ற கட்டுரையைப் பார்க்கவும்)



—யூசிஸ்.

'பலோமர் மலைமீதுள்ள தொலைநோக்கியின் 200 அங்குலக் கண்ணாடியை அறிஞர் சோதிக்கிறார்.'

தாயும் சேயும்

(11-ம் நூற்றாண்டு) —பி. இ. பி.

* 'மொழியின் அமைப்பு முறையே இலக்கணம் எனப் போற்றுதல், இலக்கணமே வேண்டாம் எனத் தூற்றுவது கண்மூடித் தன்மையாதல்.'
* 'உள்ளத்தில் உண்மையொளி வீசிய உடனே வாக்கினிலே கலையொளி பிறக்கவேண்டும்.'

உள்ளத்தின் ஒளி

டாக்டர். மு. வரதராசன், M. O. L., PH. D.

எட்டுத் திங்கள் ஆனதும் குழந்தை எடுத்து அடி வைக்கின்றது; என்றோ ஒரு நல்ல நாளில் இவ்வாறு அடி எடுத்து வைத்து நடக்கக் கற்றுக் கொள்கிறது. சில ஆண்டுகள் கழித்து அந்தக் குழந்தையைப் பார்த்தால், நடப்பதைப் பற்றி அது ஒரு சிறு முயற்சியும் செய்வதாகத் தெரிவதில்லை. நடக்க வேண்டும் என்று அதன் மனம் எண்ணியவுடனே, கால்கள் தாமாகவே இயங்கும் அளவிற்கு நடை இயற்கையாகி விடுகிறது.

நடக்கக் கற்றுத் தேர்ந்த பிறகு நடை இயற்கை ஆகிவிடுகிறது. நடக்கும் முயற்சியோ, அதைப் பற்றிய எண்ணமோ ஒன்றும் தோன்றுவதில்லை.

வளர்ந்த மனிதன் நடப்பதற்காக முயற்சி செய்வதாகத் தெரிந்தால், ஒன்று, கீல்வாயு முதலான நோய் காரணமாக இருக்க வேண்டும்; அல்லது முதுமையின் தளர்ச்சி காரணமாக இருக்க வேண்டும்.

ஐந்து வயதுள்ள சிறுமி மணலில் எழுதி, பிறகு பலகையில் எழுதி அ ஆ இ ஈ என்று ஒவ்வோர் எழுத்தாகக் கற்றுக் கொள்கிறாள். சில ஆண்டுகள் கழித்து, அவள் கடிதம் எழுதும்போது, அந்த எழுத்துக்களை எப்படி விளக்க வேண்டும், எப்படி நீட்ட வேண்டும், எப்படிப் புள்ளியும் கோடும் முதலானவை இடவேண்டும் என்றெல்லாம் எண்ணுவதில்லை; தயங்குவதில்லை; சிறு முயற்சியும் செய்வதில்லை. எண்ணங்களைச் சொல் வடிவாக எண்ணுகிறாள்; சொற்களைக் கை தானாகவே எழுதி விடுகிறது.

வளர்ந்து பயின்ற பிறகு எழுதும் போது தயக்கமோ முயற்சியோ நேர்ந்தால், கையில் ஏதேனும் புண்பட்டு வலிப்பதாக இருக்கலாம்; அல்லது, முதுமை காரணமான நடுக்கமாக இருக்கலாம்.

இலக்கணக் கல்வியும் அப்படித்தான். நல்ல எழுத்தாளனாகின்றவன் முதல் முதலில் இலக்கண விதிகளை முயன்று கற்றுத் தேர்கிறான்; அந்த விதிகளை நினைவில் கொண்டு பிழை நேராமல் காத்துக் கொண்டு எழுத முயல்கிறான். இந்தத் துறையில் பழகிய பிறகு, சில ஆண்டுகள் கழித்த பின், கட்டுரையோ கதையோ எழுதும்

போது அவன் இலக்கண விதிகளை நினைப்பதும் இல்லை; பிழையில்லாமல் எழுதுவது அவனுக்கு இயற்கையாகி விடுகிறது. அவன் எழுதுவன எவையும் பிழையற்றவை, எதிர்கால இலக்கணத்திற்கு இலக்கியமாகக் கொள்ளத்தக்கவை என்று போற்றப்படும் நிலமை அடைகிறான்.

கற்றுத் தேர்ந்த ஒருவன் கட்டுரையோ கதையோ எழுதும்போது தயங்குவானானால், அவன் கற்ற இலக்கணத்தில் ஏதேனும் குறை இருக்க வேண்டும்; அதனால் தான் அவனுடைய மூளையோடு இயற்கையாக ஒன்றுபடாமல் அந்த இலக்கணம் விலகி நிற்கிறது. அல்லது, எழுதுவதற்கு வேண்டிய 'சரக்குக்' குறைந்த நிலைமையாக இருக்க வேண்டும்.

எடுத்து அடிவைக்கும் பயிற்சி இயற்கையாக அமைவதுபோல், வளைத்தும் நீட்டியும் எழுத்துக்களை எழுதும் திறமை இயற்கையாகி விடுவது போல், சொற்களையும் சொற்றொடர்களையும் மொழி முறைப்படி (இலக்கணப்படி) அமைத்து எழுதும் புலமையும் இயற்கையாக அமையவேண்டும்.

இவ்வாறு அமையாத போது சிலர் திகைப்படைந்து இலக்கணமே வேண்டாம் என்னும் எல்லைக்குச் சென்று நின்று கொள்வர். உண்மையாக ஆராய்ந்தால், அவர்கள் எழுதும் எழுத்திலும் ஓர் ஒழுங்குமுறை இருக்கும் (இருக்க வேண்டும்); இப்படிப் பலர்க்கும் பொதுவாக அமைந்துள்ள ஒழுங்கு முறைக்கே இலக்கணம் என்று பெயரிட்டுள்ளார்கள்.

அந்த இலக்கணத்தை வரையறுத்து எழுதியவகையில் சில தவறுகளும் புகுந்திருக்கலாம்; அவை களையப்படவேண்டும். பொருந்தாப் பழைய விதிகளும் சில இடம்பெற்றிருக்கலாம்; அவை நீக்கப்பட வேண்டும். காலத்திற்கு ஏற்ப, புதியனவாகச் சில அமைய வேண்டியும் இருக்கலாம்; அவை அமைக்கப்பட வேண்டும். இல்லை உண்டு முதலானவை இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக வழங்கிய வரலாறு இப்படிப்பட்டதே. சந்திபிரித்துத் தெளிவுறக் குறியீடுகளை இட்டு எழுதும் புதுமுறை புகுந்ததும் இவ்வாறே. சுப்பிரமணிய பாரதியார் 'அங்குக் கண்டான், இங்குச் சென்றான் என்றெல்லாம் எழுதாமல் (அன்று கண்டான், இன்று சென்றான் முதலியன போல்) வல்லினம் மிகாமல் எழுத விரும்பிய காரணமும் இத்தகையதே. இவ்வாறு மொழியின் அமைப்பு முறையே இலக்கணம் எனப் போற்றாமல், இலக்கணமே வேண்டாம் எனத் தூற்றுவது கண்மூடித்தன்மையாகும்; நடக்கும் போது கால்களை முறைப்பட மாற்றி மாற்றி வைக்கவேண்டாம், எழுதும் போது கோடுகளிலும் வளைவுகளிலும் அளவு வேண்டாம் என்று மறுப்பதுபோன்ற கண் மூடித்தன்மையே யாகும். ஆனால், அதற்கு மாறாக, கதையும் கட்டுரையும் எழுதும் கருத்துவளம் பிறந்த பிறகும், இலக்கணம் பயின்று பல ஆண்டுகள் கழிந்த பிறகும், அந்த விதிகளை நினைந்துகொண்டும் அவற்றையே போற்றிக் கொண்டும் காலம் விணாக்குவதும் குறைபாடே ஆகும். இருபதாம் வயதில் நடைவண்டியைத் தேடுவோனுக்கும், திருமணம் ஆனபின் மணலில் எழுதிக் காண்பவனுக்கும் தோழனாகவே இந்த இலக்கணப் புலவனைச் சேர்க்கவேண்டும். இதை வற்புறுத்துவதற்காகவே, ஆங்கிலத்தில் இலக்கணத்தைப் போற்றுவதில் தேர்ந்தவன் (இலக்கணத்தில் தேர்ந்தவன் அல்ல, அதைப்

போற்றுவதில் தான்) எழுத்தாளனாகத் தகுதியற்றவன் (The best grammarian is the worst writer) என்ற புதுமொழி வழங்கலாயிற்று.

இசை, நாடகம், ஓவியம், காவியம் முதலான கலைகளுக்கும் இந்த உண்மை பொருந்தும். இசை நாடகம் முதலியவற்றைக் கற்கத் தொடங்கும் நிலமை வேறு; கற்றுத் தேர்ந்த நிலமை வேறு. தொடக்கத்தின்போது இசைவேறு தான் வேருக இருந்தது போலவே இராமல், இசைமயமாகத் தான் விளங்கவேண்டும்; நாடகம் தனக்கு இயற்கையான ஒரு கலையாகிவிட வேண்டும்; ஓவியம் அகக்கண் கண்டதைப் புறக்கண்ணிற்குக் காட்டும் இயல்பான கலையாக வேண்டும்; பாட்டு உள்ளத்தின் உணர்ச்சியைச் சொல்வடிவாக வடிப்பதற்குத்தானுகவே உற்றபோது வந்து உதவ வேண்டும்.

சிறந்த கவிஞனுக்குச் சீரும் தளையும் எதுகையும் மோனையும் இயல்பாக வந்து உதவவேண்டும். கவிஞன் உணர்ச்சியை வடிக்கத் துடிக்கவேண்டுமே அல்லாமல் எதுகைமோனையையும் சீர்தளையையும் எண்ணித் தயங்கிநிற்கக் கூடாது. உணர்ச்சிப் பெருக்கு இல்லாத தொடக்க நிலையில், மணலில் எழுதும் குழந்தைபோல் யாப்பிலக்கணம் பயின்ற தொடக்க நிலையில் சீர் தளை எதுகை மோனை முதலியவற்றை நாடி அமைத்துக் கற்க வேண்டியது தான். ஆனுல், சில ஆண்டுகள் கழிந்த பிறகும் அவற்றையே நாடிக் கொண்டிருப்பானுனுல், அவன் இந்தத் துறையை அடியோடு துறந்து வேருெரு துறையை மேற்கொள்வதே கடமை. பல நூற்ருண்டுகளாகக் கலைச் செல்வத்தில் சிறந்து பண்பட்ட தமிழகம் இதை ஒரு பழமொழியாகவே ஆக்கி விட்டது.

'காரிகை கற்றுக் கவிபாடுவதினும், பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே' என்பது கலையுலகிற்குத் தமிழ்நாடு தரும் அறிவுரை. நடக்க வேண்டும் என்று எண்ணியவுடனே, நம்மை அறியாமல் கால்கள் மாறி மாறி இயங்குவதுபோல் உள்ளத்தில் உண்மையொளி வீசியவுடனே வாக்கினிலே கலையொளி பிறக்க வேண்டும்; உணர்ச்சி தூண்ட எழுதுகோலை எடுத்தவுடன், எதுகை மோனை சிந்தனை முதலியன தாமாக வந்து அமைந்திடவேண்டும்; இதுவே கவிஞன் நிலைமை.

எதுகைமோனை முதலியவற்றை நாடித் தயங்காமை போலவே, கலைப்பயனையும் நாடித் தயங்காமல் பாடுகின்றவனே சிறந்த கலைஞன். எண்ணும் எண்ணம், உணரும் உணர்வு கலைவடிவமாக அமையாதவனே, எழுதும் போது தனியே கலைவளத்தை நாடி நிற்பான். எண்ணத்தின் அடிப்படையிலே உணர்வின் எழுச்சியிலேயே கலை வாழாவிட்டால், அவன் புறத்தே அதைத் தேடியும் பயன் இல்லை. இன்பத்தைத் தேடி அலைகின்றவன் இன்பத்தை அடையாதது போல், கலைப்பயனை மட்டும் நாடுகின்றவனும் அதைப் பெருமல் ஏங்குகிருன் என்று ஜே. ஸி. ஷார்ப் என்னும் அறிஞர் கூறியுள்ளார். (Aspects of poetry, J. C. Shairp) சிறந்த கலைவளத்தைப் பெற வழி, அதை மறந்து அப்பால் நாடுவதேயாகும் என்றும் அவர் தெளிவாக்கியுள்ளார், ஆகவே,

> உள்ளத்தில் உண்மைஒளி உண்டாயின்
> வாக்கினிலே ஒளி உண்டாகும்

என்று பாரதியார் போற்றிய அந்த உள்ளத்தின் ஒளியை நாடுவதே உயர்ந்த கலைஞனுக்குக் கடமையாகின்றது.

கோபமாகிய இயல்பூக்கம் இதன்கண் மிகத் தெளிவாக ஆராயப்படுகின்றது.

'மக்கள் இருக்கும் வரை யுத்தங்கள் இருந்துதான் ஆகும். அவற்றைத் தவிர்க்க ஒரே வழிதான் உண்டு. அதாவது விஞ்ஞானத்தின் துணை கொண்டு மனிதன் பல்வேறு இயல்பூக்கங்களின் தன்மைகளை ஆராய்ந்து அவைகளினின்று வெளியாகும் உள்ள சக்தியைப் பயனடையும் முறையில் செலுத்த முயல வேண்டும். அந்த முயற்சி முடியும் வரை உலகத்தில் அமைதி நிலவாது.

மனிதனும் சூழ்நிலையும்

திரு. தா. ஏ. சண்முகம் M.A., M.Litt.

மனிதன் இயற்கையாகவே பல ஊக்கங்களையும், மெய்ப்பாடுகளையும் உடையவனாயிருக்கிறான். இவைகள் சூழ்நிலையினின்று எழும் தூண்டல்களுக்குத் (Stimuli) தக வேலை செய்கிறது. மனிதனது தன்மை (Personality) இயல்பூக்கங்களின் துணையினாலும், சூழ்நிலையின் ஆதரவினாலும் வளர்ச்சி அடைகிறது. காம இயல்பூக்கத்தையும் அச்சமாகிய இயல்பூக்கத்தையும் அவைகளைச் சார்ந்த உடற்கிளர்ச்சிகளையும், உள்ள எழுச்சிகளையும், அவைகளின் வலிவையும், தூண்டினால் ஏற்படும் விளைவுகளையும் முன்பு ஆராய்ந்தோம். இப்போது கோபமாகிய இயல்பூக்கத்தையும் அதைச்சார்ந்த உள்ள எழுச்சியையும் நோக்குவோம்.

உலகத்திலே யுத்தங்கள், ஒரு நாட்டுக்குள்ளேயே சண்டைகள் சச்சரவுகள், கலகங்கள் அவ்வப்போது தோன்றி மக்களுக்கும் நாடுகளுக்கும் பல சேதங்களை விளைவிப்பதற்கு அடிப்படையான காரணம், மக்களிடத்தே இயற்கையாகவே அமைந்துள்ள கோப இயல்பூக்கமும், அதைத் தொடர்ந்துவரும் உள்ள எழுச்சிகளும் இந்த நாகரிக உலகத்திலே வெளிவர போதிய வாய்ப்புக்கள் இல்லாமையே ஆகும். இது பலருக்கு ஐயத்தை உண்டாக்கலாம். எனினும் இந்த உண்மையை மறுப்பார் எவரும் இலர். ஏனெனில் யுத்தமும் அதன் விளைவுகளான பீதியும், நாசமும், பஞ்சமும், பிணியும் விரும்புபவர் எவரும் இலர். யுத்தத்தில் ஈடுபட்டு, அதனால் பல இன்னல்களுக்குள்ளான மக்களது உள்ளநிலையை ஆராய்ந்தால், அவர்கள் எப்படி 'யுத்தம்' என்ற வார்த்தையையே வெறுக்கிறார்கள் என்பது நன்கு வெளிப்படும். எனினும், ஏன் அவ்வப்போது யுத்தங்கள் தோன்றுகின்றன? ஒரு நாடு மற்றொரு நாட்டை அழித்தொழிக்கச் சமாதான காலத்திலும், பல இயந்திர சாலைகளையும் ஆராய்ச்சிக் கூடங்களையும் அமைத்து வெகு துரிதமாக வேலை செய்கிறது. ஒரு நாட்டுக்குள்ளேயே அமைதி விரும்பும் மக்களிடையே கூட சண்டைகளும், சச்சரவுகளும் கலகங்களும்

நிலவுகின்றன? தன் மனைவியை அடிக்கும் வழக்கமுடைய ஒருவன் தான் செய்யும் காரியத்தைத் தன் அறிவு கொண்டு ஆராய்ந்து அது தவறு என்று ஒவ்வொரு முறையும் முடிவுக்கு வருகிறான். ஆனால் வீட்டை யடைந்ததும், தன்னையும் அறியாது மனைவி செய்யும் சிறு பிழைகளுக்கும் நையப் புடைக்கிறான்; பிறகு வருந்துகிறான். ஆம், இயற்கையாக அமைந்த கோபமானது தூண்டப்பட்டு வேலைசெய்தால் அறிவு கொண்டு வழங்கும் நீதி பின் வாங்குகிறது. இதே போன்றுதான் யுத்தம் ஏற்படுவது தவறு என்று அறிந்தும் கோபமாகிய இயல்பூக்கம் மக்களை அவர்களையும் அறியாது யுத்தத்தில் ஈடுபடுத்துகிறது. தற்போது 'சமாதானத்தை' விரும்பும் நாடுகளான அமெரிக்க ருஷ்ய நாடுகளை எடுத்துக் கொண்டால் இந்த உண்மை நன்கு விளங்கும். இந்த இரண்டு நாடுகளின் முடிவான நோக்கம் உலகத்தில் என்றும் அமைதியை நிலைநிறுத்த வேண்டும் என்பதுவே என்று கூறலாம். ஆனால் அமைதியை நிலைநிறுத்த ஒன்றோடொன்று போருக்கு முனைகின்றன. இதற்காக அணுக் குண்டுகள் போன்ற கொடிய போர்க்கருவிகள் உண்டாக்குகின்றன! யுத்தங்கள் தினசரி வாழ்க்கையில் சமூக சூழ்நிலைக்குக் கட்டுப்பட்டு மக்கள் தம் ஆழ்ந்த உள்ளத்தே (unconscious mind) அடைந்திருக்கும் மிகவும் வலிவுவாய்ந்த காமம், பயம்,கோபம் போன்ற ஊக்கங்கள் வேலைசெய்ய வாய்ப்புக்கள் அளிக்கின்றன அல்லவா! இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டுதான் ஒரு ஆங்கிலநாட்டு அறிஞர் சமாதானம் என்னவென்று விவரிக்கும்போது, அது இரண்டு யுத்தங்களுக்கு இடையே ஏற்படும் கவர்ச்சியற்ற நிலைமை என்று கூறுகிறார்.

கோபமானது இயற்கையாகவே ஊர்வன, நீர் வாழ்வன, பறவைகள், விலங்குகள் இவைகளிடையே அமைந்திருக்கிறது. இது சூழ்நிலையின் கொடுமையினின்று உயிரினங்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளப் பெரிதும் உதவுகிறது. சில சமயங்களில் கோபமாகிய இயல்பூக்கம், பயமாகிய இயல்பூக்கத்தை விட வலிவுடன் வேலை செய்கிறது. ஒரு பாம்பைத் துரத்திச் சென்று தப்பி ஓட முடியாமல் ஒரு மூலையில் நிறுத்தி விட்டால், அது தற்காப்பிற்காகப் பயத்தை எல்லாம் விட்டுக் கோபமடைந்து சீறித் தம்மைத் துரத்தி வருபவர்களின் மேல் பாய்கிறது. இங்ஙனமே பறவை விலங்கினங்களிலும் காணலாம். கோபமாகிய இயல்பூக்கம் மற்ற உயிரினங்களிடத்து இருப்பது போன்று மனிதனிடத்திலும் இருக்கிறது. இதை ஜே. பி. வாட்சன் (J. B. Watson) என்னும் அமெரிக்க நாட்டு உளநூலறிஞர் அப்போது தான் பிறந்த குழவிகளைக் (infants) கொண்டும், குழந்தைகளைக் (children) கொண்டும் ஆராய்ச்சி செய்து வெளியிட்டிருக்கிறார். சாதாரணமாகக் கோபமாகிய இயல்பூக்கம், குழவிகளிடையே, அவைகள் கைகால்களை ஆடவிடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டால், தூண்டப்படுகிறது. தூண்டப்பட்ட இயல்பூக்கம், அழுதல், கைகால்களை உதறுதல் போன்ற செய்கைகளில் வெளியாகிறது. சிறிது வளர்ச்சியடைந்த குழந்தைகளிடத்தில், அவர்கள் செய்யும் காரியங்களுக்குத் தடை விதித்தால் இந்த இயல்பூக்கம் தூண்டப்படுகிறது. அவைகள், கைகால்களை உதைத்துக் கொண்டு அழுதல், எதிரிலுள்ள பொருள்களை உடைத்தல் முதலிய செய்கைகளில் ஈடுபடுகின்றன. வாட்சன் நடத்திய

பல்வேறு ஆராய்ச்சிகளால், அச்சமான இயல்பூக்கம் தூண்டப்பட்டால் எப்படி இருதயத் துடிப்பு, இரத்த ஓட்டம், வியர்வைக் கொட்டல் முதலியவைகள் அதிகம் ஆகின்றனவோ அதே போன்று கோபமான இயல்பூக்கம் தூண்டப்பட்டால் உடலுறுப்புக்கள் வேலை செய்வதில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன என்பது தெளிவாகி யிருக்கிறது. மற்றும், இதைத் தொடர்ந்து வரும் உள்ள எழுச்சிகள், பொருள்களையோ ஆட்களையோ அழிப்பதில் மனிதனுடைய நடத்தையைத் தூண்டுகின்றன. ஆகவே, கோபமானது மற்ற பொருள்களை அழிப்பதனல், பூர்த்தியாகிறது என்று புலனாகிறது.

காமம், அச்சம் போன்று கோபமும் சமூக வாழ்விலே தடைப்பட்டு மனிதனது ஆழ்ந்த உள்ளத்திலே அடைப்பட்டு கனவுகள் மூலமாகவும், கற்பனைகள் மூலமாகவும், பல்வேறு நாடி நோய்கள் மூலமாகவும் வெளிப்படுகின்றது. மற்றும் சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்கு ஒப்பவும், கோபமானது மாற்றியமைக்கப்பட்டு (Sublimated way) வெளி வருகிறது. ஒரு சிறுவன் ஒரு பொருளை அடைவதற்கு மற்ெருரு சிறுவன் தடையாயிருந்தால், அவனை நையப் புடைத்துத் தான் அந்தப் பொருளை அடைவது போன்று கனவு காண்கிருன்; அல்லது பகற் கனவில் கற்பனை செய்கிருன். சாதாரணமாக வெளி வர ஒட்டாது தடுக்கப்படும் கோபமானது பல்வேறு வழிகளில் வெளிப்படும். சான்ருக, தன்னிடம் பலத்தில் மிகுந்த ஒருவனேடு தன் கோபத்தைக் காட்ட முடியாத ஒருவன் வழியிலுள்ள பொருள்களை அழித்துக் கோபத்தை ஒரு வழியாகத் தீர்த்துக் கொள்ளுகிருன். அதே போன்று காரியாலயத்தில் அதிகாரிகள் மேல் காட்ட முடியாத கோபத்தைத் தன் கீழ் வேலை செய்பவர்களிடம் காட்டி, ஒருவாறு சமாதானம் அடைகிருன். தூண்டப்பட்ட கோபம் மிக்க வலிவு பொருந்தியிருந்தால் அதைச் சமூகத்திற்கு அஞ்சி வெளிப்படுத்தாது அழுத்தி வைப்பது காரணமாகப் பல நாடி நோய்களும் ஏற்படுகின்றன. சான்ருக முன் கட்டுரையில் கூறிய ஒரு சம்பவத்தை இங்கு ஆராய்வோம்.

ஒரு மாமிசக் கடைக்காரன் பல ஆண்டுகளாக நல்ல இலாபம் ஈட்டித் தனது எஜமானனுக்குக் கொடுத்துத் தானும் தனக்குரிய கூலியைப் பெற்று உற்சாகமாக வாழ்ந்து வந்தான். அந்தச் சமயத்தில் இவனிருந்த மாமிசக்கடைக்குச் சிறிது தூரத்தில் மற்ெருரு மாமிசக் கடை ஏற்பட வியாபாரமும் நாளடைவில் குறைந்தது. அவ்வப்போது பார்வையிட வரும் எஜமானன் இலாபக் குறைவிற்கு மற்ெருரு கடைதான் காரணம் என்று அறிந்து கொள்ளாமல், தன் கடைக்காரனின் மேல் மறைமுகமாகத் திருட்டுப்பழியைச் சுமத்தி வந்தான். ஒரு நாள் இவர்களிடையே இது சம்பந்தமாக வாக்கு வாதம் அதிகம் ஏற்பட, எஜமானன் தனக்கு உண்மையோடு உழைத்து வரும் கடைக்காரனைத் திருடன் என்றும், துரோகி என்றும், மோசக்காரன் என்றும் கடிந்துரைத்தான். இதைக் கேட்ட மாமிசக் கடைக்காரன் அளவற்ற கோபத்தை அடைந்தான். தன் பக்கத்திலிருந்த கத்தியைக் கொண்டு எஜமானனைக் கொன்று விடலாம் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் உதித்தது. எனினும் அதன் விளைவுக்கு அஞ்சி உடனே அதை அடக்கிக் கொண்டான். வாய்ச்சொல் மூலமாகக் கூட

உள் எழுந்த துடிப்புக்களை வெளிச் செலுத்தவில்லை. நாட்கள் செல்லச் செல்ல கத்தியை எடுத்து வேலை செய்யும்போது கைகளில் நடுக்கம் ஏற்பட ஆரம்பித்தது. சில மாதங் களுக்குப் பிறகு கத்தியைக் கண் டாலோ, வேறு இரும்பு சாமான் களைக் கண்டாலோ, ஒரே பயமும் உடம்பெல்லாம் நடுக்கமும் ஏற்பட ஆரம்பித்தன. அவன் தன் வேலை யும் செய்ய முடியாமல் கடைசியாக அரசியலார் உளவியாதி மருத்துவச் சாலையில் சிகிச்சை பெற்று ஒரு வாறு குணமடைந்தான்.

மேற்கூறிய சான்று, எப்படி கோபமானது அதன் இயற்கை குணத்தில் வெளிவந்ததைச் சமூக சூழ்நிலை தடை செய்வதினுல் உள் ளக் கோளாறை ஏற்படுத்தியது என்று தெரிகின்றது அன்ருே! ஒரு விலங்கு தமக்கு இடையூருக இருக் கும் மற்ருெரு விலங்கைத் துன் புறுத்தியோ கொன்ருே தனது உள்வத் துடிப்பைத் தீர்த்துக் கொள்கிறது. ஆனுல் அது போன்று மனிதன் சமாதான காலத் தில் தன் உள்ளத்தே எழும் சினத் தை, அதைத் தூண்டுதற்குக் காரணமான மற்ருெருவனைத் துன் புறுத்தியோ, கொன்ருே, வெளி யிடுவதற்குச் சமூகச் சட்ட திட்டங் கள் உதவி அளிப்பதில்லை. சமூக சட்ட திட்டங்களுக்குக் கட்டுப் படாது, அப்படி அவன் மற்ருெரு வனைத் துன்புறுத்துவானுனல், அவன் தண்டனைக் குள்ளாகிருன். ஆனுல் யுத்த காலங்களில், இது போன்ற 'கொலைகளில்' ஈடுபடு வதே, ஒரு வீரனுக்குச் சிறந்த அடையாளம் என்று கருதுவதனுல், மக்கள் அடைப்பட்டுக் கிடக்கும் கோப உணர்ச்சிகளை வெளியிட யுத்தம் பெரிதும் உதவுகிறது.

சமூகமானது கோப உணர்ச் சியை அதன் இயற்கையான இயல் போடு வெளிவர ஒட்டாது தடுத் தாலும், அது மாற்றி யமைக்கப் பட்ட வழிகளில் (Sublimation) வெளிவர வாய்ப்புக்கள் அளிக்கின் றது. பல்வேறு பந்தயங்கள், குத்துச்சண்டை, குஸ்தி, பந்தாட் டங்கள் முதலியவைகளும், சினிமா, நாடகம், புத்தகங்கள் முதலியவை களும் மனிதர் உள்ளத்தே கிடக் கும் மற்ற உணர்ச்சிகளோடு கோப உணர்ச்சியும் வெளிவர சந்தர்ப்பம் அளிக்கின்றன. இப்போது பந்தய விளையாட்டுக்களில் கலந்து கொள் வோரையும், அவற்றை வேடிக்கை பார்ப்பவர்களையும் நோக்குவோம். குத்துச் சண்டை என்பது சமூகம் ஆதரிக்கும் ஒரு பந்தயம். இந்தப் பந்தயத்தில் மனிதனுடைய அடிப் படையான கோப உணர்ச்சி தூண் டப்படுகிறது. ஒருவன் மற்ருெரு வனைத் துன்புறுத்தித் தோல்வி யுறும்படி செய்ய முயல்கிருன். அதன் காரணமாக, சூழ்நிலையில் பல்வேறு வழிகளில் துண்டப்பட்டு, அடக்கப்படும் கோப உணர்ச்சி அவர்கள் உள்ளத்திலிருந்து வெளி வருகிறது. இந்தப் பந்தயத்தைப் பாப்பவர்களும், இதே போன்று தான் தங்களது உள்ளத்தில் அடங்கி யிருக்கும் உணர்ச்சியை வெளியிடுகிருர்கள். எவ்வாறு எனின் வேடிக்கை பார்ப்பவர்கள் பந்தயத்தில் கலந்து கொள்பவர்க ளில் தங்களது உள்ளத்தைப் பதிய வைத்து (empathy) அவர்கள் வெற்றியடைவதைத் தாங்கள் வெற்றி யடைவது போன்றும், அவர்கள் தோல்வி யடைந்தால் தாங்கள் தோல்வி யடைவது போன்றும் உணர்ச்சிகளை அடைகி ருர்கள். ஏன், குத்துச் சண்டை நடக்கும்போது வேடிக்கை பார்ப்ப வர்கள் தங்கள் இடம் விட்டு எழுந்து குத்துவதுபோன்ற நடத் தையைத் தங்களையும் அறியாது மேற்கொள்ளுகிருர்கள். இதே

போன்றுதான் நாடகத்திலும், சினிமாவிலும், அவரவர்கள் போக்கிற் கேற்ப கதாநாயகன்பேரில் தங்களைப் பொருத்தி, அவன் ஆடத்துக்குள்ளானுல் தாங்கள் வருந்தியும், அவன் செய்யும் வாட்போரில் கடுமையாகப் போரிட்டு முடிவில் வெற்றி பெறுவானுனல் வேடிக்கை பார்க்கும் மக்களும் ஆரவாரிக்கிருர்கள். மற்றும் திரைக் காட்சி முடிவு துக்கமாக முடிந்தால், காட்சி சாலையை விட்டுவரும் மக்களும் ஒருவிதமான கவலை தோய்ந்த முகத்தோடு வெளிவருகிருர்கள். வெற்றிகரமாகவும், மகிழ்ச்சியாகவும் முடிந்தால் மக்களும் உற்சாகத்தோடு வெளிவருகிருர்கள். இது எல்லோருடைய அனுபவம். இது மனிதனது 'எம்பதி' (empathy) என்ற உள்ள நிலையையே தெளிவுபடுத்துகிறது. இதன் காரணமாகத்தான் குத்துச்சண்டை, வாட்போர் முதலிய நிகழ்ச்சிகளையுடைய திரைப் படங்களுக்கு மக்கள் திரளாகச் செல்கிருர்கள். இந்த உண்மையை E. டேல் (E. Dale) என்ற அறிஞர் 1930 ஆண்டிலே, திரைப் படங்களைக் கொண்டு நடத்திய ஆராய்ச்சியிலிருந்து தெளிவுபடுத்துகிருர். அவர் 115 திரைப் படங்களை எடுத்து, அவைகளில் கோப உணர்ச்சியைக் கொலைக் கொடுமை முதலியவைகளில் வெளியிடும்படியான கட்டங்களை உடைய திரைப் படங்கள் எவை என்பதை ஆராயந்தெடுத்தார். 115 திரைப் படங்களில் அத்தகைய படங்களாக 97 இருந்தன. அந்தத் திரைப் படங்களுக்கே மக்கள் அதிக ஆதரவு காண்பித்தனராம். இதே உண்மையை முதல் உலக யுத்தத்திற்கு முன்னே நடத்திய ஆராய்ச்சியிலும், இரண்டாவது உலக யுத்தத்தின் போது நடத்திய ஆராய்ச்சியிலும் உளநூலறிஞர்கள் கண்டார்கள்.

ஆகவே ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு பந்தயங்கள் உள்ளிருக்கும் உணர்ச்சிகள் வெளிவர வாய்ப்புக்கள் அளிக்கின்றன. எந்த நாடு கோப உணர்ச்சியின் வலிமையும் அது தூண்டப்பட்டால் ஏற்படும் விளைவுகளையும் ஆராய்ந்து தம் நாட்டு மக்களுக்குத் தீங்குதராத வழிகளில் பல வாய்ப்புக்கள் அளிக்கின்றதோ அந்தநாட்டிலே கலகம் சண்டை சச்சரவுகள் அதிகம் இல்லாமல் அமைதி நிலவும். அந்தநாடு மற்ற நாடுகளின் மேல் போர் தொடுக்கவும் முயலாது. ஆனுல் தற்போது உலகத்திலுள்ள பல்வேறு நாடுகள் தங்கள் நாட்டு மக்களுக்குக் கோப உணர்ச்சிகள் வெளிவரத் தகுந்த வாய்ப்புக்கள் அளிக்காததன் காரணமாக, ஒரு நாடு மற்ருெரு நாட்டின் மேல் போர் தொடுத்து, உணர்ச்சிகளை வெளியிட வழி தேடுகிறது. ஒரு நாட்டு மக்கள் சண்டைகள் கலகங்கள் முதலியவைகளில் ஈடுபட்டுக் கோப உணர்ச்சிகளை வெளியிடுகிருர்கள். இந்த நிலையில் உலகம் செல்லுமே யானுல், ஏசுநாதர், புத்தர், மகமது, மகாவீரர், காந்தியடிகள் போன்றவர்கள் அவ்வப்போது தோன்றி 'அஹிம்சை'யைப் போதித்தாலும் 'ஹிம்சை' மக்களிடையே எப்போதும் நிலவித்தானிருக்கும். மக்களிருக்கும்வரை யுத்தங்கள் இருந்துதான் ஆகும். அவற்றைத் தவிர்க்க ஒரே வழிதான் உண்டு. அதாவது விஞ்ஞானத்தின் துணை கொண்டு, மனிதன் பல்வேறு இயல்பூக்கங்களின் தன்மைகளை ஆராய்ந்து அவைகளினின்று வெளியாகும் உள்ள சக்தியைப் பயனடையும் முறையில் செலுத்த முயலவேண்டும். அந்த முயற்சி முடிவு அடையும்வரை உலகத்தில் அமைதி நிலவாது.

● 'படைப்பு எல்லாம் ஒரே முழுமை. அதன் பலவேறு பகுதிகள் ஒன்றை ஒன்று தழுவி நிற்கின்றன. அன்பே அவற்றைப் பிணிக்கும் கயிறு'— இது வேர்ட்ஸ்வொர்த் கண்ட உண்மை.

இயற்கை அடியார்

திரு. மு. அறம்வளர்த்தான், M. A.

கவிஞர்கள் எல்லோருமே இயற்கையில் ஈடுபடுகிறார்கள். ஆங்கிலக் கவிஞர்கள் இதற்கு விலக்கு அல்ல. சாசர் (Chaucer) முதல் எலியட் வரை வோர்ட்ஸ்வொர்த்துக்கு முன்னும் பின்னும் உள்ள கவிஞர்கள் இயற்கையைப் பற்றிப் பாடி இருக்கிறார்கள். என்றாலும் அவர்மட்டுமே 'இயற்கைக் கவிஞர்' என்று அழைக்கப்படுகிறார்.

பிறர் இயற்கையின் அழகில் ஈடுபட்டார்கள்; வோட்ஸ்வொர்த் அதில் ஊடுருவி நிற்கும் ஆற்றலில் ஈடுபட்டார். பிறர் தம் இலக்கியத்தின் நடு நடுவே இயற்கைக் காட்சிகளைச் சொல் ஓவியமாக அமைத்தனர்; வோர்ட்ஸ்வொர்த் தன் உயிருக்கு உறுதுணையான பேருயிர் அதில் உறைவதாகப் பாடினார். பிறர் இயற்கையைப் பாட்டிற்குப் பின்புலமாகப் (Background) பயன்படுத்தினார்கள். வோர்ட்ஸ்வொர்த் அதைப் பாட்டின் நடுநாயகமாக்கிப் போற்றினார். பிறர் வருணித்தார்கள்; வோர்ட்ஸ்வொர்த்தோ வழிபட்டார்.

பல பாட்டுக்களில் "இயற்கை என் வழிகாட்டி, நான் அதன் அடிமை" என்று சொல்லுகிறார்.

* * *

150 ஆண்டுகளுக்கு முன்னே கவிஞர் சோலை நடுவில் அமர்ந்திருந்தார். அப்போது இளவேனில் காலம். கவிஞர் உள்ளம் சுற்றுப்புறத்தில் ஈடுபட்டது.

எண்ணுக்கடங்கா இனிய ஓசைகள்; பின்னிக்கொண்டு அசையும் பூங்கொடிகள்; மகிழ்ச்சி மேலீட்டால் முறுவல் செய்யும் மலர்கள்; குதித்தாடும் கோலப் பறவைகள்; காற்றோடு குலவும் மெல்லிய கிளைகள் — இவற்றில் எல்லாம் ஈடுபடும்போது உள்ளம் இனிய உணர்வால் நிறைந்தது. எங்கும் ஒரே இன்பம்! இயற்கையின் திட்டம் இது என்று கண்டார்: "படைப்பு எல்லாம் ஒரே முழுமை; அதன் பல்வேறு பகுதிகள் ஒன்றை ஒன்று தழுவி நிற்கின்றன. அன்பே அவற்றைப் பிணிக்கும் கயிறு".

ஆனால் இந்த எண்ணம் நீடிக்க முடியவில்லை. இசையில் அபசுரம் தட்டியது. மனிதனுடைய நினைவு வந்துவிட்டது கவிஞருக்கு.

உயிரானது மெய்யை (Matter)ச் சார்ந்து படிப்படியாக வளர்ந்தது. தோல், வாய், மூக்கு, கண், காது முதலிய கருவிகளை ஒன்றுக்குப்பின் ஒன்றாகப் பெற்று இறுதியில் மனம் என்ற அரிய கருவியைப் பெற்றது: மனிதன் தோன்றினன். அவனுடைய மனத்தின் காரணமாகப் படைப்பின் கொடுமுடி என்று பாராட்டப்பட்டான். ஆனல் அவன் மனத்தை என்ன பாடு படுத்திவிட்டிருக்கிறன்! அதை எப்படிக் கரியாக்கிவிட்டான்! 'அன்பு ஒளி செய்யும் அழகு மண்டபமாய் விளங்கவேண்டிய மனித மனம் ஆசையும் அக்கிரமமும், ஏமாற்றும் எத்தும், பொய்யும் புரட்டும் குடியிருக்கும் பாழ் மனையாய், பாம்புப் புற்ருய், பேயாடும் சுடலையாய்ப் போய்விட்டதே' என்று உள்ளம் கலங்கினர். இயற்கை ஆக்கிய மனிதன் ஒன்று; மனிதன் ஆக்கியிருக்கும் மனிதன் வேறு ஒன்று. "மனிதன் மனிதனை எப்படி ஆக்கிவிட்டான்" என்று நைந்து புலம்பினர்.[1]

* * *

வோர்ட்ஸ்வொர்த் பள்ளிப் பையனாக இருக்கும்போதே இயற்கையோடு உறவாடத் தொடங்கினர். பறவை பிடிக்கவும், படகு ஓட்டவும், பனிப் பரப்பில் சறுக்கல் ("ஸ்கேட்டிங்") ஆடவும் செல்வார்; பொதுவாகத் தன்னந் தனியாகவே செல்வார். அந்தச் சமயங்களில் குன்று, காடு, நீர்நிலை, பனிப் பரப்பு முதலியவை அவர் மனத்தைப் பிணிப்பதுண்டு. சில சமயம் அச்சம் ஏற்பட்டு மனம் நடுங்குவார்; சில சமயம் அழகில் ஈடுபட்டு மனம் மகிழ்வார்.

கல்லூரியில் படிக்கும்போது விடுமுறைக்காக ஊருக்கு வந்திருந்தார். நெடுநேரம் நண்பர்களோடு களியாட்டத்திலும் கேளிக்கையிலும் காலத்தைக் கழித்துவிட்டு வீடு திரும்பிக்கொண் டிருந்தார்.

இரவு. நடுயாமம். வானத்து மதி வையகத்தை வெள்ளி பூசிக் கொண்டிருந்தது. நெடுந்தொலைவில் கிடந்த கடல் நுரையால் நகைசெய்தது. திடீரென்று கவிஞர் உள்ளத்தில் உணர்வு பீறிட்டுப் பொங்கியது: "ஐயோ, என் வாழ்வு பயன் இல்லாமல் கழிகின்றதே! இதுவரை கழிந்துவிட்டதே! இனி......இனி அவ்வாறு கழியாது. என் கடன் பணிசெய்தல்" என்று சூளுரை செய்தார்.

* * *

அப்போது ஐரோப்பா பெரும் மாறுதல் உறும் காலம். அறிஞர்களும், அரசியல் தலைவர்களும், மக்கள் எல்லாருமே பிரான்சை நோக்கிக்கொண் டிருந்தனர். இளைஞர்களுடைய ஊக்கத்துக்கு எல்லையே கிடையாது. வோர்ட்ஸ்வொர்த் 20 வயது நிரம்பாதவர்; மேலும் கல்லூரி மாணவர்.

பிரஞ்சுப் புரட்சியில் நேரிடையாகக் கலந்துகொள்ள விரும்பினர். வீட்டார் தடுக்க, விருப்பத்தை விடுத்தார். ஆனல், அவர் எண்ணம் எல்லாம் பிரான்சில்தான். அவருக்கு எப்பொழுதுமே அரசியல் பற்றி மிகுதியான கவலை. பின்பு அவர் கூறினர், "ஒரு மணி நேரம் பாட்டு எழுதினல் 12 மணிநேரம் அரசியல் பற்றி எண்ணுகிறேன்" என்று.

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது. அமுதை எதிர்பார்த்தனர்; ஆலம் பொங்கியது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்

1. cf. "Lines written in Early spring"

அரியணை ஏறுவதற்குப் பதில் எதேச்சாதிகாரம் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தது. விடுதலை வேண்டிப் புரட்சி செய்த பிரான்சு, பிறநாடுகளை அடிமைப்படுத்தப் போர் தொடுத்தது.

* * *

வோட்ஸ்வொர்த்தைப்போல் ஏமாற்றமடைந்தவர் வேறு ஒருவரும் இருக்கமுடியாது. ''மக்கள் இருள் பாதையில் நடக்கிறார்கள்; ஒவ்வொருவர் கையிலும் ஒரு விளக்குக் கொடுக்கவேண்டும்; கொடுப்பேன்'' என்று உறுதி செய்தார். அவர் கொடுக்க எண்ணிய விளக்குத்தான் இயற்கை. தன் வாழ்க்கையை ஒளி செய்த இயற்கை ஏன் பிறர் வாழ்க்கைகளையும் ஒளி செய்யக் கூடாது என்று நினைத்தார்.

* * *

அவருடைய இயற்கை அனுபவம் ஒரு தனியான இயல்பு உடையது. ஒரு தடவை ''டின்ட்டென்'' என்ற இடத்திற்குச் சென்றிருந்தார். ஆற்றங்கரையில் அமர்ந்து சுற்றியிருந்த இயற்கையோடு ஒன்றினார். தான் பெற்ற அனுபவங்களை ஒரு பாட்டில் விரிவாக விளக்குகிறார். அது மிகவும் பெயர் பெற்ற பாட்டு.

இயற்கையை விளித்துக்கூறுகிறார்: ஐந்து ஆண்டுகள் ஓடிவிட்டன. திரும்பவும் உன்னைக் காண்கிறேன்............நகரத்தில் வாழ்ந்தேன்; அப்போது, நஞ்சு உமிழும் நாவுகள், உள்ளம் குவிந்திருக்க உதடு பூக்கும் முறுவல்கள், தன்னலத்தின் நகைப்புகள் - இவை என்னைச் சூழ்ந்திருந்தன. ஆனால் உன்னை எண்ணினேன். எண்ணும்போதெல்லாம் ஓர் இனிய உணர்வு உடல் எல்லாம் பரவியது; உள்ளத்தையே ஊடுருவியது....... இன்னொரு அனுபவமும் ஏற்பட்டது. அதை என்னென்று சொல்வேன்!............

''உண்மை தெரியவில்லையே என்ற ஏக்கம், உலகம் பற்றிய கவலைச்சுமை—இவை மறைந்து விடுகின்றன அந்த அநுபவ நிலையில்........''

[2]''உணர்வு மெல்ல மெல்ல வளர்கிறது. இந்த ஊனுடம்பின் உயிர்ப்பு அடங்கியது போலவும், குருதியின் ஓட்டமே நின்றதுபோலவும் தோன்றுகிறது. யாக்கை தூக்கத்தில் ஆழ்கிறது; ஆன்மாவோ உயிர் பெற்று எழுகிறது. இந்த ஒன்றிய நிலையில், இன்ப நிலையில், விழியில் ஓர் அமைதி நிலவுகிறது. அப்போது உலகின் உட்பொருளை எல்லாம் கண்டுவிடுகிறேன்''.

இது கவிஞர் பெற்ற அனுபவம். நம் நாட்டுச் சமய ஞானிகளின் தெய்விக அனுபவம்போ லிருக்கிறது.

ஆண்டுகள் சென்றன. கவிஞர் கையிலிருந்த விளக்கே மங்கத் தொடங்கியது. விளக்கு மங்கியதா அல்லது வோட்ஸ்வொர்த்தின் விழி மங்கியதா என்று தெரிய

2. —"that serene and blessed mood,
In which the affections gently lead us on—
Until, the breath of this corporeal frame
And even the motion of our human blood
Almost suspended, we are laid asleep
In body, and become a living soul:
While with an eye made quiet by the power
Of harmony, and the deep power of joy
We see into the life of things."

Lines composed a few miles above Tintern Abbey.

தமிழ்நாடு அரசு காப்பக நூலகம்
211710
சென்னை-600 008

வில்லை. எப்படி என்றாலும் முன் போன்ற அனுபவம் மறுபடியும் ஏற்படவில்லை.

* * *

வோட்ஸ்வொர்த் இயற்கையாகிய கோயிலில் அடியார்போல் வழிபட்டார். பிறரும் அவரைப் பின்பற்றிப் பேரின்பம் அடைய விரும்பினர்.

இரண்டு காரணங்களால் மக்கள் அவர்போல் இயற்கை அடியார் ஆக முடியவில்லை. முதலாவதாக வோட்ஸ்வொர்த்துக்குச் சிறு பொருள்களைக் கண்டவுடனேயே பெரும் உணர்வு பொங்கியது. [3]காற்றில் அசையும் பூ அவர் கண்களை ஊற்றெடுக்கச் செய்தது. இத்தகைய உணர்வைச் சாதாரண மக்களிடம் எப்படி எதிர்பார்க்க முடியும்? இரண்டாவதாக மனித வாழ்வு மேலும் மேலும் செயற்கை மயமாகிக் கொண்டு வருகிறது. ஆகவே, உள்ளம் ஒளி பெற வோட்ஸ்வொர்த் காட்டும் வழி பயன் தராது. ஆனால், அவர் காட்டிய ஒரு பெரிய உண்மையை மட்டும் மறக்கமுடியாது. "படைப்பு எல்லாம் ஒரே முழுமை; அதன் பல்வேறு பகுதிகள் ஒன்றை ஒன்று தழுவி நிற்கின்றன. அன்பே அவற்றைப் பிணிக்கும் கயிறு" என்பதுதான் அந்த உண்மை. மனித மனமும் படைப்பில் ஒரு பகுதி. மனித மனத்தைப்பற்றியே வோட்ஸ்வொர்த் பாடினர்; பாட விரும்பினர்.

"My Theme
No other than the very heart
of man"

---

3. To me the meanest flower that blows can give
Thoughts that do often lie too deep for tears.
Ode: Intimations of Immortality from recollections of early childhood.

'இந்தியா'வின் இருப்பிடம்.

இந்திய இதயம் இத்தகையது என்பதை வெளியுலகுக்கு எடுத்து விளக்கும் உரைகாரராகக் காந்தியடிகளைப் பற்றிச் சொல்வதுண்டு. இது உண்மைதான். இதே அளவு உண்மையும்—இன்னும் மிகுந்த சிறப்பும் உடைய கருத்து ஒன்று உண்டு. இந்திய இதயத்தை இந்தியாவுக்கே உணர்த்திய உரையாளர் என்பதே அவ்வுண்மையாகும். ஆடம்பரத்தில் மூழ்கி வெள்ளை நாகரிக மயமாக மாறிவிட்ட நகரங்களிலே இந்தியப் பண்பாடு வாழவில்லை என்பது அவருக்குத் தெரிந்தது. எழுபது லட்சம் பட்டி தொட்டிகளில்தான் இந்தியப் பண்பாடு கோயில்கொண்டுள்ளது என்பதை அறிந்தார். இந்தப் பட்டிக்காட்டுப் பண்பாட்டுக்கே தம் வாழ்வின் செய்தியை எடுத்துரைத்தார். எளிய ஆடம்பரமற்ற கிராம வாழ்க்கையை அவர் மேற்கொண்டதால்தான், இந்திய இதயத்தை அவரால் கவர்ந்துகொள்ள முடிந்தது.

—பெதிக் லாரன்ஸ்

நாணய மதிப்புக் குறைவினால் நம் நாட்டில் ஏற்படும் விளைவுகளை நன்கு விளக்குகிறது இக்கட்டுரை.

நாணய மதிப்புக் குறைவு

திரு. P. இராமச்சந்திரன், M.A.

பெரும்பாலான மக்களுக்கு எளிதில்விளங்காத அறிக்கை ஒன்று அண்மையில் வெளி வந்தது. இங்கிலாந்தின் நாணயமாகிய பவுண்டு ஸ்டர்லிங்கின் மதிப்பு குறைக்கப் பட்டது என்பது அவ்வறிக்கையில் அடங்கிய செய்தி. அதைப் பின் பற்றி இந்தியா உள்பட பல நாடுகள் தங்களுடைய நாணயங்களின் மதிப்பைக்குறைத்துக் கொண்டன. குறிப்பாக இங்கிலாந்தின் பவுண்டு ஸ்டர்லிங்கிக்கும் அமெரிக்காவின் டாலருக்கும் உள்ள தொடர்பில் (Relationship) மாறுபாடு ஏற்பட்டது. இதனால் இங்கிலாந்தின் பவுண்டு ஸ்டர்லிங்கை யொட்டியிருக்கும் நாடுகளின் நாணயங்களுக்கும் டாலர்களுக்கும் மாறுதல் ஏற்பட்டது. இம்மாறுதல்கள் ஏன் ஏற்பட்டன? அவைகளுக்குத் தற்போது அவசியம் உண்டா? மாறுதல்கள் ஏற்படுத்தாமலேயே நாடுகளின் நன்மையைப் பாதுகாக்க முடியாது. அப்படி இருப்பினும் இங்கிலாந்து தன்னுடைய நாணயத்தின் மதிப்பை மாற்றினால் மற்ற நாடுகள் ஏன் மாற்றவேண்டும்? நம் நாட்டிற்கு இதனால் என்ன விளைவுகள் ஏற்படும் என்ற வினாக்கள் பல எழுகின்றன. இவைகளைப் பற்றி ஆராய்வதற்கு முன்பு நாணய மாற்றுதலினால் நாடுகளின் வியாபாரம் எத்துணை அளவுக்குப்பாதிக்கப் படுகிறது என்பதைச் சிறிது ஆராய்வோம்.

பல நாடுகளின் நாணயங்களுக்குள்ளே தொடர்பு ஏன் இருக்க வேண்டும் என்ற வினா எழலாம். முன்பு நாடுகளில் போக்குவரவு சாதனங்கள் இல்லாமையாலும் மக்களின் தேவைகள் மிகக் குறைவாய் இருந்ததினாலும் பல நாணயங்களின் தொடர்பு இருக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. நாகரிகம் மிக மிக, மக்களின் தேவைகள் அதிகமாயின. போக்குவரவு சாதனங்கள் ஏற்பட்டதனால் மக்கள் தேவைக்கேற்ப பொருள்கள் இடம் விட்டு இடம் மாறத் தொடங்கின. இதனால் மக்களுக்கு வேண்டிய பொருள்கள் கிடைப்பதற்கு ஏதுவாயிற்று. ஆனால் இவைகளை வாங்குவதற்கு முதலில் பண்ட மாற்றல் முறை இருந்தது. நாளடைவிலே இதன் வழங்குமுறையில் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. இதை முன்னிட்டுப் பொருள்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் பொதுவான ஒரு பொருள் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இது முதலில் எளிதில் அகப்படக்கூடிய பொருள்களாக இருந்தன. பிறகு நாளடைவிலே இது பொற்காசுகளாக மாறியது. ஒரு குறிப்பிட்ட எடையுள்ள பொற்காசுக்குக் குறித்த அளவுப் பொருள்களை அவ்வப் பொருள்களின் மதிப்பிற்கேற்றவாறு வாங்க ஏதுவாயிற்று. இதற்காகப் பண்டை மாற்றுச் சாதனம் (Medium of exchange) எல்லா நாடுகளில் ஏற்பட்டு வந்தது. முதலில் அந்தந்த நாடுகளின் விருப்பப்படி தங்களுக்குவேண்டிய உலோகங்களைப் பண்டை மாற்றுச் சாதனமாக (Medium of exchange) வைத்துக் கொண்டார்கள். பிறகு பல நாடுகளில் உற்பத்தியாகும் பொருள்களை அவைகளுக்குள்ளே வாங்கிக் கொள்ள நேரிட்டதால் பல நாடுகளுக்கும் பொதுவான ஒரு பண்டமாற்றுச் சாதனம் இன்றியமையாததாயிற்று. முடிவில் பொன்னைப் பொதுவான பண்டைமாற்றுச் சாதனமாகக் கொண்டார்கள். இதன்படி ஒரு அவுன்ஸ் பொன் ஒவ்வொரு நாட்டின் நாணயத்திலும் இவ்வளவு என்று அந்தந்த நாடுகள் முடிவு செய்தன. இம்முறையினுல் ஒவ்வொரு நாடும் அதன் உள்நாட்டில் எந்த நாணயத்தை உபயோகித்தாலும் பல நாடுகளுக்கிடையே ஏற்படும் வியாபாரத்திற்குத் தடை ஏற்படவில்லை. இதனுல் நாடுகளிடையே ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் மிகவும் சிறந்த முறையில் நடப்பதாயிற்று.

ஒரு நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களுக்கு ஏற்ப இறக்குமதி செய்யவேண்டும். இல்லையேல் அதிகம் இறக்குமதி செய்யும் நாடு நாணய மூலம் அதை சரி செய்யவேண்டும். இதற்குத்தான் ஒரு பொதுவான நாணயம் வேண்டியிருக்கிறது. இறக்குமதி அதிகம் செய்து ஏற்றுமதி குறைவாக இருந்தால் அந்த நாட்டின் பொருளாதார அமைப்பில் கோளாறு ஏற்படும். அந்த நாடு கடன்கொடுக்க வேண்டி ஏற்படும். கடன் கொடுப்பதற்கு அதிக வெளி நாட்டு வாணிபத்தின் மூலம் தான் கொடுக்க வேண்டும். வெளிநாட்டு வியாபாரம் அதிகம் வேண்டுமென்ருல் அதிகப் பொருள்கள் ஏற்றுமதி செய்ய வேண்டும். கடன் ஏற்படாமல் இருப்பதற்கு இரண்டு வழிகள் தான் உண்டு. ஒன்று அதிகம் ஏற்றுமதி செய்து அதற்குச் சமமாகப் பொருள்களை இறக்குமதி செய்யவேண்டும். மற்ருென்று இறக்குமதியை ஏற்றுமதிக்கு ஏற்ப குறைக்கவேண்டும். இறக்குமதியை குறைக்கவேண்டுமானுல் அதே பொருள்களை உள் நாட்டிலேயே உற்பத்தி செய்துகொள்ள வேண்டும். இல்லையேல் நாட்டிற்குத் தேவையான பொருள்கள் பெற முடியாமல் போய்விடும். இதை எந்த நாடும் விரும்பாது. இப்படிப்பட்ட நிலையில்தான் பல வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. அவற்றுள் ஒன்று நாட்டின் நாணய வெளிமதிப்பைக் குறைத்துக் கொள்வது. ஆனுல் இந்த வழிகுறுகிய காலத்திற்குத் தான் நன்மை பயக்கும். இந்த நிலையில்தான் இங்கிலாந்து இப்பொழுது இருக்கிறது. ஆதலால் அவர்கள் தங்களுடைய நாணய வெளி மதிப்பைக் குறைத்துக் கொண்டார்கள். இதனுல் நன்மை எய்தலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது.

இங்கிலாந்து தன்னுடைய நிலைமைக்கு ஏற்றவாறு நடந்துகொள்வதுமுற்றிலும்பொருந்தும். ஆனுல் இந்தியா ஏன் தன்னுடைய நாணயத்தின் மதிப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும்?

இம்மாதிரி நாணய மதிப்பைக் குறைத்துக் கொள்வதனுல் ஏற்றுமதி அதிகப்படுத்தலாம் என்று நினைக்கிருர்கள். ஏற்றுமதியை அதிகமாக்கி இறக்குமதிக்குச் சமமாக்கினுல் நாட்டிற்கு வேண்டிய பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. இந்த வழி எப்பொழுதுமே ஒரு நாட்டிற்கு நன்மை பயக்கு மென்று சொல்ல முடியாது.

இந்நிலையில் இந்தியா ஏன் நாணய மதிப்பைக் குறைக்க வேண்டும் என்று பலர் எண்ணலாம். இதற்கு முக்கிய காரணம் நம் நாட்டு நாணயத்தைப் பவுண்டு ஸ்டர்லிங்கினுடன் இணைத்திருப்பதும் பல ஆண்டுகளாக நம் நாட்டின் வாணிபம் இங்கிலாந்தின் மூலமாக நடந்தேறி வருவதுமேயாகும். அதற்கேற்ப மதிப்பைக் குறைக்காவிட்டால் நம்முடைய ஸ்டர்லிங் இருப்பு பாதிக்கப்படும். அதுவுமன்றி இம்முறையினுல் நாமும் நன்மை எய்தலாம் என்ற நம்பிக்கை கொள்ளலாம். மற்றும் உலகத்திலுள்ள சுமார் 24 நாடுகள் தங்களுடைய நாணய மதிப்பைக் குறைத்திருக்கின்றன. நாமும் குறைக்கவில்லையானுல் நம் நாட்டு வாணிபம் மிகவும் பாதிக்கப்படும்.

இனி, இந்நாணய மதிப்புக் குறைவினுல் நம் நாட்டிற்கு ஏற்படும் விளைவுகளைச் சிறிது ஆராய்வோம். நாணயக் குறைப்பு உள்நாட்டிலோ அல்லது நம் நாணயத்திற்கும் இங்கிலாந்து பவுண்டு ஸ்டர்லிங்கிக்கும் உள்ள தொடர்பிலோ மாறுதல் ஏற்படவில்லை. ஆனுல் பவுண்டு ஸ்டர்லிங்குக்கும் அமரிக்க டாலருக்கும் உள்ள தொடர்பு மாறியது போல் நம் நணயத்திற்கும் அமரிக்க டாலருக்கும் உள்ள தொடர்பில் மாறுபாடு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன் ஒரு டாலரின் மதிப்பு நம் நாட்டிலே 3·32 ரூபாயாக இருந்தது. மாறுதலுக்குப் பிறகு ஒரு டாலரின் மதிப்பு நம் நாட்டிலே 4·76 ரூபாயாக மாறியது. உதாரணமாக முன்னர் 3.32 ரூபாய்க்கு விற்ற அமரிக்க பொருள்கள் இப்பொழுது 4·76 ரூபாயுக்கு விற்கப் பெறும். இது போலவே அமரிக்காவில் நம் நாட்டுப் பொருள்கள் விலை மாறுபடும். அதாவது ஒரு டாலர் மதிப்புள்ள சாமான் இப்பொழுது அதைவிட 30·51 குறைந்த மதிப்பாகும். உதாரணமாக 332 ரூபாய் பெறுமானமுள்ள நம் நாட்டுப் பொருள்களை அமரிக்காவில் முன்னர் 100 டாலர்களுக்கு வாங்குவார்கள். இப் பொழுது அவர்கள் 100 டாலருக்கு ரூ. 476 பெறுமானமுள்ள நம்முடைய பொருள்களை வாங்கலாம். இதிலிருந்து நாம் அறிவது என்னவென்ருல் நம் நாட்டுப் பொருள்கள் அமரிக்காவில் குறைந்த விலைக்கு விற்கப்படும். இந்த முறையினுல் நம் நாட்டுப் பொருள்கள் நம் நாட்டிலே பழைய விலைக்குத்தான் விற்கும். அதில் ஒன்றும் மாறுதல் ஏற்படாது. ஏனெனில் வெளிநாட்டின் நாணயத்திற்கு ஒப்பிடும் போதுதான் நம் நாட்டின் நாணய மதிப்பு குறைகிறது. இதிலிருந்து மற்ருென்று விளங்குகிறது. அதாவது முன்னர் 100 டாலர் பெறுமானமுள்ள பொருள்கள் இறக்குமதி செய்வதற்கு 332 ரூபாய் பெறுமானமுள்ள சாமான்கள் ஏற்றுமதி செய்து வந்தோம். அதே 100 டாலர் பெறுமானமுள்ள பொருள்களை இப்பொழுது இறக்குமதி செய்வதற்கு 476 ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் ஏற்றுமதி செய்யவேண்டும். அப்படி என்ருல் 476 ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் அமரிக்கா

விலே அதே 100 டாலர்களுக்கு விற்பதென்றால் நம் நாட்டுப் பொருள்களின் விலை இப்பொழுது அமெரிக்காவிலே குறைந்திருக்கிறது என்பது தெரிகிறது.

இதனால் அங்கு நம் நாட்டுப் பொருள்கள் மிகுதியாக விலையாகலாம். நம் நாட்டுப் பொருள்கள் அமரிக்காவிலோ அல்லது நம் நாணயத்தின் மதிப்பைக் குறைத்த வேறு எந்த நாட்டிலோ குறைந்த விலையாயிருப்பதால் அதிகமாக வாங்குவார்கள். இதனால் நாம் அதிகப் பொருள்களை ஏற்றுமதி செய்ய நேரிடும். அதற்குப் பதிலாக வெளிநாடுகளிலிருந்து நமக்கு வேண்டிய பொருள்களை அதிகமாக இறக்குமதி செய்யலாம். அதோடு நில்லாமல் வெளிநாடுகளுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் பெருகும். அப்படிப் பெருகுவதனால் நம் நாட்டுச் செல்வம் உயர்வதோடல்லாமல் அதிக மக்களுக்கு வேலையும் கிடைக்கும். நாட்டின் பொருளாதாரம் சீர்படுவதற்கு இது ஒரு வழியாகும். ஆனால் நாணய மதிப்பைக் குறைக்கும் முறையானது ஒரு நிலையான சிறந்த வழியா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் இந் நாணய மதிப்பைக் குறைக்கும் முறையை எல்லோருமே கடைப்பிடித்தால் மேற்சொன்ன நன்மை ஏற்படாது. அதுவுமன்றி இம் முறையினால் இறக்குமதி செய்யும் பொருள்களை அதிக விலை கொடுத்து உள்நாட்டு மக்கள் வாங்கவேண்டிவரும். இதனால் பல கேடுகள் விளையலாம். ஆதலால் சிறந்ததும் நிலையானதுமான வழியானது நம் நாட்டில் வெளிநாட்டார் விரும்பும் பொருள்களைக் குறைந்த செலவில் அதிகமாக உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யவேண்டும். இதை மக்கள் விரும்பினால் செய்யலாம். அப்பொழுதுதான் நாட்டின் செல்வம் பெருகும். இதுகாறும் நாம் பொதுவாக நாணய மதிப்பைக் குறைப்பதனால் ஒரு நாட்டிற்கு ஏற்படும் நன்மையை ஒருவாறு ஆராய்ந்தோம். இனி, நம் நாட்டில் இம் மாறுதலினால் ஏற்படும் விளைவுகளைச் சிறிது ஆராய்வோம்.

நம் நாட்டின் நாணய மதிப்புக் குறைவினால் உள்நாட்டில் டாலர் நாணய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களின் விலை 30·5% அதிகமாகும். குறிப்பாக, அமெரிக்கா நாட்டிலிருந்து நமக்கு வேண்டிய பல இன்றியமையாத உற்பத்திச் சாதனங்களை இறக்குமதி செய்கிறோம். இவைகளுடன் உணவுப் பொருள்களை ஏராளமாக அமரிக்க நாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறோம். இவைகளுக்குப் பதிலாக சில மூலப் பொருள்களை ஏற்றுமதி செய்கிறோம். நமக்குச் சேரவேண்டிய ஸ்டர்லிங்குகளை டாலர்களாக மாற்றி அவைகளுக்குப் பொருள்களை வாங்குகிறோம். புதிய திட்டத்தின்படி நாம் இறக்குமதி செய்யும் அதே அளவு பொருள்களுக்கு இப்பொழுது அதிக விலை கொடுக்க வேண்டும். இதற்கு ஈடு செய்வதற்காக அதிகப் பொருள்களை ஏற்றுமதி செய்யவேண்டும். அதுவுமன்றி நம்முடைய ஸ்டர்லிங்குகளை அதிகமாக இப்பொழுது செலவழிக்க நேரிடும். இதனால் நாம் அதிகப் பொருள்களை இறக்குமதி செய்ய முடியாது என்பது நன்றாக விளங்குகிறது. அதிகப் பொருள்களை ஏற்றுமதி செய்யவேண்டுமானால் அவைகள் வெளிநாடுகளில் செலவாகவேண்டுமே! அம்மாதிரி செலவாவதற்கு அப் பொருள்களின் விலைகளைக் குறைத்தாலொழிய அவைகளை இப்பொழுது விற்பதை விட அதிகமாக விற்க

முடியாது. இதற்கு வழி நம் நாட்டில் பொருள்களின் உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டும். இவ் வழி நிறைவேற வேண்டுமானல் முதலாளிகள் பெறும் லாபத்தையும், தொழிலாளிகள் பெறும் ஊதியத்தையும் குறைக்க வேண்டும். இதுவுமன்றி மூலப் பொருள்களின் விலைகளையும் குறைக்கவேண்டும். இவ் வழியைக் கடைப்பிடித்தால் ஏற்கனவே கடின வாழ்க்கை நிலையால் வருந்துகின்ற மக்கள் அதிகம் வருந்த நேரும். மேற்சொன்ன வழிகளைக் கடைபிடிக்காமலே உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதற்குத் தொழில்களை (Rationalisation) பாகுபடுத்துவதல்லாமல் சிறிது நேரம் அதிகமாக உழைப்பதனுல் இப்பொழுது இருக்கும் செலவிலே அதிகப் பொருள்களை உற்பத்தி செய்யலாம். ஏதாவது இப்படிப்பட்ட வழிகளைக் கடைபிடித்து நடக்காவிட்டால் பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணமுடியாது. இவைகள் தான் நீண்டகால பொருளாதார சீரமைப்புக்குக்கு அடிகோலுவதாகும்.

நாணய மதிப்புக் குறைவினுல் இதுகாறும் நம் நாட்டிற்கு ஏற்படும் நன்மையைப்பற்றிக் கவனித்தோம். இதனுல் நமக்கு நஷ்டங்கள் பல இருக்கின்றன என்பதை நாம் உணரவேண்டும். இப்பொழுது டாலர் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எல்லாப் பொருள்களையும் இறக்குமதி செய்வதாலும் இதர டாலர் செலவுகளினுலும் நாம் சுமார் 28 கோடி ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டிவரும். இத்துடன் பாகிஸ்தான் தன்னுடைய நாணய மதிப்பைக் குறைக்காததனுல் அதற்குச் சுமார் 30 கோடி ரூபாய் அதிகமாய் கொடுக்கவேண்டிவரும். இந்த அளவுக்கு நம் நாட்டின் வரவு செலவு திட்டம் பாதிக்கப்படும். இதைச் சமாளிப்பதற்காக ஒரு வேளை இறக்குமதிகளைக் குறைக்கலாமென்ருல் உள் நாட்டில் பொருள்கள்விலைகள் அதிகமாகும். அதனுல் ஏற்கனவே பண வீக்கத்தினுல் வருந்துகின்ற நாடு அதிகமாக வருந்த நேரும்.

ஏற்றுமதியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லும் பொழுது எந்தப் பொருள்களை இதுவரை ஏற்றுமதி செய்து கொண்டிருந்தோமோ, அவைகளை அதிகமாக்க முடியுமா என்று எண்ணும் பொழுது அது ஓரளவுக்குமேல் முடியாத காரியமென்றுதான் நினைக்கவேண்டும். நம் நாட்டிலிருந்து அநேகமாக மூலப்பொருள்களையும், பாகிஸ்தானிலிருந்து வாங்கிய சணலினுல் நெய்யப்பட்ட பொருள்களையும் தான் ஏற்றுமதி செய்து வந்தோம். அப்படியிருக்கும் பொழுது குறுகிய காலத்தில் இம் மூலப் பொருள்களில் அதிகமாக ஏற்றுமதியைப் பெறுக்க முடியாது. மற்றும் பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யும் சணல், பருத்தி, மற்ற உணவு தான்யங்களுக்கும் நாம் முன்னர் கொடுத்து வந்த விலையை விட 44% அதிக விலை கொடுத்து வாங்க வேண்டும். அப்படி வாங்கிய மூலப் பொருள்களினுல் உற்பத்தி செய்த பொருள்களைக் குறைந்த விலைக்கு நாம் ஏற்றுமதி செய்வோமேயானுல் நமக்கு ஏற்படும் நஷ்டம் அதிகமாகிக் கொண்டே போகும். அதுவுமன்றி அமெரிக்காவுக்குத்தான் அதிக சணல் துணி ஏற்றுமதிசெய்து வருகிருேம். அவர்கள் ஏற்கனவே இதற்குப்பதிலாக ஒருவித காகிதப் பையைக் கண்டு பிடித்து உபயோகிக்க ஆரம்பித்து விட்டார்கள். அப்படியிருக்கும்

பொழுது நாம் இப்பொழுதைய விலையை விட இச் சணல் பைகளுக்கு அதிக விலை கேட்போமானல் நம் பொருள்களை அவர்கள் வாங்க மாட்டார்கள். இதனல் நாம் இவ்வளவு ஆண்டுகளாகப் பெற்றுவந்த டாலர்கள் தொகை குறைந்து விடுவது திண்ணம்.

உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்யலாமென்று நினைத்தால், நாம் உற்பத்திச் சாதனங்கள் பெரும்பாலும் அமெரிக்க நாட்டிலிருந்துதான் இறக்குமதி செய்கிறேம். அதற்கும் புது நாணய மதிப்புப்படி அதிகம் செலவிட வேண்டியதை மேலே கண்டோம். அதுவுமன்றி நாம் பெறவேண்டிய ஸ்டர்லிங்கு பவுண்டுகளினுடைய அமெரிக்க மதிப்பு குறைந்து விட்டது. காரணம் இங்கிலாந்தின் நாணய மதிப்புக் குறைவுத் திட்டமேயாம். ஸ்டர்லிங்கு நாடுகளுக்கு மட்டும் ஏற்றுமதி செய்யலாமென்று நினைத்தால், அவைகளில் பாகிஸ்தான் தவிர எல்லா நாடுகளும் தங்களுடைய நாணயங்களுடைய மதிப்பைக்குறைத்துக் கொண்டன. ஆதலால் எல்லா வகைகளிலும் நாம் இன்னல்களுக்குட் படுகிறேம்.

ஆனல் இப்பொழுது நம் நாடு இருக்கும் நிலையிலே வேறு வழியைக் காணேம் என்று தான் சொல்ல வேண்டும். பல ஆண்டுகள் நம் நாட்டு நாணயத்திற்கும் பொருளாதாரத்திற்கும் இங்கிலாந்து நாணயத்திற்கும் பொருளாதாரத்திற்கும் அதிக தொடர்பு இருந்து வந்திருக்கிறது. நமது வெளி நாட்டு வாணிபம் இங்கிலாந்துடன் அதிகம் இணைக்கப் பட்டிருப்பதனல் நாம் நம் நாணய மதிப்பைக் குறைத்துக் கொள்வதன்றி வேறு வழியில்லை என்ற முடிபுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. இதை நாம் திருத்தி அமைக்கவேண்டுமானல் நம் பொருளாதார அமைப்பை மாற்றி அமைக்கவேண்டும் என்பதை நாம் உணரவேண்டும்.

பற்களைக்குறித்த பல மூட நம்பிக்கைகள் உலகத்தில் நிலவுகின்றன. பற்கள் ஒன்றுக் கொன்று தூரமாக இருந்தால் அவன் அதிர்ஷ்டசாலி. குழந்தை பல்லைக் கொண்டே பிறந்தால் அது அபசகுனம். அல்லது தக்க பருவத்தில் பல் தோன்றும்பொழுது மேல் வரிசை முதலாகத் தோன்றினல் அதுவும் கெட்ட அறிகுறி. இத்தகைய சிசுக்களை, ஆப்பிரிக்காவில் வசிக்கும் பாசுடாஸ் என்ற ஓர்வகை வகுப்பினர் உடனே கொன்றுவிடுகிறார்களாம். குதிரைக் குட்டி, முயல், காட்டுப் பன்றி இவைகளின் பற்களைக் கழுத்தில் அணிந்து கொண்டால் பல்வலியைத் தடுக்கலா மென்று சிலர் நம்புகின்றனர்.

உலகத்தையே விழுங்கினாலும் சீரணிக்கும் பசி அவன் வயிற்றிலே. அறுசுவை உண்டி மணம் பரப்பியது அவன் தலைமேலே. ஆனால், ஒரு பருக்கை கூடத் தொட முடியாது. — **இது சமூகம்.**

அவன் கொட்டவில்லை. யாரோ ஒருவரின் தடைக் கம்பி செய்த செயலுக்கு அவனைப் பழி சொன்னார்கள். — **இது நியாயம்.**

அவனை விபத்துக்குள்ளாக்கிய ‘டிரைவர்’ தண்டனை அடைந்திருக்கலாம். அதனால் அவனுக்கு என்ன? முன்னே கிடைத்த அரை வயிற்றுச் சோறும் அவன் குடும்பத்தில் இல்லாமல் போயிற்றே. அதற்கு வழி சொல்லாததுதான் **சட்டம்.**

சோற்றுக் கூடைக்காரி

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்

சென்னையில் வெப்பம் 107 ‘டிகிரி’ என்பதை எல்லோரும் அக்கறையோடு பேசிக்கொண்டனர். ஆனால், சின்னையனுக்குக் காய்ச்சல் எத்தனை ‘டிகிரி’ என்பதை யாருமே கணக்கெடுக்க வில்லை. தளதளத்து மின்னும் தார் ரோட்டைப்போல் அவன் உடல் கொதித்துக்கொண்டிருந்தது. கிழிந்த பாயின்மீது அசைவற்றுக் கிடந்தான் அவன். கையிலும் காலிலும் காணப்பட்ட கட்டுகளும் வீக்கமும் அவனது உடல் மெலிவை ஒருவாறு மறைத்துக்கொண்டிருந்தன. குடிசைமீதிருந்த ஓட்டைகளின் வழியாக ஒழுகி வந்த வெய்யில் கதிர்கள் சின்னையனின் முகத்திலும் உடலிலும் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தன.

“அடடா, பொழுது உச்சிக்கு வந்திடுச்சே!” என்று துடித்து எழுந்தாள் சின்னையனின் மனைவி. அவளுடைய பெயர்தான் பொன்னம்மாளே தவிர, காதிலும் கழுத்திலுங்கூட வெறும் கருகமணிகள்தான் மின்னிக்கொண்டிருந்தன! வறுமையின் வாட்டத்தினாலோ, அல்லது தினமும் உச்சி வெய்யிலில் வீதிவீதியாக அலையும் வெப்பத்தினாலோ அவளுடைய மேனியும் முகமும் கறுத்துச் சுருங்கிக் கிடந்தன.

அவசர அவசரமாக இரண்டு மூன்று துண்டுத் துணிகளைச் சேர்த்துத் திறமையான முறையில் தன் உடலை ஒருவாறு மறைத்துக்கொண்டாள். மற்றும் சில கந்தல்களை எடுத்துப் பாதங்களில் குஷ்டரோகிகள் கட்டிக் கொள்வது போல் சுற்றி முடிந்து கொண்டாள் செருப்புக்குப் பதிலாக! இனி

வெளியில் கிளம்ப வேண்டியது தான்.

இதற்குள் சின்னையனின் உடல் இலேசாக அசைந்தது. வாதாம் பழத்தைக் கொஞ்சம் பிளப்பது போல், ஜுரத்தின் கொடுமையால் சிவந்திருக்கும் கண்களைச் சற்றே திறந்தான். உலர்ந்து ஒட்டியிருந்த அவனது உதடுகள் மெதுவாக, "பொன்னி" என்று முனகின.

"என்ன?" என்று எதிரொலித்துக்கொண்டே அவனருகில் வந்து குனிந்தாள் பொன்னம்மாள். ஆதரவோடு அவனது நெற்றியைத் தடவிக்கொடுத்தாள். அவளுடைய கை பட்ட உணர்ச்சியினலோ என்னவோ சின்னையனுக்குச் சற்று தென்பு உண்டாயிற்று.

"கஞ்சி இருக்கா? ..."

ஆவலோடு மனைவியின் முகத்தை நோக்கின அவன் விழிகள். பொன்னம்மாள் ஏக்கத்துடன் உதட்டைப் பிதுக்கினுள். "ஏது கஞ்சி? நேத்து முழுதும் வீடு வீடா'க் கெஞ்சினேன். ஒரு பாவியும் நாலணுக்கூடக் குடுக்கலே. மாசம் முடிஞ்சுதான் தருவேன்'னு சொல்லிட்டாங்க"......

அவளது பேச்சு முழுவதையும் கேட்க அவனுக்கு விருப்பமோ சக்தியோ இல்லை. மீண்டும் சோர்வுடன் கண்களை மூடிக்கொண்டான்.

"கொஞ்ச நேரம் அப்படியே படுத்திருங்க. இன்னைக்காவது எங்கேயாச்சும் கேட்டுப் பணம் வாங்கியாறேன்" என்று தைரியம் கூறிவிட்டு எழுந்தாள் பொன்னம்மாள். தலையில் 'சும்மாட்டை'யும் கூடையையும் எடுத்து வைத்துக் கொண்டு குடிசைக் கதவை இழுத்துச் சாத்திவிட்டு வெளியே புறப்பட்டாள். தீயாகப் பொழிந்து கொண்டிருக்கும் அந்த உச்சி வெய்யிலில், தலைமீதிருந்த கூடையின் நிழல்தான் வறுமையைப் போல் அவளைக் கவிந்துகொண்டு சென்றது.

* * *

பொன்னம்மாள் பரம்பரையான தரித்திரக் குடும்பத்தில் பிறந்தவள். அதற்கேற்பவே பரம ஏழையான சின்னையனை மணந்தாள். ஆயினும் ஆரம்ப காலத்தில் அவர்கள் குடும்பம் பட்டினியில்லாமலே வாழ்ந்தது. சின்னையனுக்குக் கல்வியறிவோ செல்வமோ இல்லாவிட்டாலும், உடலில் நல்ல பலம் இருந்தது. தன்னைப் போன்ற சில கூட்டாளிகளுடன் சேர்ந்துகொண்டு பார வண்டி தள்ளுவதுதான் அவனது உத்தியோகம்!

"மனிதனுகப் பிறந்தவன் மிருகத்தைப்போல் வண்டி இழுப்பது மகா கேவலம்; காணச் சகியாத காட்சி!" என்றெல்லாம் பலர் பேசினர் – எழுதினர். ஆயினும் அப்படிப் பார வண்டி தள்ளுவது தான் சின்னையன் காலந் தள்ளுவதற்குரிய ஒரே வழியாக இருந்தது. உடல் நோக உழைக்க வேண்டியிருந்த போதிலும் பசியின்றி வாழ முடிந்தால் போதும் என்பதிலேயே அவனுக்குத் திருப்தி.

இவ்வாறு பிறருடைய 'நல்வாழ்வு'க்காகத் தனக்குச் சக்தியுள்ள வரையில் உழைக்க முற்பட்டிருந்த சின்னையன், தனக்குப் பிறகு உழைப்பதற்காகவும் சந்ததியை உற்பத்தி செய்துவைக்கவேண்டிய பொறுப்பை மறந்துவிட வில்லை! பொன்னம்மாளுடைய தோளிலும் முதுகிலும் குழந்தைகள் தொங்கி விளையாடலாயின. குடும்ப எண்ணிக்கை பெருகப் பெருக சின்னையனின் வருமானம் போதாக் குறையாகிக்கொண்டே

போயிற்று. ஆகையால், அவன் அதிகமாக உழைக்க முனைந்தான். தன்னால் முடியும் அளவுக்கு அதிகமாகவே பாரம் இழுத்தான்; நேரம், ஓய்வு எதையும் பொருட்படுத்தாமல் கடுமையாக வேலை செய்தான். இதனால் சின்னையனுடைய உடல் நிலைதான் நாளுக்குநாள் பாழாயிற்றே தவிர, வருமானம் ஈடுகட்டவில்லை.

இந்த நிலையில் குழந்தைகளுக்கு அடிக்கடி ஏதேனும் நோய் வந்து தொல்லை கொடுத்தது. வைத்தியச் செலவு, அதற்கேற்ற உணவு முதலிய தேவைகளாலும் நெருக்கடி அதிகமாயிற்று. எனவே, ஒரு வேளை இருவேளை பட்டினி கிடக்க நேர்ந்ததால் அவன் உடல் மெலிந்துவிட்டது.

ஒரு நாள் மாலை. கோபுரம் போல் மூட்டைகள் அடுக்கப்பட்டிருந்த ஒரு வண்டியைச் சின்னையனும் மற்றும் இரு கூட்டாளிகளும் அதிகச் சிரமத்துடன் தள்ளிக்கொண்டு வந்தனர். பார மிகுதியினாலும் வண்டியை ஒரு அடி தூரம் நகர்த்துவதுகூட க்கஷ்டமான நிலையில் சின்னையனின் கால்கள் தள்ளாடின. அவன் பார்வை இருண்டது. ஆயினும் அந்த வண்டியை இன்னும் அரை மைல் தூரம் தள்ளிக்கொண்டு போய்ச் சேர்த்துத்தான் தீரவேண்டும்.

ஏனெனில் சின்னையனுடைய மனைவி மக்களெல்லாம் காலையிலிருந்து முழுப் பட்டினி. வீட்டில் ஒரு பிடி அரிசிகூட இல்லை. ஆகையால் இந்த வண்டியைத் தள்ளிக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டால் கூலி—ஆகா, முழுசாக ஒரு ரூபாய்—சின்னையனுக்குப் பங்கு கிடைக்கும். அதைக் கொண்டுதான் அன்று இரவாவது அவன் குடும்பத்தார் பசிதீர்த்துக் கொள்ளவேண்டும். களைப்புக்காகச் சோர்ந்துபோய் வேலை செய்யாமல் படுத்திருந்தால் பட்டினி தீர வழி-?

தன் சக்தி முழுவதையும் ஒன்று திரட்டிக்கொண்டு உந்தித் தள்ளினான் சின்னையன். திருவாரூர்த் தேரைப்போல் ஆடியசைந்து கொண்டு ஒரு மூலையில் திரும்ப ஆரம்பித்தது வண்டி. அந்த நேரத்தில்தான் சனியன் மாதிரி ஒரு கார் எதிர்ப்புறத்திலிருந்து படு வேகத்தில் வந்து அதே மூலையில் திரும்பியது.........திடீர்!...........

கண்திறந்து பார்த்தான் சின்னையன். நடைபாதைக்கு அருகிலேதான் உருண்டு கிடப்பதை உணர்ந்தான். அவனது இடது காலிலும் தோளிலும் இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. வண்டியிலிருந்த மூட்டைகளனைத்தும் வீதியில் அணைகட்டியதுபோல் சரிந்து கிடந்தன. வண்டி புரண்டுவிழுந்து ஒரு புறத்துச் சக்கரம் ஆகாயத்தைப் பார்த்தவண்ணம் குடைராட்டினம் சுற்றிக்கொண்டிருந்தது!

வண்டியை முன்னே நின்று இழுத்துச் சென்ற கூட்டாளிகள் இருவரும் ஓடிவந்து சின்னையனைத் தூக்கினர். பெரிய ஆஸ்பத்திரியில் சின்னையனுக்கும் ஒரு கட்டில் கிடைத்தது!

எதிர்பாராத வகையிலே தனது கணவன் விபத்துக்குள்ளாகியது கேட்டு இடிவிழுந்தவள் போல் பொன்னம்மாள் கலங்கினாள். ஆஸ்பத்திரிக்கு ஓடிச் சென்று சின்னையனைப் பார்த்துக் கதறியழுதாள். குடிசைக்குத் திரும்பி வந்து அருமைக் குழந்தைகளின் பட்டினிப் பரிதவிப்பைக் கண்டு நெஞ்சுருகினாள்.

சில தினங்கள் வரையில் ஆஸ்பத்திரிப் படுக்கையி லிருந்தான் சின்னையன். அவனுடைய கால் கை முதுகு எங்கும் தாங்க முடியாத வலியிருந்தது; ஆயினும் வயிற்றில் பசி இல்லை! நேரம் தவருமல் பாலும் ரொட்டியும் அவனுக்குக் கிடைத்தன. சுவர்க்கம் போன்ற இந்த வாழ்வுக்குத் தன்னை அனுப்பிவைத்த கார் டிரைவரை அவன் மனம் வாழ்த்தியது! ஆனால், தன் மனைவி மக்களைப் பற்றி நினைக்கும் பொழுதுதான் அவன் உயிருக்கே மகாவேதனையாக இருந்தது. "அவர்கள் என்ன செய்வார்கள்? இந்த ஆஸ்பத்திரியிலிருந்து அவர்களுக்கும் பால் ரொட்டி அனுப்பமாட்டார்களா?" என்று அவன் ஏங்கினான்.

திடீரென்று ஒரு நாள் சின்னையனை வீட்டுக்கு அனுப்பிவிட்டனர் ஆஸ்பத்திரி அதிகாரிகள். இனிமேல் நாள்தோறும் வந்து மருந்துபோட்டுக் கொண்டால் போதும் என்று கூறி, படுக்கையைக் காலி செய்து கொண்டனர். மீண்டும் தனது குடிசைக்கே வந்துசேர்ந்தான் சின்னையன். அதற்கு முன்பே வறுமையின் கொடுமை பூரணமாக அந்தக் குடிசையை ஆக்கிரமித்துக் கொண் டிருந்தது.

அரை வயிற்று உணவுக்காவது உழைத்துச் சம்பாதித்துக்கொண்டிருந்த தன்னை இப்படி வேதனைக் குள்ளாக்கிய 'டிரைவ'ருக்கு என்ன தண்டனை கிடைத்தது என்றறிய அவன் மனம் துடித்தது. ஆயினும் "அதனால் எனக்கு என்ன பயன்? என் குடும்பம் இனிமேல் பிழைப்பு நடத்துவதற்கு ஒரு நியாயமும் வழி கூறவில்லையே!" என்றும் சின்னையன் குறைப்பட்டான்.

அவன் முகத்தைப் பார்க்கும் பாக்கியமாவது கிடைத்ததே என்று பொன்னம்மாளுக்குச் சற்று ஆறுதல்தான். அவனுக்கு இந்தச் சமயத்தில் பசியில்லாமல் சோறு போடக்கூட முடியவில்லையே என்ற தவிப்பு மற்றொரு புறம். "நானே ஏதாவது சம்பாதிக்கா விட்டால் இனி வாழ முடியாது" என்ற முடிவுக்கு வந்தாள் பொன்னம்மாள். ஆனால், என்ன வேலை செய்வது?

வண்ணாரப் பேட்டையில் வசிக்கும் சிலர், ஜார்ஜ் டவுன் பக்கத்திலிருக்கும் அலுவலகங்களில் உத்தியோகம் செய்துவந்தனர். அவர்கள் காலையில் போனால் மாலை 5 மணிக்குத்தான் திரும்பிவர முடியும். ஆகவே, அவர்களுடைய வீடுகளி லிருந்து மத்தியானச் சாப்பாட்டைச் சுமந்துகொண்டு போய்க் கொடுக்கும் வேலையைப் பொன்னம்மாள் ஒப்புக்கொண்டாள். இதற்குக் கூலி, ஒரு சோற்று மூட்டைக்கு மாதத்திற்கு ஒன்றரை ரூபாய். மொத்தம் பத்துப் பேருக்குச் சோறு தூக்கிச் சென்றால் மாதத்தில் 15 ரூபாய் கிடைக்கும். இதுவே பெரிய அதிர்ஷ்டமாகத் தோன்றியது பொன்னம்மாளுக்கு!

* * *

இன்றைக்காவது யாரிடமேனும் பணம் கேட்டு வாங்கலாம் என்ற எண்ணத்துடன் கிளம்பிய பொன்னம்மாள், ஒவ்வொரு வீடாகச் சென்று சோற்று மூட்டைகளை வாங்கி அடுக்கலானாள். அன்று ஏதோ விசேஷ தினமாகையால் விதவிதமான காய்கறிகளாலோ என்னவோ, சோற்றுப் பாத்திரங்கள் அதிகமாகக் கனத்தன.

கூடையைச் சுமந்துகொண்டு வீதி வழியே சுட்டெரிக்கும் வெய்யிலில் நடக்க ஆரம்பித்த பொன்னம்மாளுக்கு மனம் ஒரு நிலையி லில்லை. கார் விபத்தின் அதிர்ச்சியினாலும்,

பட்டினிக் காய்ச்சலாலும் ஜன்னி கண்டவனைப்போல் படுக்கையில் கிடக்கும் கணவனின் நினைவு அவள் உள்ளத்தைக் கலக்கியது. வெயி லின் கொடுமையால் அவள் தலை கிறுகிறுத்தது. 'இந்த உலகத் தையே விழுங்கினாலும் ஒரு கணத் தில் ஜீரணித்துவிடுவேன்' என்பது போல் அவளது வயிறு புகைந்தது. அதேசமயத்தில் விதவிதமான அறு சுவை உணவுகள் அவள் தலைமீதே 'சவாரி' செய்தன! சில பாத்திரங் களிலிருந்து 'கமகம' வென்று கிளம் பிய வறுவல் மணம், பொன்னம் மாளின் வறண்ட நாவிலும் நீர் ஊறச் செய்தது.

ஆனால், அதை அவள் தொட முடியுமா? பசியால் துடித்துக் கொண்டிருக்கும் அவளது அரு மைக் கணவனுக்கு ஒரு பிடி சோற் றையாவது எடுத்துக் கொடுத்து விடலாமா?—தன் சொந்தச் செல வுக்கு இரண்டணுக்கூட இல்லாமல் திண்டாடும் பாங்கிக் 'கேஷியர்,' யாருடைய பணத்தையோ ஆயிரம் ஆயிரமாக எண்ணி அடுக்குவது போலிருந்தது பொன்னம்மாளின் நிலைமை.

'ஐயோ, இதில் ஒரு பாத்திரம் சோறு மட்டும் என்னுடையதா யிருந்தால்............என் கணவன், குழந்தைகள் எல்லோருக்குமே கொஞ்சம் பசி தீர்ந்துவிடுமே!'' என்று வீணுக ஆசைப்பட்டது அவள் ஏழை நெஞ்சம்.

"இந்தக் கூடையைக் கொண்டு போய் அங்கே இறக்கும்போது பத்துச் சோற்று மூட்டைகளுடன் திடீரென்று இன்னொரு சோற்றுப் பாத்திரமும் அதிகமாக இருந்தால் ....!'' என்றெல்லாம் பைத்தி யக்காரக் கற்பனை செய்தவண்ணம் போய்க்கொண் டிருந்தாள் பொன் னம்மாள்.

எதிரே வேகமாக வந்தார் யாரோ ஒருவர். அவர் சற்று ஒதுங்கித் தான் சென்றார். ஆனால், அவர் பிடித்துச் சென்ற குடைக் கம்பி மாட்டி, பொன்னம்மாளின் தலைமீ திருந்த சோற்றுப் பாத்திரம் ஒன்றை உருட்டிவிட்டது! பகீ ரென்று நடுங்கியது அவள் நெஞ்சம்.

பொத்தென்று கீழே விழுந்தது பாத்திரம். மூடி திறந்து சோறும் காய்கறிகளும் பொன்னம்மாளை நோக்கிச் சிரிப்பதுபோல் நடுத் தெருவில் சிதறின!

பொன்னம்மாளுக்கு அழுகையும் ஆத்திரமுமாக வந்தது. கண் மூடித்தனமாகச் சென்ற அந்த மனிதனை — கவனக் குறைவாக வந்த தன்னை — ஏன், இந்த உல கத்தையே அவள் சபித்தாள். பாத்திரத்தைமட்டும் எடுத்து மீண்டும் கூடையில் வைத்துக் கொண்டு வேகமாக நடந்தாள். அந்தச் சோற்றுக்காகக் காத்திருப் பவர் திட்டுவாரே என்ற பயம் அவளை வாட்டியது.

அவள் எதிர்பார்த்தபடியே அந்த மனிதர் சீறிவிழுந்தார். அத்துடன் எதிர்பாராத ஒருபழியையும் அவள் மீது சுமத்தினார்! "சீ, மூதேவி! வழியிலே சோற்றை எடுத்துத் தின்றுவிட்டு, இங்கே வந்து இப்ப டிப் பாசாங்கு செய்கிறாயா? வயிறு பெருத்த நாயே!'' என்று வசை பாடினார்.

"ஆமாம், அப்படிக் கீழே விழுந்து கொட்டியிருந்தால் பாத்திரம் நசுங் கக் காணோமே!'' என்று ஆராய்ச்சி யுடன் மறுப்பு காட்டினார் பக்கத் தில் நின்ற வக்கீல் குமாஸ்தா!

"எப்பொழுதுமே இவளுக்குத் திருடித் தின்பதுதான் வழக்கம் போலிருக்கிறது. அன்றொருநாள் என் மனைவி இரண்டு முட்டைகள்

வைத்தனுப்பினுளாம். இவள் இங்கே கொண்டுவந்தபோது பாத்திரத்தில் ஒரு முட்டை-தான் இருந்தது!'' என்று உண்மை போலவே உரத்துக் கூறினர் இன்னொருவர்.

இத்தனை நாட்களும் பொன்னம்மாளுக்குத் தெரியாத புதிய வழியொன்று, இப்பொழுதுதான் அவர்களுடைய பேச்சினுல் தெரிந்தது. ''தினசரி இவர்களுடைய சோற்றுப் பாத்திரங்களி லிருந்து கொஞ்சங் கொஞ்சம் நான் எடுத்திருக்கலாம் போலிருக்கிறதே!'' என்று அவள் நினைத்தாள். ஆனுல், அந்த வழியைக் கையாளுவதற்குச் சந்தர்ப்பம் அவளுக்கு அளிக்கப்படவில்லை.

''இன்றேடு தொலைந்து போ. இனிமேல் எங்களுக்கு நீ சோறு கொண்டுவர வேண்டாம். வேறு ஆள் வைத்துக்கொள்கிறேம்'' என்று அவளை உத்தியோகத்திலிருந்து அந்த நிமிஷமே 'டிஸ்மிஸ்' செய்துவிட்டார்கள்.

''இன்றைக்கு நான் ஹோட்டலில் சாப்பிடும்படி செலவு வைத்துவிட்டாய். ஆகையால் உன் சம்பளப் பணமும் கொடுக்கமுடியாது'' என்று தீர்ப்புக் கூறினர் சோற்றை இழந்து நின்ற ஆசாமி!

என்ன பதில் கூறுவதென்று பொன்னம்மாளுக்குப் புரியவில்லை. திருடவில்லை என்ற உண்மையை எப்படி அவர்களுக்கு நிரூபிப்பதென்பது தெரியவில்லை. வேலை, சம்பளம், நன்மதிப்பு யாவற்றையும் இழந்து, அபாண்டமான குற்றச் சாட்டுக்கும் ஆளான பொன்னம்மாள் திகைத்துப் போய்ச் சிலை போல் நின்றுள். ஜுரத்தினுலும், பட்டினியாலும் மரணவாயிலை நெருங்கிக்கொண்டிருக்கும் கணவனின் தோற்றங்கூட அப்பொழுது அவள் நினைவில் நிலைக்கவில்லை.

ஒத்துழையாமை

''மக்கள் தங்கட்குத் தாங்களே தூய்மைப்படுத்திக் கொள்வார்களாக. ஆட்சிமுறையின் தீமையில் அவர்கள் கலந்துகொள்ளாதிருப்பார்களாக. அங்ஙனம் செய்யின், ஆட்சிமுறை தானே மறையும்...... ஒத்துழையாமை மருட்டன்று; உருட்டன்று; வெற்றுரை யன்று; அது நமது உண்மையைச் சோதிப்பது. அதற்குத் திடமும் அமைதியும் கலந்த தியாகம் தேவை. ஒத்துழையாமை கோடல் மக்கள்மீதன்று; முறைமீதே யாகும்..........ஒத்துழையாமை அராஜக மன்று; ஒழுங்கீனமுமன்று. அரசாங்கத்தோடு ஒத்துழையாமை என்பது மக்களோடு நெருங்கிய ஒத்துழைப்புக் கொள்வதாகும்''.

— காந்தியடிகள்

● *இது சென்ற இதழில் வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி.*

குடியாட்சியின் தத்துவம்

திரு. எஸ். வி. சிட்டிபாபு, M. A.

●

தனித்ததொரு சிரிய குடியாட்சி முறை இருக்கிறதென்று துணிந்து கூற இயலாது. ஹாட்டர்ஸ்லி (Hattersley) என்னும் அறிஞர் விளம்புவதாவது, "குடியாட்சியின் லட்சியம் எந்த நாட்டில் எவ்வாறு விருத்தியடைந்திருக்கிறதோ அதையொட்டியே அந்நாட்டு மக்கள் தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கட்டுப் படுத்துவது அமைந்திருக்கும். மக்களின் பிரதிநிதிகளின் செயல் அந்தச் சமூகத்தின் பொது அபிப்பிராயத்திற்கேற்ப இருந்தால் குடியாட்சி அங்கு நியாயமாக முழுத் தன்மை எய்தியதாகும்." [1] என்பது.

அரசியல் துறையில் குடியாட்சியை ஒருசிலர் மிக்க தீவிரமாக நிந்தித்துப் பேசியுள்ளார்கள். குடியாட்சியினால் மக்களுக்குத் தீமையே அதிகமன்றி நன்மையில்லை என அவர்கள் கருதுகிறார்கள். டாலிரான்ட் (Talleyrand) என்பவர் குடியாட்சியைக் "கயவர்களின் குழுவாட்சி" [2] என்று பழித்திருக்கிறார். 'மக்கள் தங்களுக்காகத் தாங்களே ஒருவரை யொருவர் தடி கொண்டு அடித்துக் கொள்ளுதல் தான் குடியாட்சி' [3] என்று ஆஸ்கார் வைல்ட் (Oscar Wilde) பரிகாசம் செய்கிறார். 'பெரும்பான்மையோர் மதியீனர்களாக இருக்கும் மக்கள் கூட்டங்களினால் நடத்தப்படும் குடியாட்சி ஒரு முட்டாளாட்சியாகத் தானிருக்க முடியும்' என்று கார்லைல் (Carlyle) ஏளனஞ் செய்கிறார். 'ஐந்தே நிமிடங்களில் கவிழ்க்கப் படக்கூடிய பிரதிநிதித்துவக் குடியாட்சி ஓர் ஆட்சியா' என்று வினவுகிறார் வெல்ஸ் என்னும் புகழ்பெற்ற அறிஞர். 'மனித வர்க்கத்தில் ஐந்தில் நான்கு பங்குகளாக இருக்கும் இழிவான ஊழியக்காரர்களிடமே அறிவு விளங்குகிறதென்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது குடியாட்சி' என்று இடித்துரைக்கிறார் மென்கென் (Menken) என்னும் எழுத்தாளர் [4]. எனினும் இவ்வளவு வன்மையாகக் குடியாட்சியைத் தாழ்த்திக் கூறி, அற்பமென

---

1. The degree of popular control over the elected agents of the people will vary with the development, in any country, of the democratic ideal. Democracy will be logically complete where the action of the agent corresponds closely with the general will of the community which he represents.
2. "Democracy is an aristocracy of black guards."
3. "Democracy simply means the bludgeoring of the people, by the people, for the people".
4. "Democracy is based on the postulate that all wisdom rests with the inferior four fifths of mankind - with the havers of wood and drawers of water" Vide his Notes on Democracy."

மதிக்காமல் இன்றைய அரசியல் பேரறிஞர்களும் எழுத்தாளர்களும் குடியாட்சியை வேறு காரணங்களினுல் கண்டித்துப்பேசியுள்ளார்கள்.

தகுதியற்ற, பயிற்சியுருத அறிவிலிகளே பெரும்பாலும் குடியாட்சியில் பங்கெடுத்துக் கொள்வதால் அரசியல் மிகுதியாகப்பாதிக்கப்படுகிறது. ட்ரெயிட்ஷ்கி (Treitschke) என்பவர், குடியாட்சி கலவரப்படுத்துபவர்களுக்கும், இச்சகம் பேசுவோர்க்கும் அதிகாரஞ் செய்பவர்களுக்கும், போலி மக்கட் தலைவர்களுக்கும் ஒரு செழிப்பான வளர்ப்பு நிலம்[5] என்றும், அஃது இயற்கையாக ஆளும் ஆற்றலுடையோரை நம்பாமல் புறக்கணித்து விடுகிறதென்றும் கண்டிக்கிருர்[6]. அநீதியையும் தந்திரத்தையும் கையாண்டு அதிகாரத்தைக் கைப்பற்றிச் சக்தியற்ற பெரும்பான்மையோரைக் குடியாட்சியின் பேரில் ஆட்டிப் படைக்கும் வன்மையாளர்கள் குடியாட்சியைச் சுதந்திரத்திற்கு ஒரு பகையாகவே ஆக்கி விடுவதனுல் இம்முறையான அரசியல் நன்றன்று என்று எண்ணுகிருர்கள் லெக்கி மெயின் (Lecky & Maine) என்ற அறிஞர்கள். எந்த ஆட்சியிலாவது பரந்த பொறுப்பற்ற தன்மை (Universal irresponsibility) ஆதாரமாக விருக்கிறதா என்று நோக்கினுல் அது குடியாட்சியிலிருக்குமெனச் சிலர் இயம்புகிருர்கள். இதனுலேயே குடியாட்சிகள் தங்களுடைய மிதமிஞ்சிய செய்கைகளினுலேயே அழிவடைந்து வருகின்றன என்று J. A. ஃபுரூட் (Froude) குறைகூறுகிருர்[7]. மனிதர்களுக்குள் இயற்கை வேற்றுமைகள் இருக்கின்றன. இவ்வேற்றுமையிடையே ஒருவன் மற்ருெருவனுக்குச் சமம் என்ற கருத்தையுடைய குடியாட்சி அரசியலில், கற்ற அறிஞர்களும் ஆட்சி நிபுணர்களும் எவ்வாருக மதிக்கப்பட்டு, பொதுசேவையில் இடம் பெறுவர் என்று பெரும் ஐயங்கொண்டுள்ளார் சிலர். மற்றுஞ் சிலர் பின்வருமாறு கேள்வியிடுகின்றனர்: அடிக்கடி அரசாங்கம் நடத்துபவர் மாறி வருகின்ற குடியாட்சியின் கீழ் எவ்வாருக மக்களிடையே ஒரே வகையான கொள்கையைச் சில ஆண்டுகளுக்காவது பின்பற்ற முடியும்? இங்ஙனம் அரசாங்கம் நடத்துபவர்கள் மாறி வருவார்களானுல் வெளிநாட்டுக் கொள்கை பாதிக்கப்படாதா? மக்கள் தாங்களே தங்களறிவை உபயோகித்து முடிவுக்கு வருகின்றனரா? வேலை மிகுதியினுலும், இதர சொந்த விஷயங்களில் அதிகமாக ஈடுபட்டிருத்தலாலும் நாட்டார் (Citizens) அரசியலைப் பற்றி உண்மையிலேயே சிந்திக்கிருர்களா? மக்களுடைய கருத்துக்கள் இக்காலத்தில் செய்து வரும் பரந்த ஒழுங்கான (extensive and organisised propaganda) பிரசாரங்களால் ஆக்கப்படுகின்றன அல்லவா? அங்ஙனமாயின் எந்த அரசியல் வகுப்பிற்கு நிதியும் வன்மையும் இருக்கின்றனவோ அந்த வகுப்புத் தானே குடியாட்சியின் பேரில் மக்களைத் தங்கள் கொள்கைக்கும் செய்கைக்கும் அடிமைப்படுத்துகின்றது? இதுவா குடியாட்சி?

---

5. See his "Politics," Vol II, p. 290.
(Prolific breeding - ground for agitators, flatterers, bosses and damagogues)
6. "Short Studies: Party Politics" என்னும் அவர் நூலைப் பார்க்கவும்,
7. அதில் அவர் சொல்வதாவது: "Popular governments have hitherto uniformly gloded into democracies and democracies as uniformly perish of their own excess."

இஃது ஒரு குழுவாட்சி யல்லவா? இவ்வாருக இன்னும் அநேக கேள்விகளைக் கேட்கின்றனர் குடியாட்சியின் கண்டனக்காரர்கள். இவர்கள் மேற்கூறியுள்ள குறைபாடுகளை மிகுதிப்படுத்தி வருங்காலத்தை யுரைப்பவர்கள்போல், குடியாட்சி தானே சீர்குலைவதுடன் மனித வாழ்க்கையையே உருவழிக்கப் போகிறது என்று பறைசாற்றி வருகின்றனர். ஆனல் இவர்களது கூற்றில் உண்மை உண்டா? மற்ற ஆட்சிகளுக்கு இதற்கு முன்பு ஏற்பட்ட தாழ்ச்சியும் வீழ்ச்சியும் குடியாட்சிக்கும் நேரிடப் போகிறதா? அதன்றிக் குடியாட்சி வாழுமா? குடியாட்சி திகழுமா? வருங்காலத்தில் அதற்கு இடமுண்டா? இவைகளை இனி ஆராய்வோமாக!

மேற்கூறிய குறைபாடுகளினுல் மற்ற ஆட்சிகள் அழிந்ததுபோல் குடியாட்சியும் அழிவதற்குத் தகுதி வாய்ந்தது என்று கூறமுடியுமா? குடியாட்சியினுல் சாத்தியமாகாத காரியங்களை எதிர்பார்க்கக் கூடாது என்று சொல்லுகிருர்கள். மனிதத் தன்மையில் மாறுதல் ஏற்பட்டாலன்றி எந்த ஆட்சியிலும் எல்லாக் காரியங்களையும் செய்ய முடியாது என்பது திண்ணம். குடியாட்சியைச் சரியான முறையில் சோதனை செய்து, வேண்டுமானுல் அதை நடைமுறையில் மற்ற ஆட்சிகளுடன் சம நிலையில் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்று பிரைஸ் என்ற பேராசிரியர் சொல்லுகிருர். இருபதாம் நூற்ருண்டு உலகத்தைப் பதினும் நூற்ருண்டு உலகத்தோடு ஒப்பு நோக்குவோமானுல் மக்களாட்சியினுல் எவ்வளவு குறைபாடுகள் நீங்கின என்பதையும் மக்களுடைய சம உரிமை உணர்ச்சியையும் உணரலாம். இதைக் குறித்து நாம் மகிழ்ச்சியடைய வேண்டியவர்களாகிருேம். எதிர்பார்த்த அளவுக்குக் குடியாட்சியினுல் நன்மைகள் ஏற்படாவிட்டாலும், பல தலைமுறைகளாக மக்களை அறியாமையாகிய இருளில் ஆழ்த்திய கொடுமைகளும் பயங்கரச் செய்கைகளும் அநீதிகளும், அடக்குமுறைகளும் சில நாடுகளில் அடியோடு அழிக்கப்பட்டன; மற்றைய நாடுகளில் பெரிதும் குறைக்கப்பட்டன என்பதை நாம் உணர வேண்டும்.

முதல் உலக யுத்தத்திற்குப் பின், உலகத்தைக் குடியாட்சிக்குத் தகுதி வாய்ந்ததாக ஆக்கவேண்டுமென்ற முடிவுக்கு வந்தார்கள். ஆனல் அது நிறைவேறவில்லை. குடியாட்சிக்குச் சவால் விடும் முறையில் சர்வாதிகாரம் தலையெடுத்தது. குடியாட்சியின் சிறு குற்றங்களை ஆதரவாகவும் ஆதாரமாகவும் கொண்டெழுந்த பாசிசம் ஏதேச்சாதிகாரத்தின் அறிகுறியாய் நிலவலாயிற்று. படை வலிமை, தேசிய சுய தேவைப்பூர்த்தி, அந்தந்தச் சமூகப் பாதுகாப்பு இவையே மேலே சொன்ன பாசிசத்தின் நிலைக்களன்கள் ஆயின. மற்ருெரு புறத்திலே பொருளாதாரச் சம உரிமையைப் பற்றிய பேச்சைப் பரப்பி எழுந்தது பொதுவுடைமையின் கொள்கை. பாசிசத்தை எதிர்ப்பவரின் தலைமையினைப் பொதுவுடைமை ஏற்றது. இத்தனைக்கும் இடையே, குடியாட்சியின் ஆற்றல் மிகுதியாலும், உரிமை வேட்கையின் பெருக்கத்தாலும் பாசிச சர்வாதிகாரம் புசுபுசுத்ததைக் கண்டுவிட்டோம். இன்றைய நிலையில் குடியாட்சியின் வெளிப்படை எதிரியாக அமைந்துகிடப்பது பொதுவுடைமைதான். “பாசிசத்தினின்றும் பொதுவுடைமையைத் தெளிவாகப் பிரித்துக்காட்டியது பொதுவுடைமைக் கொள்கையின் சர்வ

தேசியம்தான். தொழிலாளர்க்குரியது இந்த உலகம் என்பதுதான் அவர்கள் முழக்கமாக இருந்தது. தேசியப் பற்று என்பது மக்களின் மனத்தை மருட்டி, மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் வழியிலிருந்து அவர்களைத் திருப்பி விடுவதாகும் என்று பொதுவுடைமை வாதிகள் சொல்லிவந்தார்கள். ஆனால், பொதுவுடைமையின் இன்றைய நிலை என்ன? ரஷ்யாவின் பொதுவுடைமை ரஷ்ய தேசியமாகவே மாறிவிட்டது. ஹிட்லரின் ஜர்மனியோ முசோலினியின் இத்தாலியோ பொதுவுடைமை ரஷ்யாவை விட மோசமல்ல. பொதுவுடைமை நிலையூன்றிய இடத்தின் மனப் பக்குவம் பாசிசம் நிலைபெற்ற இடத்தின் இயல்பையே ஒத்துள்ளது. நாசவேலை, பொய்மை, கரவு போன்ற பண்புகள் இரண்டுக்கும் பொதுவான இயல்புகள். குறிக்கோள், பகுத்தறிவு ஆகிய வற்றையும் புறக்கணிக்கும் அளவுக்குத் தங்களை முழுவதாக ஒப்படைக்கும் வெறி, மனித இனத்தின் முன்னேற்றம் என்று சொல்லப்படும் ஒன்றுக்காக மனிதனையே அழிப்பது ஆகிய இவையும் பாசிசத்தை ஒத்த பொதுவுடைமையின் இயல்புகளே. ரஷ்யப் பொதுவுடைமை என்பது ஒற்றைக் கொள்கை வெறியாக மாறி எதிர்கட்சி என்ற நினைப்பையும் பொறுக்க இயலாததாக ஆகி விட்டது. இந்தக் கீழான நிலைமை ரஷ்யாவிலே நிகழ்ந்த உள் நாட்டுக் கலகத்தின்போது கூட ஏற்பட்டதில்லை. இன்றைய நிலையில் குடியாட்சியையும் தனி மனிதன் உரிமையையும் பாசிசம் பொதுவுடைமை ஆகிய இரண்டுமே வெறுக்கின்றன. மக்களுக்கு உரிமை வேண்டுமென்று தங்கள் அளவில் விரும்புகிறார்கள்; ஆனால், தங்களால் முடிந்த வரையில் பிறர்க்கு உரிமை தர மறுக்கிறார்கள்.''[8]

8 27-8-49ல் இந்தியன் எக்ஸ்பிரசில் வெளிவந்த லூயி பிஷரின் கட்டுரை.

சென்ற அக்டோபரில் எழுதியது

'தீபாவளி நெருங்கி வருகிறது. ஆனால், இந்த ஆண்டிலே நம் நாட்டுப் புறங்களில் மண்ணாலாகிய அகல் விளக்குகளும் ஒளிர மாட்டா; நகரங்களி லுள்ள வெள்ளி விளக்குகளும் எரிய மாட்டா. இன்னமும் ஐயன் பிரிந்த பிரிவின் ஏக்கம் நாட்டவரின் உள்ளத்திலே மண்டிக் கிடக்கிறது. நூற்றாண்டுக் கணக்கில் பிணிப்புண்டு கிடந்த இந்தியாவின் தளை நீக்கி, அப்பெருங் கண்டத்துக்கு உரிமை வாழ்வும் உயரப் பறக்கும் கொடியும் தந்தவர் அவரல்லவா?'

— கவியரசி சரோஜினி
(அக்டோபர் '48)

விளுக்களும் விடைகளும்

சேக்கரின், சர்க்கரையை விட 600 பங்கு இனிப்புடையது என்கிருேம். அதைவிடப் பன்மடங்கு இனிப்பான பொருள்களைக் கண்டுபிடித்திருப்பதாக வும் கூறுகிறீர்கள். இனிப்பை இவ்வளவு பங்கு என்று எவ்வாறு அளக்கக் கூடும்?

இனிப்பை அளக்கச் சில எளிய வழிகள் உள்ளன. உதாரணமாக ஒரு பலம் எடையுள்ள சர்க்கரையை ஒரு படி நீரில் கரைப்பதாக வைத்துக்கொள்வோம். இதைச் சுவை பார்த்துக்கொள்ள வேண்டியது. அதே ஒரு பலம் எடையுள்ள சேக்கரினுடன் நீரைச் சேர்ப்பதாஞல் 600 படி நீரைக் கலந்த பின்தான் சேக்கரின் கரைந்த நீர் மேற்கண்ட சர்க்கரை நீருக்குச் சரியான இனிப்பைக் கொண்டதாயிருக்கும். சர்க்கரையைவிட எத்தனை பங்கு அதிக நீர் வேண்டியிருக்கிறது என்று பார்த்துக்கொண்டால் தெரிந்து விடுமல்லவா?

முகில்கள் சில சமயங்களில் வெண்மையாயும் சில சமயங்களில் கருமையாயும் இருக்கின்றன. நீரைப் பொழியும் மேகம் ஆகாயத்தில் மிதந்து செல்லும்போது அதன் தன்மை என்ன? அது ஆவியா?

நீராவி கண்ணுக்குப் புலப்படாது. ஆவி குளிர்ந்தால் நீர்த் துளிகள் தோன்றுகின்றன.

நீராவி மேலே சென்று குளிர்வதால் ஏற்படும் கண்ணுக்கும் புலனுகாத எண்ணற்ற நுண்ணிய நீர்த் துளிகளின் கூட்டத்தாலானவை மேகங்கள். சில சமயங்களில் இவை வரம்பு மீறிக் குளிர்ந்த நீர்த்துளி களாயும் இருக்கும்.

கருமுகிலும் வெண்முகிலும், வெறும் நீர்த் துளிகளால் ஆனவையே. கருமுகில் திரள் மிக மிகப் பெரிதாகையால் ஒளி புகாததாய் இருண்டு காண்கிறது.

சிறிய நீர்த்துளிகள் ஒன்று சேர்ந்து பெரிய துளிகளாகி மழை பெய்கிறது

சில சமயங்களில் மிக உயரத்தில் இறகு போன்ற கீற்றுகள் வடிவத்தில் தெரியும் மெல்லிய மேகங்கள் (cirrus clouds) அதிகக் குளிரிஞல் உறைந்த, கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய பனிக் கட்டிகளால் ஆகியவை. இவை சுமார் 10 மைல் உயரத்திற்கு மேல் மிதக்கும்.

நல்ல பார்வையுடையவர்களும் குளிர்ச்சிக்காகக் கண்ணுடிகளை (Cooling glasses) அணிகிருர்கள். அதனுல் கண்ணுக்குக் கெடுதல்கள் ஏதேனும் விளைய இடம் உண்டா?

நல்ல கண்களாயிருந்தாலும் சிலர் பகல், இரவு என்று பாராமல் குளிர்ச்சிக்காகக் கண்ணுடிகளை அணிந்திருப்பதுதான் நாகூக்கானது என்று கருதுகிருர்கள். நாளடைவில் இவர்களுடைய கண்கள் சாதாரண வெளிச்சத்தையும் பொறுக்க முடியாதனவாகி விடுகின்றன.

காயும் வெய்யிலில் அளவுக்கு விஞ்சிய வெளிச்சத்தை மட்டுப்

படுத்தப் பல நிறங்கொண்ட கண்ணாடிகளைக்காட்டிலும் புகைக் கண்ணாடிகள் நல்லவை.

காயும் வெய்யிலில் வெறும் கண்கள் கூசுகின்றன. அதைத் தடுக்கக் கண்ணிலுள்ள திரை (iris) சுருங்குவதால் கதிரொளியின் ஒரு பகுதியாகிய சூட்டைத் தரும் கதிர்களும் (infra-red-rays) தடுக்கப்படுகின்றன. ஆனால் கண்ணாடிகள் ஒளியைமட்டும் கட்டுப்படுத்துவதானல் கண்ணின் திரை சுருங்காது; சூட்டைத்தரும் கதிர்கள் கண்ணுள் சென்று கண்ணுக்குக் கெடுதல் தரும். ஆகவே இத்தகைய கதிர்களையும் தடுக்க வல்ல கண்ணாடியாயிருத்தல் வேண்டும். க்ரூக்ஸ் (crooke's) என்ற ஒரு வகைக் கண்ணாடி இதற்கு ஏற்றது. நல்ல கண்ணாடிகளுக்கு நல்ல விலையும் கொடுக்க வேண்டும்.

மேலும் கண்ணாடிகளின் வில்லைகளைக் கண்முன் அசைத்தால் கண்ணாடியூடே தெரியும் உருவங்கள் சற்றும் அசையக்கூடாது. அவ்வுருவங்களும் அசையுமானல் நல்ல கண்களுக்கும் தீங்கு விளையும். ஐம்புலன்களிலும் சிறந்த கண்ணுக்குச் சரியான பாதுகாப்பு அளிப்பதில் கவனமா யிருக்கவேண்டும்;

முக்கூடற் பள்ளு, குற்ருலக் குறவஞ்சி போன்று பொதுமக்களுக்கு விளங்கும் வகையில் இலக்கியங்கள் பழந் தமிழ் நாட்டில் தோன்றவில்லை என்று சொல்லுகிருர்கள். இது உண்மையா?

உண்மை யன்று. எளிய நடையில் யாவரும் விரும்பிப் பயிலும் வகையில் பண்டைக் காலத்திலும் நூல்கள் தோன்றிய துண்டு. தொல்காப்பியர் இவ்வகையான நூல்களைப் 'புலன்' என்ற தொகுப்பிலே வகைப்படுத்திக் கூறினர்.

சேரி மொழியாற்
செவ்விதிற் கிளந்து
ஓதல வேண்டாது
தறித்தது தோன்றின்
புலன் என மொழிப்
புலனுணர்ந் தோரே

என்பது அவர் விளக்கம். சேரி மொழி என்பது வழங்கும் சாதாரணச் சொற்கள் (பாடி மாற்றம்). இப்பிரிவில் அடங்கும் வகையில் பழங்காலத்தில் தோன்றிய விளக்கத்தார் கூத்து முதலான நூல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. கிடைக்கவில்லையே தவிர, பொது மக்கள் இலக்கியங்கள் தோன்றவில்லை என்பது தவறு.

ஐயன் பிரிந்தபோது

"நம் ஆன்ம விளக்கு அணைந்துவிட்டது; எங்கெங்கும் காரிருள் கப்பிக்கொண் டிருக்கிறது. தேசத் தந்தை இப்போது நம்மிடையில் இல்லவே இல்லை.

— பண்டித நேரு

நூல் அரங்கு

> குறிப்பு: நூலரங்கத்த அனுப்பும் நூல் ஒவ்வொன்றிலும் இவ்விரண்டு படிகள் அனுப்ப வேண்டும்.

கதிர்மணி விளக்கம்: உரையாசிரியர்: பண்டிதமணி- கதிரேசச் செட்டியார் கிடைக்குமிடம்: பொதிகைப் பதிப்பகம், கடலூர்-என். டி. பக்கம்: 457. விலை ரூ. 8.

மணிவாசகப் பெருந்தகையின் திருவாசகத்துள் ஒரு பகுதியாகிய திருச்சதகத்துக்குப் பெரும் பேராசிரியர், முதுபெரும் புலவர், பண்டிதமணி முதலான பல புலமைச் சிறப்புகள் பெற்ற கதிரேசச் செட்டியார் அவர்கள் வரைந்துள்ள பேருரையின் பெயரே கதிர்மணி விளக்கம் என்பது. "கலையறிவும் அநுபவ உணர்வும் நிரம்பப் பெற்ற பெரியவர்கள் மேற்கொள்ளத் தக்க பணி" என்று உணர்ந்தே பெரும்புலவர் இவ்வுரை வகுத்துள்ளார். பேருரை இன்னின்ன இயல்புகள் பொருந்தப் பெற்றதாதல் வேண்டும் என்று வரையறுக்கும் இலக்கண விதியை மறக்காமலும் புறக்கணிக்காமலும் இவ்வுரை எழுந்துள்ளமை குறிக்கத் தக்கது. பண்டை உரையாசிரியன்மார் நெறி நின்று மேற்கோள் காட்டலிலும் இலக்கணக் குறிப்பு வரைதலிலும் சற்றும் பின்வாங்காத பெரும் புலமை படைத்த பண்டிதமணியின் உரைப் பெருமை விரித்துரைக்கவேண்டுவதொன் றன்று. சுருங்கச் சொல்லின், புலவர்க்குப் பெரும்புலவர் தரும் விளக்கவுரை என்று கூறியமைதல் சாலும். கல்லூரிகள் முதலாய பொது நிலையங்களின் நூலகங்களில் இருக்கத் தக்க சிறப்பும் தகுதியும் பெறுவது கதிர்மணி விளக்கம். நல்ல தாள்; அருமையான பதிப்பு.

இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்: ஆசிரியர்: திரு. அ. ச. ஞானசம்பந்தம், எம். ஏ. கிடைக்கும் இடம்: இலக்கியப் பதிப்பதிகம், காரைக்குடி. பக்கம்: 216. விலை ரூ. 3—12—0

இலக்கியத்தை ஆராய்ச்சிக் கண்கொண்டு நோக்குவது இருவகைப்படும். நேர்முக நோக்கு என்றும் எதிர்முக நோக்கு என்றும் அவற்றைக் குறிக்கலாம். நேர்முக நோக்கமே நேர்மையான நோக்கமுமாகும். இந்த நேர்மையான நெறியிலேயே அறிஞர் ஞானசம்பந்தம் இவ்வாராய்ச்சியினை நிகழ்த்துகின்ருர். இலக்கியத்தை அவ்விலக்கியத்துக்குரிய அளவுகோல் கொண்டே மதிப்பிடுதல் வேண்டும் என்ற உண்மையினை உணர்ந்த ஆசிரியரின் திறம் பாராட்டத் தக்கது.

கம்பராமாயணத்தைத் தெளிவுறப் பயின்றபின் அதன் இலக்கிய மதிப்பினைத் திறனய்வு முறையால் அளவிடப் புகுந்த ஆசிரியர், இராவணனைக் கம்பர் படைத்து உலவவிட்ட வகையினைத் தெளிவுபடுத்துகிருர் இந் நூலில். தமிழ் நூற் பயிற்சியும் ஆங்கில ஆராய்ச்சி நூல் அறிவும் ஒருங்கே பெற்றுள்ள அரிய வாய்ப்பினைச் சிறப்புறப் பயன்படுத்தியதன் விளைவுதான் இச் சீரிய நூல்.

இராவணன் என்ற பெரியவன் தன் சிறு தவறு காரணமாகத் தன் மாட்சி யழியப் பெற்றுத் தானும் அழிகிறான் என்பதை நிலைநாட்டும் வழியில் அவனை ஓர் அவலத் தலைவனாகக் கம்பர் அமைத்துள்ளார் என்பது இந் நூல் ஆராய்ச்சியாளரின் கொள்கை யாகும். மேலைநாட்டு இலக்கிய ஆராய்ச்சிப் பயிற்சி தக்க வண்ணம் ஆசிரியருக்குக் கைகொடுத்து உதவுகிறது. கம்பருக்கு மேற்கத்திச் சாயம் பூசிவிட்டாரோ என்று யாரும் அஞ்சவேண்டுவதில்லை. தமிழ் மரபு பிறழாமல் நூல் அமைந் துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

காப்பியம், அவலம், கலைஞன் வீழ்ச்சி என்ற அதிகாரங்கள் ஆசிரி யரின் ஆராய்ச்சித் திறமையின் உச்ச நிலையைக் காட்டுகின்றன. ஏனைய அதிகாரங்களில் இராவணனுடைய மாண்பினையும் தீமையினையும் படிப் படியாக ஏற்றிச் செல்லும் பான் மையில் ஆசிரியரின் வாதத் திறம் தெளி வாகிறது.

இத்தகைய ஆராய்ச்சி நூல்கள் பல வற்றை ஆசிரியரிட மிருந்து தமிழினம் எதிர்பார்த்து வாழ்த்துகிறது.

மாப்பிள்ளை வேட்டை (நாடகம்):– ஆசிரியர்: திரு. ரஞ்சன். கிடைக்கும் இடம்: 'நாட்டியம்', கதீட்ரல் போஸ்டு, சென்னை–6. பக்கம்: 96. விலை ரூ. 2.

சாதாரணமான ஒரு சிக்கலை (Plot) வைத்து ஓரளவு திறமை கொண்டு அதனை நீக்கியமைத்த நாடகம்தான் இந் நூல். "நாடக ரூபத்தில் சிறந்த பொழுதுபோக்கை அளிக்கவேண்டும் என்ற ஆவலுடன்தான் இதை எழுதி னேன்" என்று ஆசிரியர் கூறுகிறார். கலைத்துறையில் உள்ள இவருக்குப் பொழுதுபோக்குவதற்கு ஏற்பட்ட கருவிதான் கலை என்ற 'கொள்கை' இருப்பது அவ்வளவு நல்லதாகப் படவில்லை. வெறும் பொழுது போக்குக்காகத்தான் கலை என்றால் நூற்றுக்கு ஐம்பது பங்கு ஆசிரியர் வெற்றி பெற்றிருக்கிறார் என்று கூற லாம். நாட்டியத் துறையில் புகழும், பொழுது போக்குக்குப் பயன்படாத கலை நுட்பம் காட்டும் 'நாட்டியம்' இத ழின் ஆசிரியர் பதவியும் கொண்டுள்ள திரு. ரஞ்சன் பொழுதுபோக்காகவே கலையை மாற்றிவிடக் கூடாது என்பது நமது விருப்பம்.

அன்பு விடு தூது:– ஆசிரியர்: திரு. இராசமாணிக்கம் பிள்ளை. கிடைக்கும் இடம்: முருகவேள் முத்தமிழாகரம், அம்பலத்தாடையர் மடத்து வீதி, புதுவை. பக்கம்: 78. விலை அணா 12.

வாணிகத்துறையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர் ஓய்வுநேரப் பணியாகத் தமிழ்ப் பயிற்சியினை மேற்கொண்டுள் ளார் எனத் தெரிகிறது. நல்ல நோக்கம். முருகன் பால் காதல் கொண்ட தலைவி, அன்பினையே அவனி டத்துத் தூதுவிடுவதைப் பாடுவது இந் நூல். மிக விரிவான குறிப்புரையும் உள்ளது; பயில்வோர்க்கு உதவியாக அது வேண்டு மல்லவா? பழந்தமிழ்ப் புலவர் நெறி மங்கிவிடாமல் இருக்க வேண்டு மென்பது இவ்வாசிரியரின் கருத்தெனத் தெரிகிறது.

தமிழ் பயிலும் மாணவர்க்குப் பாட நூலாக அமைக்கும் தகுதியுடையது இந் நூல். அன்பு என்பதே தமிழ் தான். இதை ஆசிரியர் விளக்குகிறார்:

"ஆவியெழுத் தின்முதலும்
ஆருடம் பின்கடவும்
மேவுசார் பொன்றுமுற
மென்பெயராய்த்–தாவில்சீர்த்
தொல்காப் பியமுதலுள்
தோய்வுற் றமர்தலினால்
அல்காப் பசுந்தமிழாய்......"

அ (உயிரெழுத்து), ன் (மெய்யெ ழுத்து), பு சார்பெழுத்து என அமைந் தும், தமிழின் முதலெழுத்தையும் (அ) இறுதி எழுத்தையும் (ன்) கொண்ட மைந்தும் அன்பு — தமிழ் ஆகிறது என்றெல்லாம் அரும்பாடுபட்டுத் தமி ழையும் அன்பையும் ஒன்றாகப் பிணைத் திருக்கிறார். இத்தகைய தமிழர்கள் (அன்பர்கள்) இருக்கும்போது தமி ழுக்கு ஒரு குறைவும் இல்லை யல்லவா? தமிழ் வாழ்க!

அபாயமின்மை, பாதுகாப்பு, சேவை ஆகியவற்றிற்கு

ஒரு 'வல்கன்' பாலிசி எடுத்துக்கொள்ளுங்கள்

வல்கன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: பம்பாய்

(ஸ்தாபிதம் 1919)

நெருப்பு, மோட்டார், கப்பல் தொழிலாளர் நஷ்ட ஈடு முதலிய இன்ஷ்யூரன்ஸ்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

விபரங்களுக்கு:—

துவாரகதாஸ் நாராயணதாஸ்

பிராஞ்சு மானேஜர், இந்தியன் பாங்கு கட்டிடம்

முதல் லைன் பீச், சென்னை.

தந்தி: "INFIRF" போன் 2027

பின்கண்ட ஊர்களில்

கலைக்கதிரை விற்பனை செய்ய

விற்பனையாளர்கள் தேவை:

திருவண்ணமலை, திண்டிவனம், குளித்தலை, பொன்மலை, இராசிபுரம், கும்பகோணம், லால்குடி, புதுக்கோட்டை, தேனி, துறையூர், கோவில்பட்டி, சாத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, பெங்களூர், திருவள்ளூர், வாணியம்பாடி, திருப்பத்தூர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

முன்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

கலைக்கதிர்

பூளைமேடு ★ கோவை

கலைக்கதிர் அன்பர்களுக்கு

- ‘கலைக்கதிர்’ பழைய பிரதிகள் ஒரு சிலவே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவில் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு பிரதி விலை அணா எட்டு.
- ‘கலைக்கதிர்’ ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதியன்று வெளிவரும்.
- சென்ற ஆண்டுச் சந்தாதாரராகச் சேர்ந்த அன்பர்கள் அடுத்த ஆண்டுக் குரிய சந்தாவையும் அனுப்பிக் கலைக்கதிரின் தமிழ்ப் பணிக்குத் தொடர்ந்து ஆதரவு தரவேண்டுகிறோம்.

Telegrams: SHRIANUPAM.

ANUPAM TRADING AND COMPANY,

BODE CHAWL,

PRINCES STREET, BOMBAY-2.

DIRECT IMPORTERS AND EXPORTERS.

Suppliers to Textile Mills including Bobbins, Woolen Goods. Leather Goods & Manufacturers of Spinning & Weaving Spare Parts Etc.

M. R. MAHADEVAN & CO.

SHENCOTTAH.

DEALERS IN ALL KINDS OF TIMBERS, SAWN AND SIZED AND TILES. UNDERTAKES OUTSIDE ORDERS AND EXECUTES THEM PROMPTLY. TRIAL ORDERS AND PATRONAGE SOLICITED.

SUB AGENTS TO

MESSRS. HARRISONS & CROSFIELD. LTD.

FOR

ASBESTOS CEMENT
ROOFING MATERIALS,
RAINWATER PIPES, FITTINGS
ETC., ETC.

STANDARD VACUUM OIL LTD.
INDUSTRIAL LUBRICANTS,
MOBILOILS, GREASES
ETC., ETC.

GOODLASS WALL LTD.
PAINTS, VARNISHES
ALUMINIUM PAINTS,
ENAMELS,
DISTEMPERS,
LINSEED OILS
ETC., ETC.

ELECTROLU
REFRIGERATORS
OPERATED BY
KEROSENE
ELECTRICITY

Phone: 209

Grams: "NAIDUBROS"

L. P. K. NAIDU & Bros.,

MERCHANTS & CONTRACTORS, COIMBATORE.

FRASER SQUARE ::

DEALERS IN:

S. V. O. C.
PETROL
CRUDE OIL, HIGH SPEED
DIESEL OIL,
POWER KEROSENE,
PROCESS PRODUCTS,
ETC., ETC.

A. D. V. & TROLLEY
EQUIPMENTS,
TYERS, TUBES Etc.
FOR
CARS, TRUCKS & TRACTORS.

ராதா கிருஷ்ண மில்ஸ் லிமிடெட்,

பீளமேடு, கோயமுத்தூர்.

"உயிர்வாழ உற்பத்தியைப் பெருக்கு"

கதிர்கள்	தொழிலாளர்
36,000	1850

முதல்–தொழில் ஒத்துழைப்பால் உயர்ந்த மாத சராசரி 1,250 பேல்கள்.

ஒரு தொழிலாளரின் சராசரி மாத ஊதியம் உற்பத்தி ரூ. 75 முதல் ரூ. 85 வரை.

உற்பத்தி, விலை, வினியோகக் கட்டுப்பாடு உத்திரவுகளின் குழப்பத்தால் தேங்கிக் கிடக்கும் பேல்கள் சுமார் 1500.

தொழிலாளர்க் களிக்கப்பெறும் வசதிகள்:—

நிரந்தர டிஸ்பென்சரி, தேர்ச்சிபெற்ற டாக்டர்கள், நர்சுகள், கம்பவுண்டர்களால் சகலவித வைத்திய உதவி.

தொழிலாளர் சிசுக்களுக்கு நல்ல உணவு, உடை, குளிப்பாட்டல் ஆகியவற்றை தேர்ச்சிபெற்ற நர்சுகள் மூலம் அளிக்க சிசு பராமரிப்பு விடுதி.

பெண் தொழிலாளர்க்கு பிரசவகால ஓய்வும், பண உதவியும்.

நல்ல உணவு, சிற்றுண்டி வகைகளை மலிவான விலையில் சப்ளை செய்ய நிர்வாகத்தினர் பொருளுதவியால் நடத்தப்பெறும் காண்டீன்.

குடும்ப தேவைகளுக்கான சாமான்களை மலிவான விலைகளில் கிடைக்கும்படி செய்ய மானேஜ்மெண்டாரின் உதவிபெற்று தொழிலாளர் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்பெறும் கூட்டுறவுப் பண்டக சாலை.

கட்டிட சாமான்கள் தாராளமாய்க் கிடைக்க வசதி ஏற்பட்டால் குடியிருப்பு வசதிகள் செய்துதர திட்டம் வகுக்கப்பெறும்.

ஏ. ஜி. குருசாமி நாயுடு & கோ.

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்.

தந்தி: 'ஆயில்மில்ஸ்'

போன்: 51
P. B. 151

ஸ்ரீ ரங்க விலாஸ்

ஜின்னிங் & ஆயில் மில்ஸ்

பாப்பநாயக்கன்பாளையம், கோயமுத்தூர்.

கோவை ஜில்லா விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி

உணவு தான்ய உற்பத்தியைப் பெருக்க, விவசாயிகளிடமிருந்து
காலே நெம்பர், இன்ன உணவுப் பயிர், இவ்வளவு ஏக்கர்
பயிர் செய்யப்பட்டுள்ளது ஆகிய விபரங்களடங்கிய
விண்ணப்பங்கள் பெற்று-**அமோனியம் சல்பேட்**-
ஜில்லா பூராவிலும் உள்ள எமது டிப்போக்
களிலிருந்து **சர்க்கார் நிர்ணய விலையில்**
வேண்டிய அளவுக்குத் தாராளமாய்
சப்ளை செய்து வருகின்றோம்.

●

பருத்தி மகசூல் அதிகப்படுத்த:—

விவசாய டிமான்ஸ்டிரேடரிடமிருந்து அத்தாக்ஷி பெற்று
பருத்தி உற்பத்திக்கு **அமோனியம் சல்பேட்**
பெற்றுக் கொள்ளலாம்.

●

கரும்புப் பயிருக்கு:—

ஆங்காங்குள்ள கரும்புப் பயிர் மேற்பார்வைக்கு நியமிக்கப்பட்
டுள்ள பிரத்தியேக விவசாய டிமான்ஸ்டிரேடர் அல்லது
குளித்தலை ஷுகர்கேன் **லெயிசன் பாரம் சூப்பரின்**
டண்டிடமிருந்து அத்தாக்ஷி பெற்று
அமோனியம் சல்பேட் பெற்றுக்கொள்ளலாம்.

தந்தி: "சுப்ரமணியா"

டெலிபோன் { ஆபீஸ் 176, பங்களா 146 }

ஸ்ரீ பாலசுப்பிரமணிய மில்ஸ் லிமிடெட்,

சிங்காநல்லூர், கோயமுத்தூர்.

(ஸ்தாபிதம் 1934)

★

- பிரக்யாதி பெற்ற மில்களில் உத்தமமானது இதுவும் ஒன்று
- இந்த மில்லில் குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே நிர்வாகஸ்தர்களது நோக்கம் - -
- இந்த மில்லில் கைத்தறிகளுக்கும் பவர் தறிகளுக்கும் உகந்த 30-நெ. முதல் 60-நெ. வரை ஒற்றை முறுக்கு நூல் தயாரிக்கப்பட்டு வருகின்றன - -

12,096 கதிர்கள் தொழில் செய்கின்றன.

★

தேசிய மூலதனம்
தேசிய தொழிலாளர்
தேசிய மேனேஜ்மெண்டு

ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெற்று வருகின்ற

தேசிய தொழில் ஸ்தாபனமாகும்.

ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரையிலும் பங்குதாரர்கட்கு நல்ல டிவிடெண்டு தரப்பட்டு வந்துள்ளது.

Sri Balasubramania Mills Limited,

Singanallur, Coimbatore.

Managing Agents & Secretaries:

K. Krishnaswamy Naidu & Brother.

Edited & Published by G. R. Damodaran, B. Sc., Elec., B. Sc., Mech. (Durham) A.M.I.E.E. (London) and Printed at the P. S. G. Industrial Institute Press, Peelamedu, P. O., Coimbatore.

டெலிபோன் நெ. 17

தந்தி: "ரங்கவிலாஸ்"

ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங், ஸ்பின்னிங்
அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட்.

(ஸ்தாபிதம் 1922-ல்)

ரிஜிஸ்டர் ஆபீஸ்: பூளமேடு, கோயமுத்தூர்.

முலதனம், ரூ. 16,00,000

வெளியிடப்பட்டு வசூலானது ரூ. 15,02,500.



வேலை செய்யும் மொத்த கதிர்கள் 30,000

2-ம் நெ. முதல் 100 நெ. வரை ஐவுளி நூல் தினுசுகள், பனியன் வகையராக்களுக்கு உபயோகப்படும் கோன் நூல் தினுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இன்னும் அதிக யந்திரங்களை வைப்பதற்கு கட்டிடங்கள் தயாராயிருக்கின்றன.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு பாங்கர்ஸ்:

பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ்,

பூளமேடு — கோயமுத்தூர்.

...தனம், இந்தியக் கைத்தொழிலாகிய

இந்த சுதேசித் தொழிலை ஆதரியுங்கள்

Telegrams: PIONEER. *Telephone: 160*

The Mills are situated at Peelamedu, Coimbatore and are equipped with 19,280 spindles. The mills specialise in the spinning of yarns from counts 40s to 80s carded and 100s combed.



Registered Office: *Managing Director:*

Peelamedu, Coimbatore. *G. R. Govindarajan.*

P. S. G. C. I. I. Press, Peelamedu, Coimbatore.